விலை: ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 31 கதிர் 015 வள்ளுவர் ஆண்டு 2046 கார்த்திகை 25, வெள்ளிக்கிழமை 11.12.2015

29°c - 29°c
மழைக்கான சாத்தியம் உண்டு

வெள்ளத்திலும் தலைவிரித்தாடும் சாதி
பக்கம் 14

மீண்டும் சூடு பிடித்துள்ள அவன்கார்ட் விவகாரம்
பக்கம் 12

## இயந்திர இழுவைப் படகுகளை தடை செய்வதற்குச் சட்டவரைவு

### சபையில் நேற்று சமர்ப்பித்தது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 11
இலங்கைக் கடற்பரப்பில் இயந்திர இழுவைப் படகுகளைத் தடை செய்யும் சட்டவரைவு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனினால் நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
இந்தச் சட்டவரைபைச் சமர்ப்பித்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், இந்த சட்டவரைவானது 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மீன்பிடி மற்றும் நீர் வளங்கள் சட்டத் தில் ருத்தங் களை வலியுறுத்தியுள்ளது.
இழுவை நடவடிக்கைகளுக்காக அனுமதி வழங்கும் சட்டங்களில் திருத்தங்களைக் கொண்டு வருதல், இலங்கைக் கடற்பரப்புக்களில் இழுவை நோக்கத்திற்காக இழுவை வலைகளை வைத்திருத்தல், கொள்வனவு செய்தல், இறக்குமதி செய் தலை தடை பக். 22



### இந்திய மீனவர்கள் 10 பேர் நேற்று கைதாகி மறியலில்

யாழ்ப்பாணம்,டிசெ.11
இலங்கைக் கடற்பரப்பில் அத்து மீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 10 பேர் பருத்தித்துறைக் கடற்பரப்பில் வைத்துக் கடற்படையினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். அவர்களை எதிர் வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.
தமிழ்நாடு காரைக்கால் மாவட்டத்தைச் சேர்ந்த 10 மீனவர்களும் பக். 22

## போர்க்குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் தண்டனை நிச்சயம்

### நேற்று அறிவித்தது அரசு



கொழும்பு, டிசெம்பர் 11
இலங்கையில் இனப்படுகொலை இடம்பெறவில்லை. எனினும், போர்க்குற்றச்சாட்டுகள் உரிய வகையில் நிரூபிக்கப்பட்டால் நிச்சயம் தண்டனை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு நேற்று அறிவித்தது.
அதேவேளை, இலங்கையின் ஆயுதப்படைகளைத் தரமுயர்த்துவதற்கு 6 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்டுகளை வழங்கியுள்ள பிரிட்டன், இதனைக் கண்காணிக்க டில்லியில் உள்ள தனது இராணுவ ஆலோச பக். 22

முச்சந்தி முரளி



அப்ப.. கனபேர் மாட்டப் போயினம் கண்டியளே.

### விசேட நீதிமன்றத்தின் முதல் அமர்வு நேற்று

கொழும்பு, டிசெ.11
தமிழ் அரசியல் கைதிகளின் விடயம் தொடர்பில் விசாரணை செய்யவென நியமிக்கப்பட்ட விசேட நீதிமன்றம் தனது முதலாவது அமர்வை நேற்று ஆரம்பித்தது.
இதன்போது தமிழ் அரசியல் கைதிகள் 3 பேரின் வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. எனினும் அரசியல் கைதிகள் சார்பாகச் சட்டத்தரணிகள் நேற்று முன்னிலையாகியிருக்கவில்லை.
செ.ஆனந்தவர்ணன், ப.புஸ்பராஜா, ச.தனயுகன் ஆகிய அரசியல் கைதிகள் மீதான விசாரணைகளே பக். 24

### வடமாகாண சபையை ஓரம்கட்ட அரசு முயற்சி

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைமையை ஒழிக்கவும் திட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 11
மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைமைப் பதவியை ஒழிப்பதற்கும் – மாகாண சபையை ஓரங்கட்டுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நல்லாட்சி அரசு அமைந்த பின்னரும் தமிழர்கள் எல்லாவற்றையும் கெஞ்சிப் பெறவேண்டும் என்ற மனநிலையில்தான் ஆட்சியாளர்கள் நடந்து கொள்வதாக,வடக்கு மாகாண பக். 23

### ஜனவரி வருகிறார் நோர்வே அமைச்சர்



கொழும்பு, டிசெ.11
நோர்வே வெளிவிவகார அமைச்சர் போர்கெ பிரண்டே அடுத்த மாத முதல் வாரத்தில் இலங்கைக்கு வருகிறார்.
இந்தப் பயணத்தின் போது, அவர் பக். 22

### வடக்கு மக்களின் காணிகளை அபகரிக்கும் திணைக்களங்கள்

வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 11
சூழலியல் மேலாதிக்கத்தின் காரணமாக வனபரிபாலன திணைக்களம் – வனஜீவராசிகள் திணைக்களம் என்பன, வடக்கு மக்களுடைய காணிகளைத் தன்னிச்சையாக அபகரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.
இதனை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று வடக்கு மாகாண சபையின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குறிப்பிட்டனர்.
வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், வவுனியா பக். 22

### திறைசேரியின் ஊடாகவே மாகாண சபைகளுக்கு நிதி

புதிய திட்டத்தை மீளப்பெறுவதாக முதலமைச்சர்களிடம் ஜனாதிபதி உறுதி

யாழ்ப்பாணம், டிசெ. 11
மாகாண சபைகளுக்கு கடந்த காலங்களில் வழங்கப்பட்டதைப்போன்று திறைசேரியின் ஊடாகவே அடுத்த ஆண்டும் நிதி வழங்கப்படும் என்றும், மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சினூடாக அவற்றை வழங்குவதற்கு வரவு–செலவுத் திட்டத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மீளப் பெற்றுக் கொள்வதாகவும் ஜனாதிபதி மைத்திரி பக். 24

### மனித உரிமையை மதிப்பதானால் தமிழருக்குத் தீர்வை வழங்குங்கள்

அப்போதுதான் இந்தத் தினம் இலங்கைக்கு பொருந்தும் என்கிறார் வடக்கு முதலமைச்சர்

யாழ்ப்பாணம், டிசெ. 11
தமிழ் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமைத் தத்துவத்தின் அடிப்படையில் நிரந்தரத் தீர்வை வழங்கினால் மாத்திரமே, இலங்கை அரசு தாம் மனித உரிமையைப் பேணுபவர்கள் என்று மார்தட்டிக் கூற முடியும். அப்பொழுதுதான் சர்வதேச மனித உரிமைகள் தினம் இலங்கைக்குப் பொருந்தும் ஒரு தினமாக ஏற்றுக் கொள்ளப்படலாம்.
இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
வடக்கு மாகாண சபையின் அமர்வு, சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று இடம் பெற்றது. இந்த அமர்வில் கலந்து கொண்டு, சர்வதேச மனித உரிமைகள் தினத்துக்கான விசேட பக். 22

### பலவந்தமாகக் காணாமற்போதல் சாசனத்தில் இலங்கை கைச்சாத்து

அனைத்துப் பிரஜைகளுக்கும் பாதுகாப்பு என்கிறது அரசு



கொழும்பு, டிசெ.11
பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுவதில் இருந்து அனைவரையும் பாதுகாப்பது தொடர்பிலானஐநா.சர்வதேச சாசனத்தில் இலங்கை அரசுகையொப்பமிட்டுள்ளது. வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர முன்வைத்த குறித்த தீர்மானத்துக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. பக். 25

### பேச்சுக்கு ஐ.நா.வின் மத்தியஸ்தம் கோரும் தீர்மானம் நிறைவேறியது

வடக்கு மாகாண சபையில் நேற்று

யாழ்ப்பாணம், டிசெ. 11
இலங்கை அரசுக்கும், தமிழ்த் தலைவர்களுக்கும் இடையில் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்கு மத்தியஸ்தம் வகிப்பதற்கு ஐ.நா. சபையைக் கோரும் பிரேரணை வடக்கு மாகாண சபையில் நேற்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.
இந்தப் பிரேரணை கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சபையில் எடுக்கப்பட்டு வழிமொழியப்படாத நிலையில் கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. பக். 22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் தின நிகழ்வுகள் நேற்று வடக்கின் பல பாகங்களிலும்

யாழ்ப்பாணம், டிசெ.11

சர்வதேச மனித உரிமைகள் தினம் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. அதை முன் னிட்டு வடக்கு மாகாணத்தில் பல இடங் களிலும் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், பேரணிகள் நடத்தப்பட்டன.



மன்னார்

**யாழ்ப்பாணம்**

வடக்கு மாகாண சபை அமர்வு நேற்று நடைபெற்ற நிலையில் அங்கும் மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு கவன வீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. உறுப்பினர்கள் பதாகைகளைத் தாங்கியவாறு கனவீர்ப்பில் ஈடுபட்டனர். ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இணைந்து இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் போது தமிழ் மக்களின் தீர்வுக்கும், உரிமைகளுக்கும் வழி செய்யமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

அமர்வின் ஆரம்பத்தில் வடக்கின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மனித உரிமைகள் விடயம் தொடர்பாக சிறப்புரையையும் வழங்கினார். தேநீர் இடைவேளைக்குப் பின்னர் அமர்வுக்கு வந்த உறுப்பினர்கள் பதாகைகளைத் தாங்கியவாறு எழுந்து நின்று கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். தமிழ் மக்களின் உரிமைகளை உறுதிசெய், தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்து, காணாமல் போன இருபது ஆயிரம் பேரின் நிலைக்கு பதில் கூறு, சரணடைந்த போராளிகளின் மனைவி பிள்ளைகள் எங்கே?,



தமிழ் இனப்படுகொலைக்கு பதில் கூறு, எமது தாயகத்தில் தமிழ் மக்களிடம் அபகரித்த நிலங்களை எம்மிடம் தா?, சுவீகரிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்து, போரில் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்கு சர்வதேசம் நடவடிக்கை எடுக்க வேண்டும், எமது தாயகத்தில் இயல்பு நிலை திரும்ப படையினரை மீளப்பெறு போன்ற வாசகங்கள் அவர்கள் ஏந்தியிருந்த பதாகைகளில் காணப்பட்டன.

யாழ்.மாவட்ட சர்வமதப் பேரவையின் ஏற்பாட்டில் யாழ். மத்திய பஸ் நிலையம் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அதில் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

அங்கு கருத்துத் தெரிவித்த சர்வ மதத் தலைவர்கள், இந்தக் கவனவீர்ப்புப் போராட்டமானது இன்றைய சர்வதேச மனித உரிமை தினத்தை முன் னிட்டு மனித உரிமைகள் பற்றிய அறிவை வெளிப்படுத்துகின்றது. அத்துடன் மனித உரிமை மீறல்கள் நடைபெறும் சந்தர்ப்பத் தில் அனைவரும் தற்துணிவைப் பேணி இன, மத, மொழி வேறுபாடின்றி சட்ட நடவடிக்கைகளை மேற்கொள் ளக்கூடிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலேயே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. - என்று குறிப்பிட்டனர்.

சமகாலத்தில் பேசப்படுகின்ற முக்கியவிடயமாக மனித உரிமைகள் உள்ளது. ஐ.நா.வால் மனித உரிமைகள் பிரகடனம் வெளியிடப்பட்டு 50 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் உலகெங்கும் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்தபடியே உள்ளன. மனித உரிமைகள் பற்றிய போதிய அறிவே எமது உரிமை மீறல்கள் தொடர்பில் விழிப்புடன் செயற்பட உதவும். இது தொடர்பிலான அறிவைப் போதிப்பது எமது கடமை. மனிதன் கௌரவமாக வாழ்வதற்கு மனித உரி மைகள் அவசியமானவை. மனிதனை மனிதன் ஒடுக்குவதில் இருந்து பாதுகாத்துக் கொள்ளவும், இன ஒதுக்கல்கள் தொடர்ந்து நிகழாமல் இருக்கவும் கடுமையான தண்டனைகள், மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றில்இருந்துமனிதனைக் காக்கவும் மனித உரிமைகள் அவசியமா கின்றன. மக்கள் தமது உரிமைகள் பற்றி அறிந்துகொள்வதுடன் உரிமைகள் மீறப் படும் சந்தர்ப்பங்களில் தற்துணிவுடன் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும். - என்று அங்கு வெளியிடப்பட்ட அறிக் கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.



யாழ்ப்பாணம்

இந்தப் போராட்டத்தில் சர்வ மதப் பொது மக்கள், சர்வமதகுழு அங்கத்தவர்கள், சர்வ மதத் தலைவர்கள், அரச உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

**கிளிநொச்சி**

கிளிநொச்சியில் சர்வதேச மனித உரிமை



கிளிநொச்சி

கள் நாள் நிகழ்வுகள் வடகிழக்கு ஜனநாயகத்திற்கும் நீதிக்குமான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்றன. நிகழ்வுகள் அமைப்பின் தலைவர் அ.சத்தியானந்தம் தலைமையில் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில் 'சரிநிகர் சமனாக வாழ்வோம் இந் நாட்டிலே' என்னும் தொனிப் பொருளில் நடைபெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக பொறியியல்பீட குடிசார் எந்திரவியல் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலா நிதி எஸ்.எஸ். சிவகுமாரும் கலந்துகொண்டு மனித உரிமைகளை வலியுறுத்தி கருத்துரைகளை வழங்கினார்.

நிகழ்வில் 'மனித உரிமைகளும் வாழ்வியலும்' என்னும் தலைப்பில் அருட் தந்தை எஸ்.பி.செல்வனும் 'மனித உரிமைகளும் மக்கள் அரசியலும்' என்னும் தலைப்பில் தமிழ் சிவில் சமூகத்தின் இணைச்செயலா ளர் பி.என்.சிங்கமும் கலந்துகொண்டு கருத்து ரைகளை வழங்கினர்.

மனித உரிமைகள் ஆர்வலர்களும் தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள், ஆசிரியர்கள், அதிபர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அமைப்பின் தலைவர் அ.சத்தியானந்தம் கருத்துத் தெரிவிக்கையில்- திட்டமிட்டபடியேதமிழ் மக்கள் மீது மனித உரிமை மீறல் நடத்தப்பட்டுள்ளது. முள்ளிவாய்க் காலில் எமது விடுதலைப் போராட்டம் மௌனிக்கப்பட்டுள்ளது. இரும்புப் கரம் கொண்டு தோற்கடிக்கப்பட்டுள்ளது. பண்டார வன்னியன் விழுந்த அதே மண்ணில் எமது போராட்டமும் விழுத்தப்பட்டுள்ளது. எங்கள் தேசியத்தின் அடையாளம் சிதைப்பதற்கென அரசு நீண்ட நாள்கள் செயற்பட்டு தங்கள் நடவடிக்கையில் வெற்றி பெற்றுள்ளது. எங்கள் மக்கள் இன்றும் சுதந்திர தாகம் அடங்காமல் துடித்துக் கொண்டுள்ளனர். உலக நாகரிகத்துக்கு பொருந்தாதவற்றை அரசு கட்டவிழ்ப்புச் செய்கின்றது.- என்றார்.

**வவுனியா**

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் பேரணி நடத்தப்பட்டது. அதில் வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு, புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சி, அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அமைப்பு, நவசம சமாஜக்கட்சி, காணாமற்போனோரை தேடி கண்டறியும் குழு மற்றும் சிவில் அமைப்புக்கள் ஆகிய இணைந்து நடத்திய பேரணியில் காணாமற்போனோர் பிரச்சினைக்குத் தீர்வு மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலை என்பன வலியுறுத்தப்பட்டன.

பேரணியின் முடிவில் முத்தையா மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது. நிகழ்வுகளில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி னர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மு.ப. 11.20 மணியளவில் மண்டபத்தில் தமது காணாமற்போன உறவுகளுக்காக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் காணாமற்போனவர்களின் உறவுகள், பொது மக்கள், சர்வ மதகுருக்கள் ஆகியோர் சுடர் ஏற்றிப் பிரார்த்தித்தனர்.

அத்துடன் வவுனியாவில் மொழி உரிமையை அர்த்தமுள்ளதாக்குதல் விழிப்புணர்வு நிகழ்வும் நடத்தப்பட்டது. மனித உரிமைகள் தினமான இன்று (நேற்று) அரச கரும மொழிகளான தமிழ் மற்றும் சிங்கள மொழியையும் எல்லாத் துறைகளிலும் இடம்பெறச் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி மாவட்ட மொழிச்சங்கங்கள், பிரஜைகள் சபை, கிராம முகாமைத்



வவுனியா

துவத்திற்கான நிறுவனங்களின் சம்மேளனம், மாற்றுக் கொள்கைகளுக்கான நிறுவனம் என்பன இணைந்து வவுனியா மாவட்டத்தில் உள்ள முக்கியமான மக்கள் சேவையை வழங்கும் இடங்களிலும் மொழி உரிமையை வலியுறுத்தி விழிப்புணர்வு நிகழ்வாக துண்டுப்பிரசுரம் விநியோகித்த லும் ஸ்ரிக்கர் ஒட்டும் நிகழ்வும் நடை பெற்றன.

**மன்னார்**

மன்னாரில் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் கவனவீர்ப்புப் பேரணி நடைபெற்றது. மு.ப 10.30 மணியளவில் மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியில் இருந்து ஆரம்பமான கவனவீர்ப்புப் பேரணியில் காணாமல் போன, கடத்தப்பட்டவர்களின் உறவினர்கள்,போரால் பாதிக்கப்பட்டவர்கள், காணாமல் போனவர்களது பிள்ளைகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

பேரணி பிரதான வீதியூடாக மன்னார் பஸார் பகுதியை சென்றடைந்தது. பேரணியில் கலந்துகொண்டவர்கள் பதாகைகளை ஏந்தியவாறு மன்னார் மாவட்டச் செயலக பிரதான வீதிக்கு முன் நின்றனர். அரசியல் பிரமுகர்கள், அருட் தந்தையர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலர் அதில் கலந்து கொண்டிருந்தனர்.

அத்துடன் மன்னார் மாவட்ட பிரஜைகள் சபை ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பேரணியும் மனு கையளிப்பும் இடம் பெற்றது. 'மது பாவனையற்ற மனித சமுதாயத்தை உருவாக்குவோம்' எனும் கருப்பொருளில் நடைபெற்ற இந்தப் பேரணி மனு கையளிப்புடன் நிறைவடைந்தது.

(ற-10,ரி3,ரி5,ரி6,ரி7,101,106,56,426)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள் முரண்பாடுகளால் கட்சி உடையக்கூடாது

## வடக்கு முதலமைச்சரிடம் நேற்று வலியுறுத்தினார் இந்தியத் தூதுவர்

யாழ்ப்பாணம், டிசெ. 11
உங்களுக்குள் உள்ள முரண்பாடு காரணமாகக் கட்சி உடையக் கூடும் எனக் கொழும்பில் உள்ளவர்கள் கருதுகின்றனர். இதனால் எந்த விதத்திலும் எப்பொழுதும் பிரிந்துபோகும் நிலைக்கு வரக்கூடாது என வடக்கு மாகாண முதலமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளார் இந்தியத் தூதுவர் வை.கே. சிங்ஹா.



அத்துடன், தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு என்ற புதிய அரசியல் யாப்பை உருவாக்க நடவடிக்கை இடம்பெறுகின்றது. அதற்கு ஒத்துழைப்பு வழங்கி அரசியல் யாப்பில் என்ன நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியுமோ அவற்றைப்பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இரு நாள் பயணமாக யாழ்.குடாநாட்டுக்கு வருகைதந்த இந்தியத் தூதுவர் சின்ஹா, நேற்று மாலை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பின் நிறைவில் இது குறித்துக் கருத்து வெளியிட்ட முதலமைச்சர், இந்தியத் தூதுவர் மேற்கண்டவாறு தன்னிடம் வலியுறுத்தியதாகக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அனைவரும் ஒருமித்து செயலாற்றவேண்டும். உங்களுக்குள் உள்ள முரண்பாடுகளைப் பிறர் அறிந்தால் அதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவர். உங்களுக்குள் உள்ள முரண் பாட்டின் காரணமாகக்கட்சி உடையக் கூடும் எனக் கொழும்பில் உள்ளவர்கள் கருதுகின்றனர். அதனால் எந்த விதத்திலும்–எப்பொழுதும் பிரிந்து போகும் நிலைக்கு வரக்கூடாது என்று இந்தியத்தூதுவர்என்னிடம் எடுத்துரைத்தார்.

இதற்குப் பதிலளித்த நான், அரசியல் யாப்பு உருவாக்கம் தொடர்பிலும், எமது பிரச்சினைகள் தொடர்பிலும் எமக்குப் போதிய அறிவும் அனுபவமும் உண்டு. அவற்றை உரியவாறு தெரியப் படுத்துவோம். இதற்கு வெளிப் படையாக நடக்கவேண்டும்.

கருத்து முரண்பாடு என்பது கொள்கை ரீதியிலானதே அன்றி வேறு ஏதும் கிடையாது. கட்சி உடைந்து போகக் கூடும் என்பதில் எந்த உண்மையும் இல்லை. எந்த விதத்திலும் – எப்பொழுதும் பிரிந்து செல்லும் நிலைக்கு வரக் கூடாது. அதை நானும் வரவேற்கிறேன் என்று பதிலளித்தேன்–என்றார். (த–101,106)

## யாழிலிருந்து மருத்துவர்கள் குழு ஞாயிறன்று தமிழகம் புறப்படுகிறது

### யாழ்.றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில்



யாழ்ப்பாணம், டிசெ.11
தமிழகத் தலைநகர் சென்னை மற்றும் கடலூர் பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, அதன் தொடர்ச்சியாக வரக்கூடிய நோய்களில் இருந்து பாதுகாக்கும் முகமாக யாழ்ப்பாணத்திலிருந்து மருத்துவர்கள் குழு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பிலிருந்து தமிழகத்துக்குப் புறப்படுகிறது.

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் தமிழகத்துக்கு செல்லும் இந்த மருத்துவர்கள் குழு, எதிர்வரும் 14ஆம் திகதி திங்கள்கிழமை முதல் சென்னை மற்றும் கடலூர் மாவட்டங்களில் தொடர்ச்சியாக இலவச மருத்துவ முகாம்களை நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.

இந்தப் பயணத்திற்கான ஏற்பாடாக நேற்றுமுன்தினம் மருத்துவர்கள் குழுவின் ஒருபகுதியினர் யாழ். இந்தியத் துணைத்தூதுவர் நடராஜனை சந்தித்தனர். இதன்போது விசா மற்றும் பயண ஏற்பாடுகள் தொடர்பாகவும் தமிழ்நாட்டில் நடாத்தவுள்ள மருத்துவ முகாம்களுக்கான ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப் பட்டது.

இதன்போது, யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் இந்த முயற்சியை வரவேற்ற இந்திய துணைத்தூதுவர், இந்திய மத்திய அரசின் கொள்கையின் பிரகாரம் அனர்த்த நிவாரணத்திற்கான உதவிகள் எதனையும் தன்னால் நேரடியாக பெற்றுக்கொள்ள முடியாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் றோட்டறிக் கழகம் போன்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஊடாக தேவையானவற்றினை இங்குள்ளவர்கள் தமிழகத்திலுள்ள பாதிக்கப்பட்ட மக்களிற்கு செய்யமுடியும் எனவும் இந்திய துணைத்தூதுவர் நடராஜன் சுட்டிக்காட்டியுள்ளார். (வ)

# மனுதாரர் கூறும் 12 பேரையும் நாம் கைது செய்யவேயில்லை

## ஆட்கொணர்வு மனு விசாரணையில் ராணுவக் கட்டளைத் தளபதி தெரிவிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 11
முல்லைத்தீவு நீதிமன்றில் விசாரணையிலுள்ள, காணாமற்போனவர்கள் தொடர்பான ஆட்கொணர்வு மனு மீதான விசாரணையில் குறிப்பிடப்படும் 12 பேரையும், தாம் கைது செய்யவுமில்லை. அவர்கள் தம்மிடம் ஒப்படைக்கப்படவுமில்லை என்று முல்லைத்தீவு மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கவீந்திர சாணக்கிய குணவர்த்தன தெரிவித்தார்.

ஆட்கொணர்வில் பெயர் குறிப்பிடப்படும் முதலாவது நபர் பற்றிய குறிப்பு எதுவுமே தம்மிடம் இல்லை என்றும் அவர் நீதிமன்றில் நேற்றுத் தெரிவித்தார். முல்லைத்தீவு நீதிமன்றில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

2009 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் புலிகளின் கட்டுப்பாட்டினுள் இருந்து இடம்பெயர்ந்து இராணுவக் கட்டுப்பாட்டினுள்சென்றுகொண்டிருந்தபோது ஒப்படைக்கப்பட்டவர்களில் குறித்த நபர்களும் உள்ளடங்குகின்றனர். அவ்வாறு ஒப்படைக்கப்பட்டுக் காணாமற்போனவர்களில் 12 பேர் சார்பாக அவர்களது உறவுகள் ஆட்கொணர்வு மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

அந்த ஆட்கொணர்வு வழக்கில் இதுவரை காலமும் முறைப்பாட்டாளர்களின் – சாட்சிகளின் சாட்சியம் பதிவு செய்யப்பட்டு வந்தது. அவர்களது சாட்சியப் பதிவு நிறைவடைந்திருந்த நிலையில், ஆட்கொணர்வில் எதிராளிகளாகக் குறிப்பிடப்படும் நபர்களில் முல்லைத்தீவு மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியும் உள்ளடங்குகிறார். அவ்வாறு எதிராளிகள் சார்பான சாட்சியப் பதிவே நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட 58 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியான குறித்த இராணுவத் தளபதி ஆட்கொணர்வு தொடர்பில் சாட்சியமளிப்பதற்காக நீதிமன்றுக்கு நேற்று வந்திருந்தார். ஆட்கொணர்வில் குறிப்பிடப்படும் 12 பேரில் முதலாவது நபர் தொடர்பான எதிரி தரப்புக் குறுக்கு விசாரணைகளின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது சாட்சியத்தில், ஆட்கொணர்வு மனுவில் காணாமல் ஆக்கப்பட்டதாகக் கூறப்பட்டவர்களில் முதலாவதாகப் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் நபர் பற்றியோ அவரது பெயரோ தமது அறிக்கையில் இல்லை.

தான் வடக்கு, கிழக்கு, வடமேற்கு பகுதிகளில் கடமையாற்றியதாகவும், இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இராணவம் தொடர்பாக தனக்குத் தேவையான சிறந்த கற்கைகளைப் பூர்த்தி செய்ததன் பின்னர் முல்லைத் தீவு மாவட்டத்தின் 58 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாகப் பொறுப்பேற்றதாகவும் தெரிவித்தார்.

ஆட்கொணர்வில் தாக்கல் செய்யப்பட்ட முதலாவது நபரின் பெயரை வைத்து தனது ஆவ ணங்களைப் பரிசீலித்தபோது அவ்வாறான பெயரோ, நபரோ தமது அறிக்கையில் இல்லை என்று தனது சாட்சியத்தில் அவர்மேலும்தெரிவித்தார். அதுதவிர 2012 ஆம் ஆண்டின் பின்னரே தான் பதவிக்கு வந்ததாகவும் சாட்சியமளித்தார்.

2009 ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டக் கட்டளைத் தளபதியாக இருந்த இராணுவத் தளபதியோ, வேறு அதிகாரிகள் எவருமே நேற்று நீதிமன்றில் பிரசன்னமாகி இருக்கவில்லை.

குறித்த வழக்கில் சட்டத்தரணிகளான கே.ரட்ணவேல், கணேஸ்வரன் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர். சரியான மொழிபெயர்ப்பாளர் நீதிமன்றுக்கு நேற்றுச் சமுகமளிகக்காத காரணத்தால் இந்த ஆட்கொணர்வு மனு மீதான விசாரணை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (த–4–21)



காணாமற்போனோர் பற்றிய தகவல்களை வெளியிடுமாறு கோரிச் சம உரிமை இயக்கம் கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தியது. இதில் பெரும் எண்ணிக்கையானோர் பங்கேற்றனர். (த–4)

# கப்பம் கோரி மிரட்டிய இளைஞன் விளக்கமறியலில்

சாவகச்சேரி பெண்ணொருவரின் படத்தை இணையத்தளத்தில் பதிவேற்றுவேன் என மிரட்டி கப்பம் கோரிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞனை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டார்.

அத்துடன் குறித்த சந்தேக நபருக்கு உதவி புரிந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர் தற்போது நடைபெற்று வரும் ஜி.சி.ஈ சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றுவதனால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த இளம்பெண், தொலைபேசி மூலம் அறிமுகமான இளைஞருடன் நீண்ட நாள்களாக பழகி வந்துள்ளார். இந்நிலையில் இந்த இளைஞனுக்கு யுவதி அனுப்பிய புகைப் படத்தை முகநூலில் பதிவேற்றம் செய்யவுள்ளதாக மிரட்டி 30 ஆயிர[illegible] கோரிய குற்றச் சாட்டி[illegible] சாவகச்சேரி [illegible]ால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ– 9)

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 433
சீட்டிழுப்பு திகதி 2015.12.10
வெற்றி இலக்கங்கள்
06 20 33 63 W
ரூ. 45,440,060/=

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1218
சீட்டிழுப்பு திகதி 2015.12.10
வெற்றி இலக்கங்கள்
25 34 43 53 W
ரூ. 36,571,380/=

பாடசாலை சீருடைத்துணி விநியோகம் - 2016
ஆல் சிலோனின் மற்றுமொரு பரிணாமம்....
கல்வி அமைச்சின் வவுச்சர்களுக்கு தரமான சீருடைத்துணி எம்மால் விநியோகிக்கப்படுகின்றது. அதற்கான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
Mega Sale
ஒரே கூரையின் கீழ் அனைத்து சர்வதேச தரம்வாய்ந்த ஸ்ரேசனறிப் பொருள்களையும் பெற்றிடலாம்.
10% - 30% வரை விலைக்கழிவு
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
இல.212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5542, 021 222 7983 acdil@ymail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## 2016ஆம் ஆண்டுக்கான ஆதனவரி

## அறிவித்தல்

நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 255ஆம் அத்தியாயத்தின் கீழ் உரிமையளிக்கப் பட்டுள்ள அதிகாரங்கள் சார்பில் பின்வருமாறு முடிவு செய்திருப்பதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

01. கட்டளைச் சட்டத்தின் 160(3)ஆம் பிரிவின் நியதிப்படி சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் பரிபாலன எல்லைக்குட்பட்டு அமைந்திருக்கும் நெற்காணிகள் தவிர்ந்த சகல அசையாச் சொத்துக்களிலிருந்தும் வருடாந்தப் பெறுமதியின் 10%மான வரியொன்றினை 2016ஆம் ஆண்டு முறையே மார்ச்31, யூன்30, செப்ரெம்பர்30, டிசம்பர்31 ஆகிய திகதிகளிலோ அல்லது அதற்கு முன்போ நான்கு கந்தாய தவணைகள் மூலம் செலுத்தப்படவேண்டும்.
02. 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் நாளில் அல்லது அதற்கு முன்னர் வருடாந்த விகிதங்கள் முழுமையாகச் செலுத்தப்பட்டால் 10% கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் விகித வருமதியாகவுள்ள அக்கந்தாயத்திற் குரிய முதல் மாதத்திற்குள்ளாக கந்தாய விகிதம் செலுத்தப்பட்டால் 5% கழிவும் அனுமதிக்கப்படும்.
03. மேற்சொல்லப்பட்ட பந்தி ஒன்றின் பிரகாரம் சொல்லப்பட்ட காலங்களில் விகிதங்கள் செலுத்தப்படாதவிடத்து வெற்றுக்காணிகள், வதிவிடங்கள் மீது 15%மும் மற்றும் ஏனைய இடங்கள் மீது 20%மும் விறாந்துக்கட்டணம். அறவிடப்படும்.
04. ஆதனவரி சார்பாக சகல ஆட்சேபனைகளும் ஒவ்வொரு ஆதனத்துக்கும் தனித்தனியாக 31.01.2016 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் இந்த அலுவலகத்தில் சமர்ப்பிக்கும்படி அன்புடன் வேண்டப்படுகின்றீர்கள்.

கா.சண்முகதாசன்
செயலாளர்
நகராட்சி மன்றம் சாவகச்சேரி.

நகராட்சி மன்றம்
சாவகச்சேரி.
09.12.2015


# ரோஸி சேனநாயக்கவின் மனு; பெப்ரவரி 23இல் விசாரணை

கொழும்பு, டிசெ.11

கடந்த நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களின் விருப்பு வாக்குகளை மீளவும் எண்ண வேண்டும் என முன்னாள் இராஜாங்க அமைச்சரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான திருமதி ரோஸி சேனநாயக்க தாக்கல் செய்துள்ள அடிப்படை மனித உரிமை மீறல் மனுவின் மீதான அடுத்த விசாரணை அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படுமென உயர் நீதிமன்றம் கடந்த 30ஆம் திகதி அறிவித்துள்ளது.

ரோஸி சேனநாயக்கவின் இந்த மனு கடந்த 30ஆம் திகதி உயர்நீதிமன்ற நீதியரசர்களான சந்திரா ஏக்கநாயக்க, சிசிர டீ ஆப்ரூ மற்றும் அனில் குணரத்ன ஆகியோர் அடங்கிய ஆயத்தின் முன் விசாரணைக்கு எடுக்கப்பட்ட பின் மறு விசாரணை பெப்ரவரி 23இற்கு ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதி நடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட தான் நிச்சயம் வெற்றிபெற்றிருக்க வேண்டும். எனினும், வாக்குகளை எண்ணும்போது மோசடிகள் நடந்துள்ளதால் தனது வெற்றிவாய்ப்பு நழுவிப் போயுள்ளதாகவும், எனவே, காழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்ட வேட்பாளர்கள் பெற்ற சகல வாக்குகளையும், விருப்பு வாக்குகளையும் மீண்டும் எண்ணுமாறு உயர் நீதிமன்றம் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்க வேண்டுமென ரோஸி சேனநாயக்க தனது மனுவில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன், இத்தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட 11 தொடக்கம் 13 வரையிலான மனுவின் பிரதிவாதிகள் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் அல்லர் எனவும் அவர் தனது மனுவில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (கு)

# 16 வயதுச் சிறுமி வன்புணர்வு: எதிராளிக்கு 30 வருடச் சிறை

கொழும்பு, டிசெ.11

16வயதுக்குக் குறைந்த சிறுமியொருவரை அடுத்தடுத்து மும்முறை வல்லுறவுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டின்பேரில் தங்காலை மாகாண மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட 31வயதான விவாகமாகாத நபரொருவருக்கு 30 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து தங்காலை மேல் நீதிமன்ற நீதியரசர்கள் திருமதி சுஜாதா அழகப்பெரும தீர்ப்பளித்துள்ளார்.

அத்துடன், குற்றவாளிக்கு 6 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஒரு லட்சம் ரூபாவை நட்டஈடாக வழங்க வேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டது.

மித்தெனிய, ஹுங்கம, கோங்கஹாவத்த பிரதேசத்தைச் சேர்ந்த வசந்த பிரதீப் குமார எனும் இந்த நபர் 2006/11/01 தொடக்கம் 2007/02/16 வரையிலான காலப்பகுதியிலும் 2007/02/17ஆம் திகதியும், 16 வயதுக்குக் குறைந்த பராயத்திலிருந்த சிறுமியை மூன்று தடவைகள் வல்லுறவுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் சட்டமா அதிபரால் இந்த வழக்கு தொடரப்பட்டிருந்தது.

நீண்டகாலமாக நடந்துவந்த இந்த வழக்கின் முடிவில் எதிராளியின் மீது சுமத்தப்பட்டிருந்த மூன்று குற்றச்சாட்டுகளும் சந்தேகமற நிரூபிக்கப்பட்டதால் ஒரு குற்றச்சாட்டுக்கு பத்து வருடங்கள் வீதம் மொத்தமாக 30 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

(கு)


# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்

## மீள் கேள்விஅறிவித்தல் - 2016

கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி:- 2015.12.11– 2015.12.22 பி.ப 03.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி:- 2015.12.23 ந.ப 12.00 மணி வரை
கேள்வி திறக்கும் திகதி: 2015.12.23 பி.ப 01.30 மணி

2016 ஆம் ஆண்டு சந்தைகள், இறைச்சிக் கடைகளுக்கான குத்தகை அட்டவணை

| இல | சந்தைகள் (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையத்துடன்), இறைச்சிக் கடைகள் கருவாட்டுக் கடைகள் | மாத வாடகை சபைக்கு செலுத்த வேண்டியது | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT, NBT நீங்கலாக) | கேள்விப் பிணைப் பணம் மீளளிக்கக் கூடியது | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (VAT, NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| சுழிபுரம் உபஅலுவலகம் | | | | | |
| 01 | தொல்புரம் மத்தியசந்தை | | 7,875.00 | 500.00 | 250.00 |
| 02 | பொன்னாலைச் சந்தை (மூளாய்) | | 367,500.00 | 2000.00 | 750.00 |
| 03 | பல்லசுட்டிச் சந்தை | | 42,525.00 | 1,000.00 | 250.00 |
| சங்கானை உப அலுவலகம் | | | | | |
| 01 | சங்கானை கருவாட்டுக்கடை | 1,500.00 | 11,550.00 | 1000.00 | 250.00 |
| 02 | சங்கானை கோழி இறைச்சிக்கடை இல 01 | 1,500.00 | 355,000.00 | 3000.00 | 750.00 |
| வட்டுக்கோட்டை உப அலுவலகம் | | | | | |
| 01 | வட்டுக்கோட்டை பொதுச்சந்தை | | 37,086.00 | 1000.00 | 500.00 |
| 02 | சங்கரத்தை சந்தை | | 150,999.00 | 3000.00 | 750.00 |
| சங்கானை உப அலுவலகம் | | | | | |
| 01 | சங்கானை மரக்கறிச்சந்தை (துவிச்சக்கர வண்டிபாதுகாப்பு நிலையம் தவிர்த்து) | | 5,899,425.00 | 15000.00 | 1000.00 |

மேலதிக விவரங்களை 11.11.2015ஆம் திகதிய தினக்குரல் மற்றும் உதயன் பத்திரிகைகளில் பார்வையிடவும்.

திருமதி.சா.உருத்திரசம்பவன்,
செயலாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேசசபை
சுழிபுரம்.
11.12.2015


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## அறிவித்தல்
## கூறுவிலை

யாழ்.மாநகர சபையின் பண்ணையிலுள்ள கொல்களத்தில் இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகளை பரிசீலனை செய்து அனுமதி வழங்கு வதற்கான கூறுவிலைகள் பதிவு செய்யப்பட்ட மிருக வைத்திய அதிகாரிகளிடமிருந்து கோரப்படுகின்றன. கூறுவிலைகளை சமர்ப்பிப்பதற்கான விண்ணப்பப்படிவத்தை ரூபா 500.00(வரி நீங்கலாக) செலுத்தி நானாவித இறைவரிப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம். கூறுவிலைப்படிவத்தில் தங்களால் கோரப்படும் பரிசோதனைக் கட்டணத்தினை குறிப் பிட்டு (எழுத்தினாலும்)18.12.2015ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக **" ஆணையாளர், யாழ். மாநகர சபை"** என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
09.12.2015

பொ. வாகீசன்
ஆணையாளர்,
யாழ். மாநகர சபை.



## நல்லூர் பிரதேச சபையின் வரவு செலவுத்திட்டம் மக்கள் பார்வைக்கு

1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட நல்லூர் பிரதேச சபையின் 2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இதனை கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் 11.12.2015 ஆம் திகதியிலிருந்து 18.12.2015 ஆம் திகதி வரை பார்வையிடலாமென சபையின் செயலாளர் திருமதி தி.அன்னலிங்கம் தெரிவித்துள்ளார்.

- தலைமை அலுவலகம் - கருவப்புலம் லேன் கொக்குவில்.
- நல்லூர் உப அலுவலகம் - ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
- கொக்குவில் உப அலுவலகம் - பிறவுன் வீதி கொக்குவில்.
- பொது நூலகம் கோண்டாவில். - ஆஸ்பத்திரி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
- பொது நூலகம் கொக்குவில் - பிறவுண் வீதி, கொக்குவில்
- பொது நூலகம் நல்லூர் - கலாசாலை வீதி திருநெல்வேலி.

திருமதி தி .அன்னலிங்கம்.
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

(சி.20728) (13.15)

# சாவகச்சேரி நகர்ப் பகுதியில் பட்டாசு வெடிப்பதற்குத் தடை

## நகர சபை அறிவிப்பு

சாவகச்சேரி, டிசெ.11
சாவகச்சேரி நகரப் பகுதியில் பட்டாசுகள் பெருந்தொகையில் வெடிக்க வைப்பது நகரசபையால் தடை செய்யப்பட்டுள்ளது. இந்தத் தடையை மீறுவோர்மீதுசட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று நகரசபையின்செயலாளர் கா.சண்முகதாசன் அறிவித்துள்ளார்.
சாவகச்சேரி வைத்தியசாலை தொடக்கம் சாவகச்சேரி நகரசபையின் பொன் விழா மண்டபம் வரையான பகுதிகளில் பட்டாசு வெடிக்க வைக்கத் தடை செய்யப்பட்டுள்ளது.
நகரசபையின் 2011 ஆம் ஆண்டு தீர்மானத்தின் பிரகாரம் நகரப் பகுதியில் பட்டாசு வெடிக்க வைப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டது. தற்போது இந்தத் தடையை மீறி இறுதி ஊர்வலங்களில் பெரும் தொகையான பட்டாசுகளை நகரப் பகுதிகளில் வெடிக்க வைக்கின்றனர். நகரப் பகுதியில் நீதிமன்றம் உட்பட அரச அலுவலகங்கள், வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள், சந்தை, வர்த்தக நிலையங்கள், தனியார் மருந்தகங்கள், உணவு நிலையங்கள் போன்றவை காணப்படுகின்றன.
பட்டாசுகள் வெடிக்க வைப்பதால் பாதிப்புகள் ஏற்படுவதாகவும் சுகாதார சீர்கேட்டை எதிர்கொள்வதாகவும் பொது மக்கள் உட்பட பலர் முறைப்பாடுகள் தெரிவித்து வருகின்றனர்.
இந்தநிலையில்சபையால் நடைமுறைப்படுத்தப்பட்ட தீர்மானம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும் என்றும் இதனை மீறுவோர்மீதுசட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-9)

# நுளம்புக்குப் புகையிடும் பொருள்கள் குறித்து அவதானத்துடன் இருங்கள்

## சுகாதாரத் திணைக்களம் அறிவுறுத்து

சாவகச்சேரி,டிசெ.11
நுளம்பு வராது தடுப்பதற்கு புகையிடப்படும் பொருள்களால் தோல் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்புக்கள் உள்ளன என்று சுகாதாரத் திணைக்களம் பொதுமக்களுக்கு எச்சரித்துள்ளது.
தற்போது மழைகாலம் என்பதால் நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்துள்ளன. இந்த நுளம்புகளைக் கட்டுப்படுத்த ரயர்கள், பிளாஸ்ரிக் பொருள்கள், பொலித்தீன் தாள்கள் போன்றவற்றை எரிப்பதும், நுளம்புத் திரி மற்றும் ஊதுபத்திகள் ஆகியவற்றையும் புகையிட வைக்கின்றனர்.
இந்தப் புகையை சுவாசிப்பது டெங்கு நுளம்பின் தாக்கத்தை விட பத்து மடங்கு ஆபத்தானது. அத்துடன் தோல் புற்றுநோயை உருவாக்கும் ஆபத்தும் உள்ளது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.
அவ்வாறான பொருள்களைச் சேகரித்து உள்ளூராட்சி சபைகள் மூலம் அப்புறப்படுத்த வேண்டும்என்றும்சுகாதாரத் திணைக்களத்தினர் பொது மக்களுக்கு அறிவுறுத்தி வருகின்றனர்.

> " புகையை சுவாசிப்பது டெங்கு நுளம்பின் தாக்கத்தை விட பத்து மடங்கு ஆபத்தானது. அத்துடன் தோல் புற்றுநோயை உருவாக்கும் ஆபத்தும் உள்ளது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. "

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் மேற்கொள்ளப்படும் கிராம மட்ட டெங்கு கட்டுப்பாடு மற்றும்போசணைமேம்பாட்டுக்குழுக்கூட்டங்களில் பொது சுகாதாரப் பரிசோதகர்களால் இந்தக் கருத்து வலியுறுத்தப்பட்டு வருகின்றது.
அண்மைக் காலமாக ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பிரதேசம் எங்கும் நுளம்புகளின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது. நுளம்பின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த பல இடங்களில் ரயர், பாவனைக்குதவாத பிளாஸ்ரிக் பொருள்கள், பொலித்தீன் தாள்கள் போன்றவற்றை எரியூட்டுகின்றனர். சில வீடுகளில் அடுப்புப் பற்ற வைக்க இவ்வாறான பொருள்களைப் பயன்படுத்தி வருகின்றனர். இவற்றிலிருந்து எழும் புகையை நாம் சுவாசிக்கும்போது பல்வேறு சுவாசப்பை நோய், சுவாசத் தொகுதி நோய், தோல் புற்று போன்ற நோய்களை எதிர்நோக்கும் அபாயம் உள்ளது.
அத்துடன் இதன் தாக்கம் டெங்கால் ஏற்படும் பாதிப்பை விட பத்து மடங்கு தாக்கத்தை உருவாக்கும்.
இதனால் வீடுகளில் காணப்படும் பாவனைக்குதவாத ரயர்கள், பிளாஸ்ரிக் பொருள்கள், பொலித்தீன் தாள்கள் போன்றவற்றைத் தனியாகச் சேகரித்து உள்ளூராட்சி சபைகளின் கழிவு அகற்றும் வாகனங்களில் ஏற்றக்கூடிய இடங்களில் தனியாக வைக்க வேண்டும் என்றும், இவ்வாறான பொருள்களை மண்ணில் புதைப்பதையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ற-ஐ-9)

# கைவிடப்பட்ட 35 படகுகள் மீள்குடியமர்ந்த மக்களுக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.11
போரின்போது சுண்டிக்குளம் கடற்பரப்பில் கைவிடப்பட்ட 35 படகுகள் திருத்தியமைக்கப்பட்டு மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
போர் காலத்தில், மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சுண்டிக்குளம் கடற்பரப்பில் படகுகள் கைவிடப்பட்டன. போர் முடிவுற்ற பின்னர் அந்தப் படகுகள் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருந்தன.
அவற்றை மீள ஒப்படைக்குமாறு மருதங்கேணி பிரதேச செயலரால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைய 35 படகுகளும் கடற்படையினரால் பிரதேச செயலகத்திடம் ஒப்படைக்கப்பட்டன.
இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட படகுகள் சேதமடைந்த நிலையிலேயே காணப்பட்டன. அதையடுத்து, மீள்குடியேற்ற அமைச்சின் ஊடாகப் பெறப்பட்ட நிதியைக் கொண்டு அவற்றைத் திருத்தியமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. தற்போது அவை சீர் செய்யப்பட்டுள்ளன.
அவற்றை மீள்குடியமர்ந்த பொதுமக்களுக்கு, வாழ்வாதார உதவியாக வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. விரைவில் அவை கையளிக்கப்படும் என்று மாவட்டச் செயலக வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன. (ற-ஐ-5)

## பெற்றோர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு

கிளிநொச்சி,டிசெ.11
கிளிநொச்சி முறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலய மாணவர்களின் பெற்றோர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் உரிமை தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடத்தப்பட்டது.
இதன்போது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலர் இ.செந்தூரன் கருத்துரைகளை வழங்கினார். சுமார் 140 பெற்றோர்கள் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டனர். (ற-ஐ-9)

## கோப்பாய்க்கு மருத்துவ அதிகாரி நியமனம்

அச்சுவேலி,டிசெ.11
கோப்பாய் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரியாக மருத்துவர் கே.மகேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். கோப்பாய் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரியாக கடமையாற்றி வந்த மருத்துவர் த.ஜெயசீலன் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டதையடுத்து மகேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். (ற-ஐ-1)

## முன்பள்ளி மாணவர்களின் கலைவிழா

வலிகாமம் மேற்கு சங்கானை கோட்ட முன்பள்ளிகளின் ஆங்கில தின வருடாந்த கலைவிழா, முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவி செல்வி லோ.யுகந்தினி தலைமையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.
இந்த நிகழ்வில் வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 8 குடும்ப முன்பள்ளிகளில் உள்ள 34 முன்பள்ளி மாணவர்கள் போட்டிகளில் கலந்துகொண்டனர். (ற-ஐ-50)

**காணி விற்பனைக்கு**
யாழ் புகையிரத நிலையத்திற்கு அருகில் 3 பக்க மதிலுடைய நிலப்பரப்பு 2 குழி 13 விஸ் தீரணமுடைய காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 544 3346

**பெயர்மாற்றம்**
புத்தூர் மேற்கு, கலைமதியில் வசிக்கும் துரைசிங்கம் அலெக்ஸ் ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை துரைசிங்கம் ஜெகதீஸ் என பெயர்மாற்றம் செய்வ தோடு இனி வரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே பயன்படுத்துவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
து. ஜெகதீஸ்
(66093)(12.15)

Majestic Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை 021 2227712
facebook CeylonTheatres
www.ceylontheatres.lk

**G.C.E (O/L) 2016**
பிரத்தியேக வகுப்புக்கள்
கணிதம், விஞ்ஞானம்
30 வகுப்புக்களுக்கு ரூபா 2000 மட்டுமே கட்டணமாக அறவிடப்படும்.
வீட்டுக்கு வந்தும் கற்பிக்கப்படும்.
076 664 6474
(66901)
(11.15,18)

2ஆவது ஆண்டு விழா
பாரிராஜ்
பல்பொருள் அங்காடி
இன்று (11.12.2015) வெள்ளிக்கிழமை
இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வாடிக்கையாளர்களுக்கான சிறப்புச் சலுகைகள்....
உங்கள் எல்லாத் தேவைகளுக்குமான
- அத்தியாவசியப் பொருள்கள்
- அன்பளிப்புப் பொருள்கள்
- ஆடம்பரப் பொருள்கள்
- தாய் - சேய் பொருள்கள்
- அழகு சாதனப்பொருள்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- மின்சாதனப் பொருள்கள்

விசேட விலைத் தெரிவு
- பாடசாலை உபகரணங்களுக்கு 10 % முதல் 15 % வரையான விலைக்கழிவு (நிபந்தனைக்குட்பட்டது)
- காலணிகள் (DSI Indian Vkc 10 %) வரையான விலைக்கழிவு
- நத்தார் சோடினைப் பொருள்களுக்கு 10 % முதல் 15 % வரையான விலைக்கழிவு
- அழகு சாதனப் பொருள்களுக்கு 10 % வரையான விலைக்கழிவு வழங்கப்படும்
- விளையாட்டுப் பொருள்களுக்கு 10 % வரையான விலைக்கழிவு
- நுளம்புவலை,குடை, Rainco உற்பத்திப்பொருள்களுக்கு 16 வீதம் வரையான விலைக்கழிவுகள் வழங்கப்படும்.

பாரிராஜ் பல்பொருள் அங்காடி
உங்களுக்கு சேவை புரிய காத்திருக்கின்றோம்
எமது ஆண்டு விழாவிற்கு வந்துகொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு அன்பளிப்புகள் இலவசமாக வழங்கப்படும்.
இன்றே வாருங்கள் பாரிராஜ் அங்காடிக்கு
பாரிராஜ் பல்பொருள் அங்காடி
ஆனைப்பந்தி அருகில்
இல.344,நாவலர் வீதி,யாழ்ப்பாணம்.
021 221 7252 / 077 2719 229
(அ.207739)(13.16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர்
திருமதி மே. அமலோற்பவதாஸ்
அவர்களின் தந்தையார்
அமரர் கபிரியேல் லொற்றிக்கோ
மதியாபரணம்
காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்திற்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
கல்லூரிச் சமூகம்
யா/ நெ. றோ. க மகளிர் கல்லூரி


# முக்கிய வழக்குகளை விசாரிக்கும் நீதிவான்களுக்கும் இடமாற்றம்

கொழும்பு, டிசெ. 11

பிரபல ரக்பி விளையாட்டு வீரர் வசிம் தாஜுதீனின் கொலை வழக்கு உட்பட பல்வேறுபட்ட சிக்கலான வழக்குகள் தொடர்பாக விசாரித்து வரும் கொழும்பு மேலதிக நீதிவான் ஏ. நிசாந்த பீரிஸ் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதுபோன்ற வேறு சில முக்கிய வழக்குகளை விசாரித்து வரும்நீதிவான்களும் இடமாற்றம் செய்யப்படுகின்றனர். வருடாந்த இடமாற்றத்தின்படி அவர்கள் இடமாற்றம் செய்யப்படுகின்றனர் என்று கூறப்பட்டுள்ளது.

அவ்வாறு நீதிவான்கள் உட்பட 110 பேர் இடமாற்றம் செய்யப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிசாந்த பீரிஸ் எதிர்வரும் ஜனவரிமாதம் முதலாம் திகதி தொடக்கம்; நடைமுறைக்கு வரும் வகையில், மாத்தறை மாவட்ட நீதிவானாக இடமாற்றம் பெற்றுள்ளார். இதேவேளை, முக்கிய வழக்குகளை விசாரணை செய்து வரும் கொழும்பு பிரதான நீதிமன்ற நீதிவான் கிஹான் பிலப்பிட்டியவும் கொழும்பு மாவட்ட மேலதிக நீதிவானாக இடமாற்றம் பெற்றுள்ளார்.

மாவட்ட நீதிவான்கள், மாவட்ட மேலதிக நீதிவான்கள், மாவட்ட பதில் நீதிவான்கள், மாவட்ட மேலதிக பதில் நீதிவான்கள், நீதிவான் நீதிமன்ற நீதிவான்கள், பிரதான நீதிவான் நீதிமன்ற நீதிவான்கள், மேலதிக நீதிவான் நீதிமன்ற நீதிவான்கள், சிறுவர் சீர்திருத்த நீதவான் நீதிமன்ற நீதிவான்கள், மேலதிக பதில் நீதிவான் நீதிமன்ற நீதிவான்கள் மற்றும் நீதிவான்கள் நிறுவனத்தில் பயின்று வரும் பயிற்சியாளர்கள் என 110 பேர் இந்த இடமாற்றம் பெற்றுக்கொண்டுள்ளனர். இதனை, நீதிச்சேவைகள் ஆணைக்குழு உறுதி செய்துள்ளது.

ஆண்டுக்கான இடமாற்றம், ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் முன்னெடுக்கப்படும் என்று, ஜனவரி மாதம் 5 ஆம் திகதி, நீதிச்சேவைக்கான ஆணைக்குழுவின் பதில் செயலாளர் ரத்நாயக்க நீதித்துறை அதிகாரிகளுக்கும் தொழிலாளர்கள் நீதிமன்றங்களின்தலைவர்களுக்கும் எழுத்துமூலம்தெரியப்படுத்தியுள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது. (த-4)

# தந்தைக்கு எதிராக மகன் முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ.11

தந்தையார் தங்களை உரியவாறு கவனிப்பதில்லை என்று குற்றஞ்சாட்டியுள்ள பிள்ளைகள், உரிய கவனிப்பைப் பெற்றுத் தருமாறு கோரிப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பதுளை கெபிற்றிக் கொல்லாவ பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த தந்தையாருக்கு 5 பிள்ளைகள் உள்ளனர். அவர்கள் பாடசாலையில் கல்வி கற்று வருகின்றார்கள்.

தனது தாயார் வெளி நாட்டில் பணிபுரிந்து வருவதனால் தனது இரண்டு தங்கைகளையும் இரண்டுதம்பிகளையும் தந்தையார் ஒழுங்காக கவனிப்பதில்லை என்று மூத்த மகன் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

சகோதர, சகோதரிகளுக்கு ஒழுங்கான உணவையோ அல்லது குடிதண்ணீரையோ தனது தந்தை வழங்குவதில்லை என்றும், அதனால் தங்களது பாடசாலைக் கல்வி பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த முறைப் பாட்டில் மகன் கூறியுள்ளார். முறைப்பாட்டையடுத்து அது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-4)


## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் பூதத்தம்பி சந்திரமௌலீசன்
(ஓய்வு பெற்ற நீதிமன்ற ஊழியர் சாவகச்சேரி)

திதி:- 11.12.2015



ஆண்டுகள் பதினொன்று ஆனது அப்பா!
அன்புத் தெய்வமே மறப்போமாஅப்பா!
உறவாக வந்து உணர்வோடு கலந்து
பிரியாத பாசம் பரிவோடுதந்தீர் அப்பா!,
நிஜமாக வாழ்ந்து உறவாடிக் கொண்டு
தொடரான சொந்தம் தேடித் தந்தீர் அப்பா!
பிரிவென்ற கடலில் மூழ்க வைத்து
நிஜமான வாழ்வு நிழலாக மாறி
நினைவொன்றைத் தந்து எமை
விட்டுப் பிரிந்தீர் அப்பா - உங்கள்
ஆத்மா சாந்தி அடையப்
பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கைதடி, நுணாவில்
சாவகச்சேரி.

தோற்றம்
21.11.1944

மறைவு
12.12.2004



## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
08
.
08
.
1932



உதிர்வு
09
.
12
.
2007

அமரர்
கந்தசாமிப்பிள்ளை இராசரத்தினம்
(ஓய்வு பெற்ற ஊழியர் வல்வெட்டித்துறை ஊறணி வைத்தியசாலை)

திதி :- 11.12.2015

அன்புடன் அரவணைத்து பண்புடன் பாசமழை பொழிந்து
விண்ணகம் அடைந்து கழிந்ததோ எட்டாண்டுகள்
அழகான முகமும் ஈரமிகு விழிகளும்
பரிவான சொற்களும் பாசமொழி பேசும் பண்பதுவும்
வைத்திய சேவைதனில் தன் வாழ்நாள் வரை பணிபுரிந்து
தம் நினைவை எம் இதயங்களில் நிலைக்கச்செய்தவரே
இன்னல்களைப் போக்கி எமை இன்பத்தில் மூழ்கவைத்து துன்பத்தில் ஆழ்த்திவிட்டு
எமை விட்டுச் சென்றதேனோ
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் உமை எண்ணியெண்ணி நாம் துதிப்போம் ஐயாவே
ஏங்கித் தவிக்கின்றோம். மீண்டும் எம்முடன் வந்துதிக்க வேண்டி நிற்கும்.....

மனைவி: இ. கனகம்மா (லண்டன்)
0044 744 8023841

பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்



## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15
.
09
.
1940



மறைவு
22
.
11
.
2014

அமரர் வல்லிபுரம் பாலசுந்தரம்

ஓராண்டென்ன ஒரு யுகம் சென்றாலும் உங்கள் பிரிவை
எம்மால் தாங்க முடியாது

நன்னகர் கரைச்சி நவின கிளிநொச்சியில் செந்நெல்
மிக விளையும் சிறந்த கண்டாவளையில் இன்னல்கள்
ஏதுமின்றி கண்ணியமாகவும் கௌரவமாகவும் புண்ணியங்கள்
பல புரிந்து பெருமையுடன் வாழ்ந்து அமரரானவர் பாலசுந்தரம்
தீஞ்சுவை மா, பலா, தெங்கு, பனையென எங்கும் நிறைந்து
எழிலுற விளங்கும் தென்மராட்சி மண்ணிலே இணையுறு
பதியாம் சங்கத்தானையில் குவலயம் போற்ற வாழ்ந்த
வல்லிபுரம் சின்னத்தங்கம் தம்பதியினர்க்கு முதல் மகனாய்
வந்துதித்து பல்கலைகள் பல கற்று கரைச்சி வடக்கு
பலநோக்கு சங்க முகாமையாளராய் பணிபுரிந்து வரும்
நாளில் சீர்மேவு கண்டாவளையில் சிறப்புடனே வாழ்ந்து
வந்த உபதபாலதிபர் கதிர்காமர் நாகம்மா தம்பதியினரின்
அருந்தவப் புதல்வியாம் தவமணியை மணமுடித்து
தரணி போற்ற வாழ்நாளில் மாடு, மனை, வீடு என
மகிழ்வுடனே ஈடு இணையில்லாச் செல்வங்களாம்
ஆறு நன் மக்களைப் பெற்று, அவர்களுக்கு
அன்பான கல்வியூட்டி வாழவழிகாட்டி, தக்க
துணைதேடி தரணியிலே வாழவைத்த எங்கள்
அன்புத் தெய்வமே! எம்மையெல்லாம் இடை
நடுவில் விட்டு விட்டு எங்கு சென்றீர்!

தன்னை உருக்கி பிறருக்கு ஒளி கொடுக்கும் மெழுகுவர்த்தியைப் போல் இரவைப் பகலாக்கி, இரத்தத்தை வியர்வையாக்கி அல்லும் பகலும் அயராது பாடுபட்டீர்! கைப் பிடித்த நாள் முதலாய் கண்ணை இமை காப்பது போல் என்னைக் காத்து வந்த என் தெய்வமே! இமைக்கின்ற பொழுதெல்லாம் உங்கள் நினைவோடு வாழுகின்றேன். பெற்ற பிள்ளைகள் எங்களின் நல்வாழ்வுக்காய் பெரும் பாடுபட்ட எங்கள் அப்பாவே! மீண்டும் எமக்கெல்லாம் ஒரு பிறவி உண்டென்றால் உங்களுக்குப் பிள்ளையாகப் பிறக்கும்பேறு வேண்டும்.

ஓராண்டு என்ன ஒரு யுகம் கழிந்தாலும் உங்கள் பிரிவை எம்மால் தாங்க முடியாது தவிக்கின்றோம்!

இவ்வண்ணம்.

பிரதானவீதி,
கண்டாவளை.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய உற்பத்திகளுக்கு இனிக் கழிவுகள் கிடையாது

## உள்ளூராட்சித் திணைக்களம் வியாபாரிகளுக்கு கண்டிப்பான உத்தரவு

யாழ்ப்பாணம், டிசெ.11
விவசாயிகளால் சந்தைக்கு விற்பனைக்காகக் கொண்டுவரும் நிலக்கீழ் விவசாய உற்பத்திப் பொருள்களில் மண்ணுடன் எடுத்து வரப்படும் கிழங்கு தவிர்ந்த ஏனைய பொருள்களுக்கு வியாபாரிகளால் கழிவுகள் கோரப்படக் கூடாது. உற்பத்திப் பொருள்களின் தரத்துக்கு ஏற்ப விலைகளை நிர்ணயம் செய்து வியாபாரிகளால் அவை கொள்வனவு செய்யப்பட வேண்டும் - இவ்வாறு வடமாகாண உள்ளூராட்சித் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இந்த நடைமுறை எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் வருகிறது. இந்த நடை முறையைப் பின்பற்றாத எவராக இருந்தாலும் அவர்களது சந்தை வியாபார நடைமுறைக்கான உரிமை இரத்துச் செய்யப்படும் என்றும் திணைக் களம் எச்சரித்துள்ளது.

விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களைச் சில்லறையாகச் சந்தைகளில் வைத்து விற்பதற்கு நிலையான பொதுவான இடமொன்றை ஒதுக்கிக் கொடுத்தல் வேண்டும். விவசாயிகளால் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக இட வாடகையைச் செலுத்தல் வேண்டும். விவசாய உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்குச் சந்தைக்கு வரும் உற்பத்தியாளர்களிடமிருந்து தரகுப் பணம் பெறுவதை நிறுத்துதல் வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வாழைப்பழக் குலைக்கும், வாழைக் காய்களுக்கும் மட்டும் தண்டுக்கு கழிவுகளை விதிக்கலாம். விவசாயிகளால் சந்தையில் விற்பனைக்குக் கொண்டு வரப்படும் உற்பத்திப் பொருள்களுக்கு 4 வீத வரி அறவிடப்படல் வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதுகுறித்து மேலும் திணைக்களம் தெரிவித்துள்ளதாவது-

சந்தையில் வியாபாரம் செய்வதற்கு அனுமதி பெற்ற வியாபாரியாயின் வேறு சந்தைகளில் விவசாய உற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்து வழமையாக விற்பனை செய்யும் சந்தையில் விற்பனைக்காகக் கொண்டு வரும் விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு வரி அறவிடக்கூடாது. நேரடியாக உற்பத்தியாளரிடமிருந்து கொள்வனவு செய்து கொண்டு வந்து விற்கும்

- **இந்த நடைமுறையைப் பின்பற்றாத எவராக இருந்தாலும் அவர்களது சந்தை வியாபார நடைமுறைக்கான உரிமை இரத்து.**
- **வியாபாரிகளால் பாவிக்கப்படும் தராசுகள் நிறுவைத் திணைக்களத்தினால் முத்திரையிடப்பட்டிருத்தல் வேண்டும்.**
- **விவசாயிகளால் சந்தையில் விற்பனைக்குக் கொண்டு வரப்படும் உற்பத்திப் பொருள்களுக்கு 4 வீத வரி அறவிடப்படல் வேண்டும்.**

பொருள்களுக்கு வரி அறவிடலாம். சந்தைகள் குத்தகைக்கு வழங்கப்படாது சபையால் நடத்தப்படும்போது அறவீட்டுக்குப் பற்றுச் சீட்டுகள் வழங்குவது போன்று குத்தகைதாரரால் குத்தகைக்கு எடுத்து நடத்தும் சந்தைகளுக்கும் அறவீட்டுக்குப் பற்றுச் சீட்டுகள் வழங்கப்படல் வேண்டும்.

வியாபாரிகளால் பாவிக்கப்படும் தராசுகள் நிறுவைத் திணைக்களத்தினால் முத்திரையிடப்பட்டிருத்தல் வேண்டும்.

வியாபாரிகளால் விற்பனை செய்யப்படுகின்ற பொருள்களின் நிறையை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு, பொதுவான நியமத் தராசு பொருள்களைக் கொள்வனவு செய்வோர் தெளிவாகப் பார்க்கக் கூடியதாக வைத்தல் வேண்டும்.

விவசாயிகள் சந்தைப்படுத்துவதற்காகச் சந்தைக்குக் கொண்டு வரும் விவசாய உற்பத்திப் பொருள்களின் நிறையை அளந்து கொள்ளும் பொருட்டுப் பொதுவான நியமத் தராசு சந்தைக்கு வெளியே தெளிவாகப் புலப்படக்கூடிய இடத்தில் சபையால் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

சந்தைக்கு வருகை தருகின்ற பாவனையாளர்களினதும், பொருள்களை ஏற்றி இறக்குபவர்களதும் சைக்கிள்களையும், மோட்டார் சைக்கிள்களையும் நிறுத்திவைப்பதற்குப் போதுமான அளவில் இடவசதி ஒதுக்கப்பட்டிருப்பதுடன் பாதுகாப்பும் வழங்கப்பட வேண்டும். இதற்கு மட்டும் பற்றுச்சீட்டை வழங்கிக் கட்டணம் அறவிடமுடியும்.

இடவசதி ஒதுக்கப்படாது பாவனையாளர்களினாலும் பொருள்களை ஏற்றி இறக்குபவர்களினாலும் நிறுத்தப்படும் சைக்கிள், மோட்டார் சைக்கிள், வாகனங்களுக்குக் கட்டண அறவீடுகள் எதுவும் மேற்கொள்ளக் கூடாது.

தங்களது குத்தகை உடன்படிக்கையில் மேற்கூறப்பட்டவை உள்ளடக்கப்பட்டு இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். குத்தகைக்காரரால் நடை முறைப்படுத்தாதுவிடின் குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்து புதிய குத்தகைக்காரரிடம் வழங்கப்படும் என்பதைத் தெளிவாக அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

இந்த அறிவுறுத்தல்களைப் பின்பற்றாத குத்தகைக்காரர் மற்றும் சந்தை வியாபாரிகள் தொடர்பில் பிரதேச சபைகளுக்கோ வடமாகாண உள்ளூராட்சித் திணைக்களத்துக்கோ முறையிட முடியும் - என்று தெரிவிக்கப்பட்டள்ளது. (ற-ஐ-4)



ஏ-9 வீதியைக் கடந்து குடியிருப்புக்குள் செல்ல முயன்ற 6 அடி நீளமான முதலையை வாகனம் மோதியதில் சம்பவ இடத்திலேயே அது இறந்துள்ளது. இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நுணாவில் மேற்கு பேச்சியம்மன் ஆலயத்துக்கு அருகே நடந்தது. இறந்த முதலையை ஊர் மக்கள் வீதியோரத்தில் புதைத்தனர். அண்மையில் பெய்த மழையால் குளங்கள் நிறைந்துள்ளன. அவற்றில் உள்ள முதலைகள் தற்போது குடியிருப்புக்களுக்குள் நுழைய ஆரம்பித்துள்ளன. (ற-ஐ-9)

# எழுவைதீவில் விரைவில் இறங்குதுறை அமையும்

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.11
எழுவைதீவு மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை அடுத்து 60 மில்லியன் ரூபா செலவில் ஓர் இறங்குதுறை அமைக்கப்படவுள்ளது என்று யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் உள்ள தீவுகளில் தரைத் தொடர்புகள் அற்ற 4 தீவுகளில் ஒன்றான எழுவைதீவில் வசிக்கும் மக்கள் தமது அத்தியாவசியத்தேவைகள் அனைத்துக்கும் யாழ். நகருக்கே வரவேண்டிய நிலை உள்ளது.

இந்தத் தீவில் இருந்து மேற்கொள்ளப்படும் படகுப் பயணத்துக்கு ஓர் இறங்குதுறையை அமைத்துத் தருமாறு நீண்ட காலமாக பொதுமக்கள் கோரிக்கை முன்வைத்திருந்தனர்.

186குடும்பங்களைச்சேர்ந்த 756 பேர் வாழும் இந்தத் தீவின் போக்குவரத்தை இலகுபடுத்தும் முகமாக இந்த இறங்குதுறை அமைக்கப்படவுள்ளது.

2016ஆம்ஆண்டின்ஆரம்பத்தில் மாவட்ட செயலக நிதி ஒதுக்கீட்டில் இந்த இறங்கு துறை அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-101)

# சுதந்திரப் பயணம் இளைஞர் மாநாடு நேற்று

## ஆயிரக் கணக்கானோர் பங்குபற்றினர்



யாழ்ப்பாணம், டிசெ.11
இராணுவத்தால் அபகரிக்கப்பட்டுள்ள காணிகளை உரிமையாளர்களிடம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி வடக்கு, கிழக்கைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான இளைஞர்களின் பங்கேற்புடன் "சுதந்திரப் பயணம்" எனும் இளைஞர் மாநாடு நேற்று யாழ்.முற்றவெளியில் நடைபெற்றது.

உலக மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு அன்புக்கும் நட்புக்குமான இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட குறித்த மாநாட்டில், காணமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கான நீதியைப் பெற்று கொடுக்க வேண்டும், சிவில் சமூகத்தின் மீதான இராணுவத் தலையீட்டை நிறுத்த வேண்டும், வெளிப்படைத் தன்மையுடைய அரசியல் [illegible] உருவாக்க வேண்டும், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்ற கோரிக்கைகளும் வலியுறுத்தப்பட்டன.

இந்த நிகழ்வில் வடக்கில் 5 மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர் கழகங்களில் ஆயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர்களும், கிழக்கில் இருந்து இளைஞர் கழக உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.



இங்கு நடைபெற்ற தமிழர்களுடைய வரலாற்றை கூறும் கலைநடனங்களும், இன விடுதலை தொடர்பான எழுச்சிச் சிறப்புரைகளும் இடம்பெற்றன.

அத்துடன் இனப் பிரச்சினை தொடர்பான நிரந்தர அரசியல் தீர்வுக்கான அடிப்படைக் கொள்கை மாதிரியும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இது வரை கிடைக்காத தமிழர்களுடைய இன விடுதலையை வலியுறுத்தி சோரம் போகாத, சோர்ந்து போகாத இன்னொரு இளைஞர் சந்ததி குரல் கொடுக்கும் நாள் இன்று. விடுதலை போராட்டம் போராயுதங்களுடன் போராடிய ஒரு போராட்டம். அந்தப் போராட்டம் முடிவுற்ற பின்னர் 2009 ஆண்டு மே மாதத்துக்குப் பின்னர் முதல் முறையாக இளைஞர்கள், இளையதலைமுறைகள் பங்கு கொள்கின்ற இந்தநிகழ்வின் மூலமாக நாங்கள் இன்றும் சோர்ந்து போகவில்லை என்பதை வெளிப்படுத்துகின்றோம் என்றும் அங்கு தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்க

## போரால் பாதிக்கப்பட்ட அமைப்பு கோரிக்கை

மன்னார்,டிசெ.11

உள்நாட்டுப் போர் முடிந்து பல ஆண்டுகளாகியும் அரசியல் கைதிகள் இன்னும் விடுதலை செய்யப்பட வில்லை. அவர்கள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்பட்டு அவரவர் குடும்பங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். - இவ்வாறு மன்னார் மாவட்ட போரினால் பாதிக்கப்பட்ட அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு போரால் பாதிக்கப்பட்ட மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று வியாழக்கிழமை மன்னாரில் கவனவீர்ப்பு பேரணி இடம்பெற்றது. அதைத் தொடர்ந்து குறித்த அமைப்பு ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் வேதனைகள், அரசியல் கைதிகளின் குடும்பங்களின் துயரங்கள், பெண்கள் சிறுவர்களின் உரிமை மீறல்கள், துஷ்பிரயோகங்கள்தொடர்பான பிரச்சினைகள் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவசரமாகவும் அவசியமாகவும் தீர்வு காணப்பட வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொகை இருபதாயிரத்துக்கும் மேற்பட்டவை எனத் தரவுகள் சுட்டிக் காட்டுகின்றன. இவர்கள் அனைவரும் உடனடியாக அவரவர் குடும்பங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

போர் முடிந்து பல ஆண்டுகளாகியும் இன்னும் அரசியல் கைதிகளுக்கான ஒரு தீர்வு எட்டப்படாமை அரசின் கையாலாகாத தன்மையா? அல்லது அசமந்த போக்கா? தீர்வு எட்டப்பட வேண்டும் என்பது ஏன் அரசுக்கு தெரியவில்லை.

பெண்கள் சிறுவர்களுக்கெதிரான உரிமை மீறல்களும் பாலியல் வன்முறைகளும் நாடு முழுவதும் ஏற்பட்டுள்ளன. சமூகப் பிரச்சினையாக உருவெடுத்து அதுவே பெரிய சவாலாக மாறியுள்ளது. வடமாகாண மீனவர்கள் வகை தொகையற்ற இந்திய மீனவர்களின் எல்லை தாண்டல்களால் பல விதமான பாதிப்புக்குள்ளாகின்றனர். விரைவில் அரசு இவற்றுக்கான தீர்வுகளை ஏற்படுத்தி, மக்களின் வாழ்வை இயல்பு நிலைக்கு மாற்ற வேண்டும் என்றுள்ளது. (ற-ஜ-10,56)



சுதந்திர சுகாதார சேவையை வலுப்படுத்தும் நோக்கத்தை முன்மாதிரியாக கொண்டு மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் வவுனியா மாவட்டத்தின் நவ்விப் பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்தை வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம் கடந்த 6 ஆம் திகதி திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சாள்ஸ், வைத்திய கலாநிதி சி.சிவமோகன் மற்றும் திருமதி சி.சாந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.
(ற-ஜ-21)

# 100 மாணவர்களின் கற்றலுக்கு உதவிகள்

## சுவிஸ் நலிவடைந்தோர் உதவிச் சங்கம் வழங்கியது

யாழ்ப்பாணம், டிசெ.11

வடபகுதியில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கைகொடுத்து உதவும் வகையில், புலம்பெயர் தமிழர்கள் இணைந்து சுவிஸில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நலிவடைந்தோர் உதவிச் சங்கம் முல்லை மாவட்டத்திலுள்ளவறுமைக் கோட்டுக்குட்பட்ட நலிவடைந்த 100 மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக ஒரு லட்சம் ரூபா பெறுமதியானகற்றல்உபகரணங்களை வழங்கியுள் ளது.

2009 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த அமைப்பு கடந்த காலங்களில் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்துக்கு பல தரப்பட்ட உதவிகளை வழங்கி வருகிறது.

இந்த அடிப்படையில் முல்லை மாவட்டத்திலுள்ள தண்டுவன், நெடுங்கேணி, பழம்பாசி ஆகிய 3 கிராமங்களில் வசிக்கும் நலிவடைந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக முதற்கட்டமாக தரம் 6 இலிருந்து 11 வரை கல்வி கற்கும் 100 மாணவர்களுக்கு ரூபா ஒரு லட்சம் பெறுமதியான கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளது.

தண்டுவன் அரச தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிராம முன்னேற்றச்சங்கத்த தலைவர் ரி.செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அமைப்பின் இணைப்பாளரான அ. சந்திரகுமார் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளார்.

இதேவேளை - இந்த மாவட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கு உதவும் வகையில் மாடு, கோழி வளர்ப்பு மற்றும் சுய தொழில் முயற்சிக்கான நிதியுதவி வழங்கப்படவுள்ளன என்றும் அவர்களுடைய விவரங்களைத் திரட்டுவதில் சம்பந்தப்பட்டவர்கள் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
(ற-ஜ-115)

# மொரோக்கோ இளைஞர் மாநாட்டில் காண்டீபன்

வவுனியா, டிசெ.11

மொரோக்கோ நாட்டில் நூறு நாடுகளின் நூறு பிரதிநிதிகள் பங்குபற்றும் இளைஞர் மாநாட்டில், இலங்கையின் பிரதிநிதியாக வவுனியா மாவட்ட சாரணர் உதவி மாவட்ட ஆணையாளர் சுந்தரலிங்கம் காண்டீபன் பங்குபற்றவுள்ளார்.

இளைஞர்களின் உணர்வுகளும், தவறாகப் புரிந்து கொள்ளலும், இளைஞர்களின் அடையாள தனித்துவம் மற்றும் பன்முகத்தன்மை, முரண்பாட்டு மாற்றம் மற்றும் சக வாழ்வு ஆகிய தலைப்புக்களில் இலங்கை பிரதிநிதியான கலந்து கொள்ளும் சு.காண்டீபன் உரையாற்றவும், திட்ட முன்மொழிவுகளை முன் வைக்கவும் உள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாடு இன்று தொடக்கம் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.
(ற-ஜ-21,402)

# கருகிய சந்தன மரங்களுக்கு மாற்றீடு தரவில்லை கிறீன்வேள்ட்

## குற்றஞ்சாட்டுகின்றனர் முல்லை விவசாயிகள்
## அறிவித்தால் தரப்படும் என்கிறது நிறுவனம்

முல்லைத்தீவு, டிசெ.11

முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு கிறீன் வேள்ட் நிறுவனத்தால் ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்ட சந்தன மரங்கள் கருகியுள்ளன். அவற்றுக்கான மாற்று மரங்கள் தரப்படும் என்று தெரிவிக்கப்பட்டபோதும் அவை இன்னும் வழங்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, இது குறித்துக் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டால் மாற்று சந்தன மரக்கன்றுகள் வழங்கப்படும் என்று கிறீன் வேள்ட் நிறுவனம் தெரிவித்தது.

குறித்த நிறுவனத்தால் 2013 ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்துக்குட்பட்ட பல பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு ஒரு சந்தன மரம் ஆயிரம் ரூபா வீதம் ஆயிரக்கணக்கான சந்தன மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. அவ்வாறு வழங்கப்பட்ட சந்தன மரங்களில் இருந்து பெறப்படும் பொருள்களைத் தாங்களே கொள்முதல் செய்வோம் எனவும், மரக்கன்றுகள் பட்டுப் போகும் சந்தர்ப்பத்தில் புதிய மரங்களும் தரப்படும் எனவும் அப்போது விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனை அடுத்து பல விவசாயிகள் சந்தன மரக்கன்றுகனை வாங்கித் தமது காணிகளில் நடுகை செய்திருந்தனர். ஆனால் தற்போது அவற்றில் பல சந்தன மரக்கன்றுகள் கருகிப் போயுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்த விவசாயிகள் -

இது தொடர்பாக பல முறை சம்பந்தப்பட்ட நிறுவனத்தினருக்கு அறிவித்தோம். எனினும் புதிய மரக்கன்றுகள் இன்னும் வழங்கப்படவில்லை. மரங்கள் பட்டுவிட்டது எனத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தெரிவித்தோம். இது குறித்து அறிவித்து சில நாள்களில் அவற்றை நேரடியாக வந்து பார்த்த நிறுவனத்தினர் 6 மாதங்களுக்கு மேலாகியும் இன்னும் கன்றுகளைத் தரவில்லை - என்று குற்றஞ்சாட்டினர்.

இது தொடர்பாக கிறீன் வேள்ட் நிறுவனத்திடம் தொடர்பு கொண்டு கேட்ட போது;

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 ஆயிரத்துக்கும் அதிகமான சந்தன மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. ஆனால் அவற்றில் இருநூறு கன்றுகள் அளவிலேயே கருகிப் போயுள்ளன. அவ்வாறு கருகிப் போயுள்ள சந்தன மரக் கன்றுகள் தொடர்பாக கடிதம் மூலம் தங்களுக்கு தெரியப்படுத்தினால் அதற்குரிய புதிய சந்தன மரக் கன்றுகள் வழங்கி வைக்கப்படும் - என்றனர்.
(ற-ஜ-21,ரி7)

# ஒத்திகை நிகழ்வு

வீதி விபத்து ஏற்படுதலும் மீட்புபணிதொடர்பான அவசர செயற்பாட்டு ஒத்திகையும் வேம்படிச் சந்தியிலிருந்து யாழ். போதனா வைத்திய சாலை வரை இன்று பி.ப. 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது. யாழ்.போதனா வைத்திய சாலை ஏற் பாட்டில், யாழ்.மாவட்ட இடர்முகாமைத்துவ இணைப்பு அலகின் ஒழுங்கமைப்புடன், யாழ்.பொலிஸார், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் மற்றும் மாநகரசபை தீயணைப்பு படையினர் இணைந்து ஒத்திகை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
(ற-ஜ-ரி6)

# அம்புலன்ஸில் சென்று பரீட்சை எழுதிய பூநகரி மாணவர்கள்

## சீரான பஸ் சேவை இன்மையால்

யாழ்ப்பாணம்,டிசெ.11

இ.போ.சபை பஸ் சேவையில் ஏற்படும் தாமதத்தால் ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சை எழுதும் மாணவர்கள் அம்புலன்ஸில் சென்று நேற்றுப் பரீட்சை எழுதினர். இந்தச் சம்பவம் பூநகரியில் நடந்துள்ளது.

பூநகரி மகாவித்தியாலயத்தில் பரீட்சை எழுதும் சுமார் 16 மாணவர்கள் செம்மன்குன்று பிரதேசத்தின் ஊடாக ஏ-32 பாதையால் பயணித்து பரீட்சை மண்டபத்துக்கு செல்ல வேண்டியிருந்தது. மண்டக் கல்லாற்றின் மேலாக வெள்ள நீர் பாய்வதால் பஸ்கள் இந்தப் பாதையின் ஊடாக தொடர்ந்து பயணிக்க முடியாதுள்ளது. இடைநடுவே படகு மூலமே பயணம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மாணவர்கள் பூநகரிக் கரையை காலை 7.30 மணிக்கு அடைகின்ற போதும் பஸ் சேவை 8.45 மணிக்கே ஆரம்பிப்பதால் மாணவர்கள் பரீட்சைக்கு காலதாமதமாகச் செல்ல நேருகின்றது. இது தொடர்பில் சகல தரப்பினருக்கும் சுட்டிக்காட்டி, உரிய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவசரக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இ.போ.சபையின் வட மாகாண உதவி முகாமையாளர் கேதீஸ்வரன் மற்றும் யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் ஆகியோர் குறித்த நேரத்துக்கு பஸ் புறப்படவேண்டும் எனவும் பணித்திருந்தனர்.

இருப்பினும் நேற்றும் மாணவர்கள் காலை 7.30 மணிக்கு கரையை அடைந்த போதிலும், பஸ் குறித்த நேரத்துக்கு புறப்படுமா? என்ற ஐயம் நிலவியது. அதனால் கல்வி அதிகாரிகளின் தலையீட்டால் உடனடியாக பூநகரி வைத்திய சாலையின் அம்புலன்ஸ் வண்டியில் மாணவர்கள் ஏற்றி அனுப்பி வைக்கப்பட்டனர்.

மாணவர்களின் தேவையை அறிந்து இந்த முடிவை உடன் மேற்கொண்ட பூநகரி வைத்தியசாலை நிர்வாகத்தினருக்குப் பலரும் பாராட்டு தெரிவித்தனர்.
(ற-ஜ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேதமடைந்த வீதியால் சாரதிகளுக்கு சிரமம்

சாவகச்சேரி,டிசெ.11
சாவகச்சேரி கனகன்புளியடிக்குச் செல்லும் தபால் நிலைய வீதி மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளது. அதனால் இந்த வீதியால் பயணிக்கும் பெரும் வாகனங்கள் ஒன்றையொன்று விலத்திச் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது. அத்துடன் விலத்திச் செல்ல முற்படும் வாகனங்கள் வீதியோரத்தில் புதைய வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.



கடந்த செவ்வாய்க்கிழமை இதே வீதியில் கெருடாவில் பகுதியில் சிமெந்து ஏற்றி வந்த பாரவூர்தி எதிரே வந்த பஸ்ஸுக்குவழிவிட முயன்ற போது வீதியோரத்தில் புதைந்து, கனரக வாகனம் மூலம் மீட்கப்பட்டது.

இதேவேளை நேற்று வன்னிப் பகுதியிலிருந்து கிரவல்மண் ஏற்றி வந்த இரு வாகனங்கள் சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு அருகில் எதிரே வந்த வாகனத்துக்கு வழி விடுவதற் காக வீதியோரம் சென்றவேளையில் அடுத்தடுத்து மண்ணுக்குள் புதைந்தன.

குறித்த வீதி சேதமடைந்திருப்பதாலேயே இவ்வாறு வாகனங்கள் புதையவேண்டியுள்ளதாக சாரதிகள் தெரிவித்தனர். (ற-ஜ-9)

# திட்டமிடல் இல்லாத பிரதேசமாக மாற்றமடைகிறது வட மாகாணம்

## பேராசிரியர் ஜி.மிகுந்தன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ.11
வடமாகாணம் தற்போது திட்டமிடல் இல்லாத பிரதேசமாக மாறிக் கொண்டிருக்கிறது. இயற்கை அழிவுகளில் இருந்து நாம் தப்பித்துக் கொள்ள ஒருங்கிணைந்த திட்டமிடல் என்பது அவசியம். - இவ்வாறு யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜி.மிகுந்தன் தெரிவித்தார்.

உலக நகரத் திட்டமிடல் தினம் தொடர்பான நிகழ்வுகள் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். பல்கலைக்கழக நூலக மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக இளம் திட்டமிடலாளர் சங்கத்தின் தலைவர் எஸ்.டக்ளஸ் ஜெய்சன் தலைமையில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

திட்டமிடல் என்பது குடும்பத்துக்கு மட்டுமல்ல கிராமத்துக்கு, நகரத்துக்கு, மாகாணத்துக்கு என விரிந்து செல்ல வேண்டும். திட்டமிடல் இல்லாத சென்னை நகரம் இன்று நீரில் அமிழ்ந்துள்ள துயரச் செய்தி எம்மையெல்லாம் கவலையில் ஆழ்த்தியுள்ளது.

> “உலக நகரத் திட்டமிடல் தினம் தொடர்பான நிகழ்வுகள் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். பல்கலைக்கழக நூலக மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக இளம் திட்டமிடலாளர் சங்கத்தின் தலைவர் எஸ்.டக்ளஸ் ஜெய்சன் தலைமையில் நடைபெற்றது.”

இதேபோன்று 2008ஆம் ஆண்டு நிசா புயல் எம்மை அழித்தது. தற்போது யாழ்ப்பாணம் மட்டுமல்ல, வடமாகாணமே திட்டமிடல் ஒருங்கிணைப்பு இல்லாது செல்கிறது. எனவே ஒருங்கிணைந்த திட்டமிடல் செயல் முறைக்கு அனைவரும் முன் வர வேண்டும்- என்று அவர் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை வடக்கு மாகாணத்தில் 40 ஆயிரம் விதவைகள் உள்ளனர் என்று ஐ.நா. வரை தகவல் சென்றுள்ளது. ஆனால் 7 ஆயிரத்து 500 விதவைகள் மட்டுமே உள்ளனர் என வடமாகாண சபையில் கணக்கிடப்பட்டுத் தரவுகளாக உள்ளன.

இந்தத் தரவு தவறானது. இவை மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும். இது பொருத்தமான தகவல் களஞ்சியத்தைத் துறைவாரியாக வடமாகாணசபை ஆரம்பிக்கவில்லையென்பதையே புலப்படுத்துகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-ஜ-50)

## கசிப்புடன் கைதான மாமியார், மருமகள்!

சாவகச்சேரி,டிசெ.11
கசிப்பைத் தனது உடைமையில் வைத்திருந்த பெண்ணுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த புதன்கிழமை இரண்டு வருடங்கள் சாதாரண சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. எனினும் தன்னை மன்னிக்குமாறு பகிரங்கமாக மன்னிப்புக் கோரியதையடுத்து 50 ஆயிரம் ரூபா அபராதமும் 5 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 2 வருட சாதாரண சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

தமது உடைமையில் கசிப்பு வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மாமியையும் மருமகளையும் கொடிகாமம் பொலிஸார் கடந்த மாதம் மிருசுவில் தவசிகுளம் பகுதியில் வைத்துக் கைது செய்தனர்.

இந்த இருவரையும் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியபோது நேற்று முன்தினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மருமகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் இரண்டு வருடம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. குறித்த பெண் தனது தவறை மன்னிக்குமாறு நீதிமன்றில் பகிரங்கமாக மன்னிப்புக் கோரியதையடுத்து சிறைத்தண்டனையை ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைத்ததுடன் 50 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்தார்.

இதேவேளை மாமியார் சுற்றவாளியெனக் கூறியதால் 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டார். (ற-ஜ-9)



சாவகச்சேரி கல்வயல் டேனிஜா மழலைகள் கல்விப் பூங்கா சிறார்களின் கலைவிழா அண்மையில் முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் சிறார்களின் ஆங்கிலக் குழுப் பாடல் நிகழ்வும் இடம்பெற்றது. (ற-ஜ-9)

## மருந்தாளர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,டிசெ.11
யாழ் பிராந்திய சுகாதாரத்திணைக்களத்தின் கீழ் இயங்கும் பல வைத்தியசாலைகளில் மீள் நியமனத்தில் கடமையாற்றுவதற்குத் தகுதியான 65 வயதுக்குட்பட்ட மருந்தாளர்கள், மருந்துக் கலவையாளருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பதவிகளுக்கு வைத்தியசாலைகளில் பற்றாக்குறை நிலவுவதால் பணியாற்ற விருப்புடையவர்கள் வடமாகாண அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இதற்கு ஏதுவாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையுடன் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொண்டு விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க.நந்தகுமாரன் அறிவித்துள்ளார். (ற-ஜ-ரி6)

## சித்திரப் போட்டியும் பரிசில் வழங்கலும்

கிளிநொச்சி, டிசெ.11
உலக உளநல தினத்தை முன்னிட்டு சித்திரப் போட்டியும் பரிசில் வழங்கல் நிகழ்வும் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவுக் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் எஸ். அருமை நாயகம் கலந்து கொள்ளவுள்ளார். (ற-ஜ-ரி5)

## பாரதியாரின் பிறந்த தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ.11
றோஜாக் கூட்டம் சிறுவர் கழகம் நடத்தும் பாரதியாரின் பிறந்த தின நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளன.

இதன் போது பாரதியாரின் பிறந்த தினத்தை முன்னிட்டு தரம் 1 முதல் தரம் 11 வரையான மாணவர்களுக் கிடையில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படும். (ற-ஜ-7)

# தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்குத் தொற்று அதிகரிப்பு

## விழிப்புடன் இருக்குமாறு சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை

சாவகச்சேரி,டிசெ.11
தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்குத் தொற்று வேகமாக அதிகரித்து வருகின்றது. அதனால் பொதுமக்கள் தமது காணிகள், குடியிருப்புகள் போன்றவற்றை துப்புரவாக வைத்திருக்குமாறு சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த எட்டு நாள்களில் 20க்கும் மேற்பட்டோர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன் தினமும் பெருமளவானோர் டெங்குக் காய்ச்சலின் அறிகுறியுடன் வைத்தியசாலைக்கு வந்தவண்ணம் உள்ளனர்.

அண்மையில் பெய்த மழையையடுத்து அனைத்து இடங்களிலும் வெள்ளம் தேங்கியுள்ளது. இந்த இடங்களில் டெங்கு நுளம்பின் உற்பத்தி அதிகமாகக் காணப்படும் அபாயம் உள்ளதால் அங்குள்ள பாவனைக்குதவாத பொருள்களில் நீர் தேங்கி நிற்கவிடாமல் துப்புரவாக வைத்திருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாகச் சிறு பிள்ளைகள் சிறு நீர் நிலைகளில் விளையாடும்போது, அங்கு தங்கியுள்ள டெங்கு நுளம்புகளால் தாக்கப்பட்டுப் பாதிக்கும் நிலை ஏற்படும். அதனால் நீர்நிலைகளில் காணப்படும் ரயர், பிளாஸ்ரிக் பொருள்கள் பொலித்தீன் தாள்கள், பிளாஸ்ரிக் குவளைகள், இளநீர்க் கோம்பைகள் போன்றவற்றை அப்புறப்படுத்துமாறும் சுகாதாரப் ப்குதியினர் அறிவித்துள்ளனர். (ற-ஜ-9)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், டிசெ.11
வண்ணை- சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகத்தால், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சைவ வினா விடைப் பரீட்சை பரிசளிப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ற-ஜ-ரி6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கடல் வளம் அழிவதை விரும்புகின்றதா இராணுவம்?

## சிவமோகன் எம்.பி சபையில் கேள்வி



கொழும்பு, டிசெ. 11
விடுதலைப் புலிகளின் காலம் வரை பாதுகாப்பாக இருந்த வட பகுதி கடல் வளம் இன்று அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்று தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், இதை இராணுவம் பார்த்துக் கொண்டிருக்கப் போகின்றதா என்றும் வினா தொடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கடற்றொழில் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

முத்துக்குளிக்கும் பூமி என்றும், இரத்தினக்கல் உதிக்கும் பூமி என்றும், அமைதிப் பூங்கா என்றும், ஒட்டுமொத்தத்தில் அழகிய தீவு என்றும் இலங்கை வர்ணிக்கப்பட்டது. ஆனால், இன்று அனைத்தும் அழிக்கப்பட்ட அபாய பூமியாக நாடு மாறிக் கொண்டிருக்கின்றது.

வடக்கில் கடல் வளம் அழிக்கப்படுகின்றது. சட்டவிரோதமாக அட்டைபிடிக்கும் நடவடிக்கை நடைபெறுகின்றது. கடந்தகால இரத்த வரலாற்று அரசு செய்ததைத் தான் இன்று நல்லாட்சி என்றபோர்வையில் மைத்திரி அரசும் அமைதியாகச் செய்து வருகின்றது.

வடக்கில் சாலைக் கடற்கரையில் அட்டை பிடிப்புத் தொழில் சட்டவிரோதமான நடைமுறைகளைப் பின்பற்றி முன்னெடுக்கபடுகின்றது. ஆயிரக்கணக்கான வள்ளங்களில் வேற்று மாவட்டத்தவர்கள் அமைச்சர்களின் ஆதரவுடன் மாத்தளன், பொக்கணை போன்ற பிரதேசங்களில் சட்டவிரோதமாக அட்டைபிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த வருடமும் ஈடுபட்டிருந்தார்கள். இவ்வருடமும் வருவார்கள் என எதிர் பார்க்கப்படுகின்றது. இதனால் மீன்வளம் அழிக்கப்பட்டு மக்கள் வறுமையைத் தொட்டுக் கொண்டிருக்கின்றனர்.

சட்டத்துக்கு உட்பட்ட வகையில் அட்டை பிடிப்பு இடம்பெற்றால் அதை நாம் எதிர்க்கப்போவதில்லை. ஆனால், ஒருசில அமைச்சர்களின் அடிவருடிகள் இராணுவத்தின் காவலுடன் சட்டவிரோதமாக அட்டை பிடித்து வருகின்றனர். சட்டவிரோதச் செயற்பாட்டுக்கு இராணுவம் காவல் காப்பதா?

அதேவேளை, இந்தியட்ரோலர்கள் அள்ளு வலைகளைப் பயன்படுத்தி – தடை செய்யப்பட்ட முறைகளைக் கையாண்டு முல்லைத்தீவுக் கடலில் மீன் பிடிக்கும் தொழிலைத் தொடங்கியுள்ளனர். இதனால் எமது மக்கள் பரிதவித்துப் போயுள்ளனர். எமது மீன் வளங்கள் அழிக்கப்படுவதைத் தடுக்காது இந்த அரசு அமைதி காக்குமானால், முல்லைத்தீவு மண்ணிலும், மன்னார் தீவிலும் எமது அஹிம்சைப் போராட்டங்கள் வெடிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உணவு தவிர்ப்புப் போராட்டங்கள் தானாக உதிக்கும். உயிர்ப் பலிகள் மீண்டும் இந்த நல்லாட்சி அரசுக்குச் சமர்ப்பணம் செய்யப்படும். நல்லாட்சி என்ற உங்கள் பெயர் ஏமாற்று அரசாகக் கூடாது. இந்திய ரோலர் படகுகளைத் தடுத்து நிறுத்துங்கள். வெளிமாவட்ட மீனவர்களின் ஊடுருவலையும் தடுத்து நிறுத்துங்கள் – என்றார். (த-5-சி)



இலங்கை அஹமதியா இஸ்லாமிய ஜமாத்தின் அங்கத்தவர்கள் நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனை நாடாளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் சந்தித்து திருக்குர் ஆனின் சிங்கள மொழி பெயர்ப்பின் பிரதி ஒன்றைக் கையளித்தனர். (த)

# தடுப்பில் இருக்கும் புலிகள் தமது கொள்கையில் உறுதி

## அவர்களை விடுவித்தால் ஆபத்து என்கிறார் கோத்தா

கொழும்பு, டிசெ.11
தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் இன்னமும் தங்கள் கொள்கையில் உறுதியாக, இருக்கின்றனர். அவர்களை விடுவித்தால் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் உறுப்பினர்கள் மீது தமது செல்வாக்கைச் செலுத்துவார்கள். இவ்வாறு முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரசு விரைவில் விடுதலை செய்யவுள்ள விடுதலைப் புலி உறுப்பினர்களில் கொழும்பில் இடம்பெற்ற அனைத்து முக்கிய தாக்குதல்களையும் திட்டமிட்டு நடத்திய தமிழீழ விடுதலைப் புலிகளின் இரு முக்கிய உறுப்பினர்கள் உள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் கோத்தபாய ராஜபக்ச மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

விடுதலை செய்யப்படவுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் இரண்டு முக்கிய உறுப்பினர்களில் ஒருவரின் பெயர் மொறிஸ். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கொழும்புத் தாக்குதல் திட்டத்தின் சூத்திரதாரி இவரே.

முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா மீதான தாக்குதலின் முக்கிய சூத்திரதாரியும் மொறிஸ் தான். இவரே சரத் பொன் சேகா மீது தற்கொலை தாக்கு தலை மேற்கொண்ட பெண்ணை மோட்டார் சைக்கிளில் அழைத்து வந்தவர். மற்றைய நபர் ஜின் என்ற பெயரினால் இனம் காணப்படுபவர்.

விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களுக்குப் பொதுமன்னிப்பை வழங்க வேண்டும் என அழுத்தம் கொடுப்பவர்களுக்கு அவர்கள் என்ன சூழ்நிலையில் கைதுசெய்யப்பட்டார்கள் எனத் தெரியாது.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்கள் உட்பட பலர் விடுதலை செய்யப்பட்டனர். இவ்வாறு விடுவிக்கப்படாமலிருந்தவர்கள் தேசிய பாதுகாப்புக்குக் கடும் ஆபத்தை ஏற்படுத்த கூடியவர்கள்.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் சிலர் விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பொறுப்பாளர் பொட்டம்மானுடன் தொடர்பிலிருந்தனர். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சில உறுப்பினர்கள் மத்தியில் மேற்கொண்ட ஆய்வின் போது அவர்கள் இன்னமும் தங்கள் கொள்கையில் உறுதியாகயிருப்பது தெரிய வந்தது.

அவர்களால் புனர்வாழ்வு அளிக்கப் பட்டவர்கள் மீது செல்வாக்கைச் செலுத்த முடியும். புலனாய்வுப் பிரிவினர் இவர்களைக் கைது செய்வதற்கு மிகுந்த சிரமங்களை எதிர் கொண்டனர் – என்றார். (த-வ)

### மரண அறிவித்தல்



திருமதி **சின்னம்மா (சின்னமணி) சத்துருசிங்கம்**

ஆனைக்கோட்டை ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா (சின்னமணி) சத்துருசிங்கம் 05.12.2015 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பையா-சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சத்துருசிங்கத்தின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2015) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் பாடசாலை வீதி, ஆறுகால் மடத்தில் அமைந்துள்ள அவரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாடசாலை வீதி, ஆறுகால்மடம். (66903)(11.15.17.18) தகவல்: **பிள்ளைகள்**

# சிறிபால டி சில்வா-வெல்கம சபையில் கடும் சொற்போர்

கொழும்பு, டிசெ. 11
போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கும், அதே கட்சியைச் சேர்ந்த முன்னாள் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவுக்கும் இடையில் சபையில் நேற்றுக் முன் தினம் கடும் சொற்போர் மூண்டது.

மகிந்தவின் அமைச்சரவையில் இருக்கும்போது எல்லாவற்றுக்கும் கை உயர்த்திவிட்டு, இன்று குழந்தைபோல் பேசவேண்டாம், என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவைக் குமார வெல்கம விமர்சித்தார். இதற்குப் பதிலடி கொடுத்த அமைச்சர் நிமல், நீங்கள் தான் பால் குடிக்கும் குழந்தை போல் பேசுகின்றீர்கள். நான் அமைச்சுப்பதவியைஏற்றதுதான் உங்களுக்கு வருத்தமாக இருக்கின்றது போல் தெரிகின்றது என்றார்.

போக்குவரத்து அமைச்சுக்கான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய முன்னாள் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம, தேசிய அரசில் இணைவதற்கு மறுப்பதாலேயே என் மீது சேறு பூசும் வகையில் பரப்புரை முன்னெடுக்கப்படுகின்றது. 2 ஆயிரத்து 100 பஸ்கள் தவணை முறையிலான கட்டண அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட விடயத்தில் 10 கோடி ரூபா தரகுப் பணம் பெறப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது. இது பற்றி விசாரணை இடம்பெறுகின்றது. அதற்கு முகம் கொடுப்பதற்கு நான் தயார் என்று குறிப்பிட்டார்.

குறிப்பாக, தற்போதைய போக்குவரத்து அமைச்சரின் செயற்பாடுகளையும் அவர் விமர்சித்துக் கருத்து வெளியிட்டார்.

முன்னாள் போக்குவரத்து அமைச்சர் இவ்வாறு உரையாற்றுவதை போக்குவரத்து அமைச்சரான நிமல் சிறிபால டி சில்வா கவனமாக செவிமடுத்துக் கொண்டிருந்தார். குமார் வெல்கம உரையாற்றிமுடிவடைந்தபின்னர், அடுத்த பேச்சாளராக அமைச்சர் நிமலின் பெயர் அழைக்கப்பட்டது.

இதன்படி உரையாற்றுவதற்கு ஆரம்பித்த நிமல், ஆரம்பம் முதலே முன்னாள் போக்குவரத்து அமைச்சரான குமார் வெல்கமவின் கருத்துகளுக்குப் பதிலடி கொடுக்க ஆரம்பித்தார். கடந்த காலங்களில் போக்குவரத்து துறைக்கு உரிய வகையில் ஆட்சேர்ப்பு இடம்பெறவில்லை. எதற்காக அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்களோ அந்த வேலையை விடுத்து மற்றைய வேலையையே செய்கின்றனர். அண்மையில் நான் யாழ்ப்பாணம் டிப்போவுக்குச் சென்றிருந்தேன். பஸ் நடத்துநர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டிருந்த எட்டுபேர் அந்த வேலையை விடுத்து, டிப்போ கண்காணிப்பாளர்களாகச் செயற்படுகின்றனர். நிலைமை இவ்வாறுதான் இருக்கின்றது என்று பட்டியலிட்டுக் காட்டிப் பேசினார்.

இதனால், கொதிப்படைந்த குமார வெல்கம, இடையிடையே குறுக்கீடுகளைச் செய்து கொண்டிருந்தார். ஆனாலும், நிமல் சிறிபால டி சில்வா ஓயவில்லை. கடந்த ஐந்து வருடங்களில் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி ஆகியன செலுத்தப்படவில்லை. இதன் தொகை 10 ஆயிரத்து 800 மில்லியன் ஆகும். இவற்றைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்காதவர்கள்தான் இன்று கத்துகின்றனர் என்றார் நிமல்.

இதன்போது எழுந்த குமார வெல்கம, மேற்படி கட்ட ணங் களைச் செலுத்துவதற்குப் பொறிமுறையொன்று உருவாக்கப்பட்டது ஆனால், அதற்குள் ஆட்சி கவிழ்ந்து விட்டது என்று குறிப்பிட்டார்.

இதன் பின்னர் ரயில் சேவையில் கடந்த காலங்களில் நடந்த முறைகேடுகள் தொடர்பில் அமைச்சர் நிமல் குறிப்பிட்டார். இதன்போது குறுக்கிட்ட குமார வெல்கம, இவ்வாறு நடக்கும் போது நீங்களும் எமது அமைச்சரவையில்தானே இருந்தீர்கள். அப்போது கை உயர்த்திவிட்டு, இன்று ஏன் குறை கூறுகின்றீர்கள். குழந்தைபோல் கதைக்கின்றீர்கள் என்று கடுந்தொனியில் கேள்வி எழுப்பினார்.

இதனால் சீற்றமடைந்த நிமல், நீங்கள் பேசும்போது நான் கேட்டுக் கொண்டிருந்தேன். எனவே, எனது உரையைக் குழப்ப வேண்டாம். அமைச்சரவையில் இருந்தேன். ஆனால், போக்குவரத்து அமைச்சராக நான் இருக்கவில்லை. அமைச்சுப் பணிகளை உரிய வகையில் முன்னெடுத்திருந்தால் இப்படிப் பிரச்சினை ஏற்பட்டிருக்காது. பால் குடிக்கும் குழந்தைபோல் கருத்து வெளியிடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்காது என்று பதிலடி கொடுத்தார்.

அத்துடன், கடன் சுமையில் சிக்கிய அமைச்சுதான் எனக்கு வழங்கப்பட்டுள்ளது என நிமல் குறிப்பிடுகையில் இடைமறித்த குமார வெல்கம, அப்படியானால் எதற்காக அமைச்சுப் பதவியை ஏற்றீர்கள் என்று வினா எழுப்பினார்.

ஆமாம். நான் அமைச்சுப் பதவி ஏற்றதுதான் உங்களுக்கு வருத்தமளிக்கின்றது போல் தெரிகின்றது. உங்களால் செய்ய முடியாமல் போனவற்றை நாம் செய்து வருகின்றோம். செய்து காட்டுவோம் – என்று பதில் வழங்கினார் நிமல். (த-5-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னைப் படுகொலை செய்ய திட்டமிட்டவருக்கு மன்னிப்பு

## சரத் பொன்சேகா தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.11
தன்னைப் படுகொலைசெய்வதற்கான தற்கொலைக் குண்டுத் தாக்குதலைத் திட்டமிட்ட, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினருக்கு மன்னிப்பு வழங்கத் தயார்.
இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஸல் சரத் பொன்சேகா.
1971ஆம் ஆண்டு மற்றும் 1987 ஆம் ஆண்டுகள் போன்ற காலப்பகுதியில் கிளர்ச்சியில் ஈடு பட்ட சிங்கள இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில், ஏன் தமிழ் இளைஞர்களை விடுதலை செய்ய முடியாது எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.
சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் மொறிஸ், முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவைக் கொலை செய்ய முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார்.
அவரை விடுதலை செய்யவதற்கு அரசு தீர்மானித்திருப்பது ஆபத் தானது என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச வெளியிட்ட கருத்துக்குப் பதிலளிக்கும் வகையில் சரத் பொன்சேகா இதனைக் குறிப்பிட்டுள்ளார்.
இது தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிட்டுள்ள பீல்ட் மார்ஸல் சரத் பொன்சேகா,
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் இரண்டு உறுப்பினர்கள் விடுதலை தொடர்பில் கோத்தபாய முக்கியமான கருத்து வெளியிட்டிருந்தார்.
ஆனால் தெற்கில் இடம்பெற்ற கிளர்ச்சிகளுக்குத் தலைமை தாங்கியவர்கள் எவரும் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படவில்லை. கிளர்ச்சியின் முக்கிய தலைவர்களான சோமவன்ச அமரசிங்க போன்றவர்கள் பிற்காலத்தில் கட்சித் தலைவர்களாகவும் அமைச்சர்களாகவும் உருவெடுத்தனர்.

> சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் மொறிஸ், முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவைக் கொலை செய்ய முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார்.

2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி ஓர் விசித்திரமான சம்பவமொன்று என் வாழ்க்கையில் இடம்பெற்றது. என்னைப் படுகொலை செய்வதற்கு முயற்சித்த பிரதான சூத்திரதாரியைக் கைதியாகக் கொழும்பு மேல் நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர். இதன்போது அவரும் நானும் ஒரே ஆசனத் தொடரில் இருந்தமையால் சந்திக்க நேரிட்டது. குறித்த சந்தேக நபரிடம் நான் சிறிது நேரம் பேசினேன்.
மொறிஸ், பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில், தற்கொலைக் குண்டுதாரி குண்டை வெடிக்க வைத்தபோது தான் காலிமுகத்திடலில் இருந்ததாகக் கூறியிருந்தார். எனினும் என்னுடன் பேசும்போது, தான் இராணுவத் தலைமையகத்தினுள் இருந்ததாகக் குறிப்பிட்டார். இவ்வாறான நபர்களுக்குப் புனர் வாழ்வு அளித்து அவர்களை சமூகத் துடன் இணைக்க வேண்டியது மிகவும் அவசியமானது. அது எமது கடமை.-என்றார். (த-வ)




## சகவாழ்வுக்கான முன்னோடி நடவடிக்கை

பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதச் சட்டத்தை நீக்க வலியுறுத்தி சர்வ மதக் குழுவினர் யாழ் நகர்ப் பகுதியில் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்ததுடன் கையெழுத்துப் பெறும் நடவடிக்கையையும் ஆரம்பித்தனர்.



யாழ். மாவட்ட சர்வமதக் குழு இதனை ஏற்பாடு செய்திருந்தது. யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம், யாழ் நாகவிகாரை ஸ்ரீவிமல தேரர், ஜம்மியத்துல் உலமாவின் அஸீஸ் மௌலவி, நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர ஞானதேசிக பரமாச்சாரிய சுவாமிக்ள், இந்துக் அர்ச்சகர் கிருபானந்தக் குருக்கள், தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்திலிருந்து ஆறு.திருமுருகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
'சகவாழ்வுக்கான முன்னோடி நடவடிக்கை' என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட்டால் அரசியல் கைதிகளின் விடுதலை சாத்தியம் எனவும், சிறுபான்மையை ஒடுக்கும் பயங்கரவாதச் சட்டத்தை நீக்குவதற்காகவே இந்த திட்டம் என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.
நேற்று நாகவிகாரை, நல்லைஆதீனம், யாகப்பர் ஆலயம் ஆகியவற்றில் நடைபெற்ற கையெழுத்துச் செயற்பாடு இன்று வெள்ளி 12.30 மணிக்கு ஜும்மா பள்ளியில் நடைபெறவுள்ளது. (ற-10,106)



# சூடு பிடிக்கிறது தாஜுதீன் கொலை வழக்கு

## பிரதிப் பொலிஸ்மா அதிபரையும் சட்ட மருத்துவரையும் விசாரிக்குமாறு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, டிசெ. 11
பிரபல றக்பி விளையாட்டு வீரர் வசிம் தாஜுதீனின் கொலை தொடர்பான விடயம் பெரும் பூதாகரமாக மாறிவரும் நிலையில், முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனநாயக்க மற்றும் முன்னாள் சட்ட வைத்திய அதிகாரி ஆகியோரை விசாரணை செய்யுமாறு குற்றப்புலனாய்வு அதிகாரிகளுக்கு நீதிமன்று அதிரடி உத்தரவைப் பிறப்பித்துள்ளது.
கொழும்பு மேலதிக நீதிவான் நிசாந்த பீரிஸ் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.
பிரபல றக்பி விளையாட்டு வீரர் வசிம் தாஜுதீன் நாரஹேன்பிட்டி சாலிகா மைதானத்துக்கு அருகில் 2012 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டார். அப்போது மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலம். அவர் விபத்தில் உயிரிழந்தார் என்று கூறப்பட்டு உடல் அடக்கம் செய்யப்பட்டது.
ஆனால் தாஜுதீனின் உயிரிழப்புத் தொடர்பில் சந்தேகம் இருப்பதாக அவரது உறவினர் கூறி வந்தனர். இந்தநிலையில் ஆட்சி மாறிய பின்னர் தாஜுதீனின் உயிரிழப்புத் தொடர்பில் உரிய விசாரணை நடத்த வேண்டும் என்று கோரினர். அதன்படி அவரது வழக்கை மீள விசாரிக்க நீதிமன்று அனுமதி வழங்கியது. அதன்படி தாஜுதீனின் சடலம் மீளத் தோண்டி எடுக்கப்பட்டு மீளவும் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தப்பட்டது. அதன்போதே பல உண்மைகள் வெளிச்சத்துக்கு வந்தன. அவருடைய உயிரிழப்புத் தொடர்பில் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொண்ட சட்ட வைத்திய அதிகாரி அஜித் தென்னக்கோன் தலைமையிலான குழுவினர் தயாரித்த அறிக்கையின்படி விசாரணை மேற்கொண்ட நீதிமன்று தாஜுதீன் கொலை செய்யப்பட்டுள்ளார் என்ற முடிவுக்கு வந்தது.
தாஜுதீன் உயிரிழக்க முன்னர் அவரது வாகனத்தை தாஜுதீன் செலுத்தவில்லை. கொலை செய்யப்பட்டதன் பின்னர் அவருடைய சடலம், அந்தக் காரின் சாரதி ஆசனத்தில் வைக்கப்பட்டது. அதன்பின்னர் விபத்து ஏற்பட்டமை போன்ற தோரணையை உருவாக்கி அவர் விபத்தில் உயிரிழந்தார் என்று கூறப்பட்டுச் சடலம் புதைக்கப்பட்டமை தெரியவந்தது. தாஜுதீனின் கழுத்து, பாதங்கள் மற்றும் நெஞ்சு ஆகிய இடங்களில் கடுங்காயங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்ததாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அவரது உடலிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட டி.என்.ஏ மாதிரிகள் அவருடைய தாயின் டி.என்.ஏ மாதிரிகளுடன் ஒத்துப் போகின்றன என்று ஜீன்ரெக் நிறுவனத்தின் சிரேஷ்ட விஞ்ஞானியான ஜே. இளயப்பெரும, கொழும்பு மேலதிக நீதிவான் நிசாந்த பீரிஸின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.
இந்த நிலையில் விசாரணை மேற்கொண்ட குற்றப் புலனாய்வுப் பிரிவு கொலையுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கும் நபர்களைக் கைது செய்ய நீதிமன்றின் அனுமதிக்காகக் காத்திருப்பதாகத் தெரிவித்திருந்தது. இதன்படி நேற்று அந்த உத்தரவை நீதிவான் நிசாந்த பீரிஸ் பிறப்பித்தார்.
இதுதவிர, தாஜுதீனின் உடற் பாகங்கள் சில காணாமற்போனமை தொடர்பில், தாம் அறிந்திருக்கவில்லை என்று கொழும்பு முன்னாள் சட்ட வைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகர தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் நீதிமன்றுக்கு அவர் நேற்று அறிக்கை சமர்ப்பித்தார். பிரேத பரிசோதனை செய்து, சடலத்தின் சில பாகங்களைக் குளிரூட்டியில் வைப்பதற்கு ஆலோசனை வழங்கியதாகவும், பின்னர் 2013 ஜுன் மாதம் 3 ஆம் திகதி தாம் ஓய்வு பெற்றுச் சென்ற நிலையில், அதன் பின்னரான காலப் பகுதியில் நிகழ்ந்தவை தொடர்பில் தமக்குத் தெரியாது என்றும் அவர் கூறினார். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர் தம் வாழ்விடங்களை வெட்டித் தறிக்கும் போக்கா?

**கா**ல் நூற்றாண்டுக்கு முன்னர் வாழ்ந்ததாகக் கூறி, முல்லைத்தீவின் ஒரு பகுதியில், தம்மை மீளக்குடியேறுவதற்கு அனுமதிக்குமாறு, பெரும்பான்மை இனமக்கள் கூட்டம் ஒன்று ஆலாய்ப் பறக்கிறது. அதன் பொருட்டு முல்லை. மாவட்ட செயலகத்தில் பதிவுகளை மேற் கொண்டுள்ளதான தகவலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தின் மீள்குடியேற்ற அமைச்சர் ப.சத்தியலிங்கம் தலைமையில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த விடயம் - விவகாரம், வெளிச்சத்துக்கு வந்தது.

குறிப்பிட்ட, பெரும்பான்மை இனமக்கள் - மொத்தம் இருநூற்று எழுபத்தொரு குடும்பத்தினர் - தாம் முன்னர் குடியிருந்த காணியை வழங்க வேண்டும் என்று கோரியுள்ளனர்.

போர் காரணமாகத் தாம் இடம்பெயர்ந்ததாகவும், மீளவும் தமது காணிகளைத் திரும்பத் தருமாறும் கேட்டிருந்தனர்.

கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு ஆகிய கிராம சேவகர்கள் பிரிவுகளில் தாம் வசித்ததாகவும், அவற்றில் குடியிருக்க வசதி செய்து தருமாறும் 271 குடும்பங்களும் தெரிவித்துள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய மீள் குடியேற்றங்கள் குறித்து ஆராயப்படும்வேளையில், இது குறித்துக் கவனத்தில் கொள்ளப்படும் என்று முடிவாகியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில், முல்லைத்தீவில் - கொக்கிளாய்ப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட விகாரை திறந்து வைக்கப்பட்டது. அதனையடுத்து, 271 பெரும்பான்மை இனக் குடும்பங்களின் நிலக் கோரிக்கை எழுந்துள்ளது.

வடக்கின் நிலை மேற்கண்டவாறு உயர்ந்து நிற்க, கிழக்கில், மட்டக்களப்பு மாவட்டத்தில், தமிழ் மக்களுக்குச் சொந்தமான வயல் நிலங்கள் மட்டுமன்றி, அவர்களின் வீடுகளையும் இருப்பிடங்களையும் பெரும்பான்மை இனத்தவர் தற்போதும் அபகரித்து வருவதாகத் தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின், சட்டம் மற்றும் கொள்கைப் பிரிவு இந்த நிலைமையை ஆவணப்படுத்தியுள்ளது. ஆகப் பிந்திய மேற் படி அத்துமீறலை அந்த அமைப்பு அம்பலமாக்கியுள்ளது!

இன்னொரு புறத்தில் --

முல்லைத்தீவு மாவட்டத்தில், தமிழ் மக்களுக்குச் சொந்தமான பதின்மூன்று ஆயிரத்து நானூற்று எண்பத்தேழு (13,487) ஏக்கர் காணி முப்படைகளின் கைவசம் உள்ளன. 702 ஏக்கர் காணி உறுதிக் காணிகளாக படையினர் வசம் உள்ளன! மேலும், 1983 ஆம் ஆண்டு தொடக்கம், பெரும்பான்மை இனத்தவரின் குடியேற்றங்களுக்காக பல்லாயிரக்கணக்கான ஏக்கர் தமிழர் மண் - நிலங்கள் - பறித்தெடுக்கப்பட்டமை பிறிதொரு கொடுங்கோன்மை அத்தியாயம்.

யாரொடு நோவோம், யார்க்கு எடுத்துரைப்போம் என்ற கையறு நிலையில் தமிழ் மக்கள். நல்லாட்சி அரசு அவ்வழி நடப்பின் நாம் என் செய்வோம்...?...! தமிழர்களின் பூர்வீக வாழ்விடங்களை வெட்டித் தறிக்கும் போக்கு ஏன்? உள்ளார்ந்த நோக்கம் எதுவோ...? வெளிப்படுத்துவார்களா அரச தரப்பினர்...??

# மீண்டும் சூடு பிடித்துள்ள அவன்கார்ட் விவகாரம்

ரெங்கன்

அவன்கார்ட் மிதக்கும் ஆயுதக்களஞ்சிய விவகார விசாரணைகள் கைவிடப்படும் நிலைக்குச் சென்றிருந்த வேளையில் எதிர்த்தரப்பில் ஜே.வி.பியும் அரசதரப்பில் முக்கிய சில அமைச்சர்களும் கிளர்ந் தெழுந்து போர்க் கொடிஉயர்த்தியதன் விளைவாக இப்போது அந்த விவகாரம் மீண்டும் சூடு பிடித்திருப்பதாகத் தெரிகின்றது.

### பதவி இழந்த மாரப்பன

அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் சார்பில் சட்ட வல்லுநராகச் செயற்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் திலக் மாரப்பன நாடாளுமன்றத்திலும் அந்த நிறுவனத்துக்குச் சார்பாகவும் அதனைக் காப்பாற்றும் விதத்திலும் கருத்துக்களை முன்வைத்தமையால் பெரும் சர்ச்சைகளுக்குள்ளாகி அவர் அமைச்சர் பதவியை இழந்து நிற்கின்றார். அதே விவகாரத்தில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச கைதாவதைத் தடுத்து நிறுத்தியமைக்குத் தாமே பொறுப்பு என்று பெருமையுடன் அறிவித்துக் கொண்ட நீதியமைச்சர் விஜயதாசராஜபக்சவும் இப்போது சர்ச்சைகளுக்குள்ளாகியிருப்பதாகத் தெரிகின்றது. விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் முக்கியமான ஒருவரைக் கைதாவதிலிருந்து காப்பாற்றியமைக்குத் தாமே பொறுப்பு என்று ஓர் அமைச்சர் அதுவும் நீதித்துறைக்குப் பொறுப்பானவர் கூறியிருப்பதும் அதன் மீது சர்ச்சை எழுந்திருப்பதும் ஆச்சரியமில்லை. இவை குறித்து ஜனாதிபதியும் பிரதமரும் எந்த வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப் போகிறார்கள் என்பதை இனிமேல் தான் பார்க்க வேண்டும்.

அவன்கார்ட் விவகாரம் அரச தலைவர்களுக்குப் பெரும் சிக்கல்களைத் தோற்றுவித்துள்ள அதே நேரம் இப்பொழுது இன்னுமொரு சிக்கல் வெளியாகியிருப் பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அதுதான் திருகோணமலை கடற்படையினரால் நிர்வகிக்கப் பட்டுள்ளதாக வெளிவந்துள்ள இரகசிய வதை முகாம் பற்றிய தகவலாகும்.

### திருகோணமலையில் வதை முகாம்கள்

இவ்வாறான வதை முகாம்கள் இராணுவ மற்றும் கடற்படை முகாம்களில் இருந்துள்ளன என்றவாறான குற்றச்சாட்டுக்கள் சில காலத்துக்கு முன்னரும் தமிழ்த் தரப்பினரால் முன்வைக்கப்பட்டிருந்தன. ஆனால் அப்படி ஏதுவும் கிடையாது என்று அரசதரப்பின் இராணுவ அதிகாரிகள் மறுத்திருந்தனர். அண்மையில் இலங்கை வந்திருந்த காணாமற்போகச் செய்யப்பட்டோர் தொடர்பான ஐ.நா. ஆய்வுக் குழுவினர் நேரடியாகவே திருகோணமலைக்குச் சென்று ஆராய்ந்து உறுதி செய்து கொண்டதன் பின்னர் கொழும்பில் பத்திரிகையாளர்களிடம் அது பற்றிய விவரங்களையும் அந்த முகாம்களில் கைதிகள் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப் பட்டிருக்கலாம் என்ற தமது ஐயப்பாட்டையும் வெளியிட்டுள்ளனர். அந்தக் குழுவினர் இந்த விவகாரங்களை அரச தலைவர்களிடம் முன் கூட்டியே கலந்தாலோசித்திருப்பதால் அரசு புலனாய்வுகளை முடுக்கி விட்டிருப்பது தெரிய வந்துள்ளது.





கடந்த வாரம் இந்த விவகாரம் நாடாளுமன்றத்தில் கிளப்பப்பட்டு வதை முகாமில் இருந்துள்ளவர்களுக்கு என்ன நேர்ந்தது. அவர்கள் இப்பொழுது எங்கு இருக்கிறார்கள் என்றவாறு தமிழர் தரப்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

### வதை முகாம்களை உறுதிப் படுத்தும் யஸ்மின் சூகா

இதற்கிடையில் கடந்த காலத்தில் இரகசிய வதை முகாம்கள் ஏதும் செயற்படவில்லை என்பதாக கடற்படையின் முன்னாள் தளபதியானவசந்தகரன்னகொடசெவ்வி ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

> “கடந்த வாரம் இந்த விவகாரம் நாடாளுமன்றத்தில் கிளப்பப்பட்டு வதை முகாமில் இருந்துள்ளவர்களுக்கு என்ன நேர்ந்தது. அவர்கள் இப்பொழுது எங்கு இருக்கிறார்கள் என்றவாறு தமிழர் தரப்பில் கேள்வி எழுப்பப்பட்டது.”

திருகோணமலையில்காணப்பட்ட இரகசிய அறைகள் 2 ஆம் உலகப் போரின் போது பதுங்குகுழிகளாகப் பயன்படுத் தப்பட்டவை. அவைகளில் தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து பிரிந்து வந்து அரச படைகளுடன் சேர்ந்து போரிட்டவர்களுக்காகவே பயன்படுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஆனால், சர்வதேச மட்டத்தில் இலங்கை விவகாரங்களை உன்னிப்பாக அவதானித்து வரும் சர்வதேச உண்மை மற்றும் நீதித்திட்ட அமைப்பின் நிறைவேற்று அதிகாரியும் ஐ.நா. செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்ட தருஸ்மன் தலைமையிலான நிபுணர் குழுவில் ஒருவராகப் பணியாற்றிய வருமான யஸ்மின் சூகா வெளியிட்டுள்ளதொரு அறிக்கையில் சித்திரவதைக்கூடத்தை இயக்கியவர்கள் பற்றிய விவரங்களை வெளியிடத் தயார் – விவரங்கள் எம்மிடமுள்ளன. சாட்சிகளின் தகவல்கள் ஆதாரங்களுடன் வழங்கப்படும். இதில் தொடர்புடைய பத்து கடற்படை அலுவலர்கள்,அவர்கள் வகித்த பங்கு, முதலியவற்றை இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட ஐ.நா. குழுவினருக்கு வழங்கியுள்ளோம் என்று தெரிவித்திருப்பது அதிர்ச்சியை அளித்துள்ளது.

இலங்கையில்நடந்த-நடக்கின்ற சம்பவங்களை முன்னைய அரசைப் போல இன்றைய அரசும் கூட மறைக்க முயலுமானால் அவை பயனளிக்கப் போவதில்லை. குற்றம் இழைத்தவர்கள் எப்படிப்பட்டவர்களானாலும் – எந்தப் பதவியிலிருந்தாலும் விசாரணைக்குட்படுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்பதை உலகம் விழிப்புடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதையே யஸ்மின் சூகாவின் அறிக்கை வெளிப்படுத்தி நிற்கின்றது எனலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.ஐ.முபாறக்

# ஐ.எஸ். இயக்கத்தை தோற்கடிக்க முடியுமா?



ஒரு காலத்தில் அமெரிக்காவுக்கும் அதன் நேச நாடுகளுக்கும் பெரும் தலையிடியாக இருந்த ஓர் இயக்கம் என்றால் அது அல் - கைதா இயக்கம்தான். அதன் முன்னாள் தலைவர் ஒசாமா பின் லேடன் உலகம் முழுவதும் மிகவும் பிரபல்யமடைந்தவர்.

ஆனால், இப்போது அந்த நிலை மாறி விட்டது. அல் - குவைதாவைத் தூக்கிச் சாப்பிடும் அளவுக்கு மிகவும் பிரமாண்டமான ஆயுதக் குழுவொன்று உருவாகியுள்ளது அதுதான் ஐ.எஸ்.இயக்கம்.

இன்று உலகம் முழுவதும் பேசப்படுகின்ற அமைப்பாகவும் எல்லோரையும் அச்சமடையச் செய்யும் இயக்கமாகவும் இது உருவெடுத்துள்ளது.

**ஐ.எஸ். இயக்கத்தின் அசுர வளர்ச்சி**

அதன் அசுர வளர்ச்சியும் பிரமாண்டமான தாக்குதல் நடவடிக்கைகளும் உலக நாடுகளை ஆட்டங் காணச் செய்துள்ளன. உலக நாடுகள் ஒன்றிணைந்து இந்த இயக்கத்தை ஒழித்துக்கட்ட வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டுள்ளன.

பலமிக்க நாடுகள் பல ஒன்றிணைந்து இந்த இயக்கத்துக்கு எதிராகப் போராடி வருகின்றபோதிலும், அந்த இயக்கத்தின் பலத்தில் இதுவரை எந்தவொரு வீழ்ச்சியையும் காண முடியவில்லை.

இஸ்லாமியப் பேரரசு கிலாபத் என்ற சுலோகத்தோடு 2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இந்த இயக்கம் தங்களை அறிமுகப்படுத்தியது. சிரியாவின் ஒரு பகுதியையும் ஈராக்கின் ஒரு பகுதியையும் கைப்பற்றி சுயாட்சியைப் பிரகடனப்படுத்தியது.

உலக முஸ்லிம்களை இதில் இணையுமாறு இந்த இயக்கம் அழைப்பு விடுத்தது. இஸ்லாமியப் பேரரசு என்ற பதத்தால் கவரப்பட்ட ஏராளமான முஸ்லிம் இளைஞர்கள் இதில் இணைந்து கொண்டனர். ஐரோப்பாவைச் சேர்ந்த இளைஞர்களே இதில் அதிகம்.

சுனி முஸ்லிம் பிரிவாகத் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்ட இந்த இயக்கம், ஈராக்கிலும் சிரியாவிலும் உள்ள சியா அரசுகளை எதிர்த்துப் போராடி வருகின்றது. இந்த இயக்கத்துக்கு எதிராக விமானத் தாக்குதல்களை அமெரிக்கா 2014 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் தொடங்கி இப்போது வரை நடத்திச் செல்கின்றது. ஆனால், எந்தப் பயனும் இதுவரை கிட்டவில்லை.

சிரியாவில் போராடும் ஐ.எஸ். இயக்கத்துக்கு எதிராகத் தாக்குதல் நடத்துவதற்காக ஐ.எஸ். இலக்குகள் மீது விமானத் தாக்குதல்களை நடத்துகின்றன.

இதற்குப் பழிவாங்கும் விதமாக ஐ.எஸ். இயக்கம் ரஷ்யாவின் பயணிகள் விமானம் ஒன்றைக் குண்டு வைத்து அழித்ததோடு பிரான்ஸ் தலைநகர் பாரிஸிலும் குண்டுத் தாக்குதலை நடத்தியது. இந்த இரண்டு தாக்குதல்களிலும் அப்பாவிப் பொதுமக்களே கொல்லப்பட்டனர்.

> 2014 ஓகஸ்ட் முதல் இப்போது வரை ஐ.எஸ். அமைப்பு மீது 8,000இற்கு மேற்பட்ட தாக்குதல்களை அமெரிக்கா நடத்தியுள்ளது. அதுபோல், ஏனைய நாடுகளும் கணிசமான எண்ணிக்கையில் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

**ஐ.எஸ். மீது தாக்குதல்கள்**

இந்த நிலையில், ஈராக்கில் நிலை கொண்டிருக்கும் ஐ.எஸ். மீது தாக்குதல்களை நடத்துவதற்காக இப்போது பிரிட்டனும் ஜேர்மனும் அமெரிக்காவுடன் கைகோர்த்துள்ளன. இந்த இரண்டு நாடுகளின் நாடாளுமன்றங்களும் ஐ.எஸ். மீது தாக்குதல்களை நடத்துவதற்கு கடந்த வாரம் அனுமதி வழங்கியுள்ளன. இதனால் ஐ.எஸ். மீதான விமானத் தாக்குதல்கள் இப்போது சற்றுத் தீவிரமடைந்தே காணப்படுகின்றன.

இருந்தாலும், இவ்வாறான தாக்குதல்கள் மூலம் ஐ.எஸ். இயக்கத்தை முற்றாக ஒழித்துக்கட்ட முடியுமா என்ற கேள்வி இப்போது எழுகின்றது. இதுவரை நடத்தப்பட்ட விமானத் தாக்குதல்கள் மூலம் ஐ.எஸ். இயக்கத்தை ஒழித்துக்கட்ட முடியாமல் போனது ஏன் என்ற கேள்வியும் எழுகின்றது.

2014 ஓகஸ்ட் முதல் இப்போது வரை ஐ.எஸ். அமைப்பு மீது 8,000இற்கு மேற்பட்ட தாக்குதல்களை அமெரிக்கா நடத்தியுள்ளது. அதுபோல், ஏனைய நாடுகளும் கணிசமான எண்ணிக்கையில் தாக்குதல்களை நடத்தியுள்ளன. இந்தத் தாக்குதல்களால் ஐ.எஸ். அமைப்பு பலவீனமடைந்ததாகத் தெரியவில்லை.

ஐ.எஸ். அமைப்பைத் தோற்கடிக்க வேண்டுமென்றால் விமானத் தாக்குதல்கள் மாத்திரம் போதாது என்ற உண்மையையே இவை கூறுகின்றன. விமானத் தாக்குதல்களுடன் இணைந்ததான தரை வழித் தாக்குதல்களும் தேவைப்படுகின்றன. அத்தோடு, சியா - சுனிப் பிரிவினரின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும்.

**பழங்குடியினரின் உதவி**

மேலும், ஈராக்கில் உள்ள சுனி பழங்குடியினரின் உதவியும் அமெரிக்காவுக்குத் தேவைப்படுகின்றது. இவர்களின் உதவியின் மூலம் அமெரிக்கா நன்மை அடைந்த வரலாறும் உண்டு.

ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹூசைனுக்கு எதிரான போரில் சதாம் அரசு கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு அல்-குவைதா இயக்கத்தால் ஏற்படுத்தப்பட்ட தாக்குதலைக் கட்டுபடுத்துவதற்கு ஈராக்கின் சுனி பழங்குடியினரின் உதவியை அமெரிக்கா பெற்றது.

இதைவிடவும் மேலாக, ஐ.எஸ். இன் தாக்குதல்களானவை கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய மதங்களுக்கு இடையிலான மோதல்கள் அல்ல. அவை வெறும் பயங்கரவாதத் தாக்குதல்கள் மாத்திரமே.

மேற்குறிப்பிட்ட விடயங்களில் மேற்கு நாடுகள் சரியாகச் செயற்பட்டால் மாத்திரமே ஐ.எஸ். இயக்கத்தை முற்றாக ஒழிப்பது சாத்தியப்படும்.

## எனது பெற்றோர் சேமித்த பணத்தை இனியாவது தருவார்களா?

நான் ஒரு பெண். வரணி வடக்கு ஜே/339 கிராம அலுவலர் பிரிவில் வசித்து வருகின்றேன். எனக்கு சிறுவயதிலிருந்து நோய்த்தாக்கம் ஏற்பட்டதால் திருமணமாகவில்லை. தற்போது தனிமையில் வசித்து வருகின்றேன். அரசு எனக்கு மாதாந்தம் உதவிப் பணமாக 250 ரூபாவை வழங்கி வருகிறது. எனது சகோதரர் போரால் மனவடு அடைந்த நிலையில் வாழ்வதால் அவரிடமும் உதவி கேட்க முடியாது. கடுமையான வறுமைப் போராட்டத்தோடு வாழ்ந்து வருகின்றேன்.

எனது தாய், தந்தையர் இறந்து விட்டனர். அவர்கள் உயிருடன் இருக்கும் போது நான் திருமணமாகாததால் பிற்காலத்துக்காவது உதவும் வகையில் (உதவும் என்று) தம்பான் பகுதியில் இயங்கிய தற்காப்பு வளர்ச்சிக் கழகத்தில் ஒரு தொகைப் பணம் (சிறு) வைப்பிலிட்டு உள்ளமை தற்போது சேமிப்புப் புத்தகம் மூலம் தெரியவந்துள்ளது. ஆனால், இந்தக் கழகம் 2006 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட குழப்பத்தால் மக்கள் இடப்பெயர்வோடு இடம்பெயர்ந்து விட்டது. இதனால் கழகச் செயற்பாடுகள் இன்றுவரை இயங்கவில்லை. இதனால் எனது சேமிப்புப் பணத்தை எடுக்க முடியாது இக்கட்டான சூழலில் வாழ்ந்து வருகின்றேன். இப்படி என்னைப்போல் பலர் அந்தக் காலத்தில் சேமிப்புச் செய்துள்ளதை தற்போது அறிய முடிகின்றது. அவர்களுக்கும் அவர்கள் சேமித்த பணம் கிடைக்க சம்பந்தப்பட்ட கழக உறுப்பினர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். எமது பெற்றோர் நம்பிக்கையுடன் எமது பிற்காலத்துக்கு உதவும் என்று நம்பி வைப்பிலிட்ட பணத்தை என்போன்ற சக லருக்கும் போர் முடிவடைந்து மக்கள் மீளக் குடியமர்ந்த நிலையில் வழங்க நடவடிக்கை எடுப்பார்களா? என்பதை வாசகர் திருமுகம் பகுதியில் அறியவும், மீளவும் பிரசுரம் செய்யாதவாறும் இருக்க வாய்ப்பளிப்பார்களா? சம்பந்தப்பட்ட கழக உறுப்பினர்களே இந்த மடல் உங்களுக்குச் சமர்ப்பணம்.

பாதிக்கப்பட்ட பெண்
வடவரணி

## உணவகங்களைக் கண்காணித்தல் வேண்டும்

தற்போது பெய்துவரும் மழை காரணமாக தொற்று நோய்களுக்கு ஆளாகிய பலர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. குறிப்பாகச் சுகாதாரத்துக்கு ஒவ்வாத நீரைப் பருகுவதன் காரணமாகவே பலர் நெருப்புக் காய்ச்சல், வயிற்றுளைவு, வயிற்றுப்போக்கு ஆகிய நோய்களுக்கு ஆளாகுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எமது மக்களில் ஏராளமானவர்கள் தினமும் உணவகங்களில் உணவை உண்பதை அவதானிக்க முடிகின்றது. சில உணவகங்களின் சுகாதாரக் கேடுகள் தொடர்பாக அண்மைக் காலமாகவே தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. இவற்றை உரிய வகையில் களையாது விட்டால் மக்கள் தான் பாதிக்கப்படப் போகிறார்கள். குறிப்பாக உணவகங்களில் குடிப்பதற்கு வழங்கப்படுகின்ற நீர் தொடர்பாகச் சுகாதாரத்துறை அதிகாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏன் என்றால் சுகாதாரக் கேடான நீர் மூலமாகவே நோய்கள் பரவுகின்றன.

உணவகங்களில் உணவு தயாரிக்கும் பகுதி, இதற்குப் பொறுப்பானவர்கள், பரிமாறுபவர்கள் தொடர்பாகவும் கண்காணித்தல் அவசியமாகும். சுகாதாரத்துறை அதிகாரிகள் இந்த விடயத்தில் இறுக்கமான நடவடிக்கைகளை எடுக்கும் போது தான் மக்களை நோய்களிலிருந்து பாதுகாக்க முடியும். தற்போது மழை தொடர்ந்து பெய்து வரும் நிலையில் இத்தகைய நடவடிக்கைகள் மிக மிக அவசியமானதாகும்.

ப.குருபரன், கொட்டடி.

## ரயர்கள் எரிப்பதைத் தவிர்ப்போமாக

ஆண்டுதோறும் கார்த்திகை விளக்கீடு இந்துக்களின் வாழ்வு ஒளிமயமானதாக அமைய வேண்டும் என்ற தாற்பரியத்தை அடிப்படையாகக் கொண்டு கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் இந்துக்கள் ஆகிய நாம் மனத்தூய்மை பேணி இறைவழிபாட்டில் ஈடுபடுவதே சிறப்பு. அன்று மாலையானதும் தீபங்களை ஏற்றி அன்றைய தினத்தை ஒளியூட்டுகிறோம்.

இதைவிடுத்துப் பல இடங்களிலும் ரயர்களைக் கொளுத்தி எரிக்கிறார்கள். பெரும்பாலும் இளசுகளே இங்ஙனம் ஈடுபடுகிறார்கள். இது இளம்சந்ததியினருக்கு வேடிக்கையாக இருக்கிறதே ஒழிய விளக்கீட்டின் தாற்பரியம் குழி தோண்டிப் புதைக்கப்படுகிறது.

கார்த்திகை விளக்கீட்டுக்கு மறுநாள் சந்திகளில் கருகியிருக்கும் ரயர்களின் சாம்பல் ஏற்படுத்தும் அசௌகரியம் சொல்லி மாளாது. ரயர் எரியும்போது நிகழும் குறைதகனம், அதனால் விளையும் காபனோர் ஒட்சைட்டு செறிந்த அடர்புகை உடர் நலத்துக்கு ஏற்படுத்தும் தீங்கு எண்ணிலடங்கா. மூச்சுத் திணறல், சுவாசக்கோளாறு, புற்றுநோய் உண்டாதல் என மனிதகுலத்துக்கு அது விளைவிக்கும் கேடுகளைப் பட்டியலிடலாம்.

கே.சனந், உதயகதிர்காமம், புலோலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்திலும் தலைவிரித்தாடும் சாதி

கடும் வெள்ளத்தால் தமிழகம் பெரும் பாதிப்புக்களைச் சந்தித்துள்ள நிலையிலும் சாதி தனது கோரத்தைக் குறைக்கவில்லை என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

மழையால் பாதிக்கப்பட்ட இடங்களில் ஒன்று கடலூர். சாதியப் பாகுபாடு காரணமாக இங்கு தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு உதவிப்பொருள்கள் சரிவரக் கிடைக்கவில்லை என்றும்– இதனால் அவர்கள் பரிதவித்துப் போய் உள்ளனர் என்றும்– தமிழகத்திலிருந்து வெளியாகும் தி இந்து ஆங்கில நாளிதழ் தெரிவித்துள்ளது.

தாழ்த்தப்பட்ட சாதியினர் வாழும் இடங்களுக்குச் சென்ற தமது செய்தியாளரிடம் அந்த மக்கள் தமது துன்ப துயரங்களைப் பகிர்ந்து கொண்டனர் என்று பத்திரிகை தெரிவித்துள்ளது.

கடலூர் மாவட்டத்தில் வெள்ளம் பாதித்த பகுதிகளுக்கு உதவிப் பொருள்களை கொண்டு வரும் வாகனங்களை இடைமறிக்கும் உயர் வகுப்பினர் தாங்கள் வசிக்கும் பகுதிக்கு பொருள்களை எடுத்துச் செல்லவிடாமல் தடுக்கின்றனர் என்று தாழ்த்தப்பட்ட மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

2012 இரு சாதிப் பிரிவினருக்கு இடையில் ஏற்பட்ட பிரச்சினையினால் தருமபுரி மாட்டம் பற்றி எரிந்தது. இந்தச் சம்பவத்துக்குப் பிறகு கடலூரின் பல பகுதிகளிலும் சாதி இடைவெளி மேலும் அதிகரித்துள்ளது.

கடலூரின் உள் பகுதிகளுக்கு நிவாரணப் பொருள்களைக் கொண்டுசெல்லும் தன்னார்வலர்களும் தாங்கள் பல்வேறு இடர்பாடுகளை எதிர் கொள்வதாகக் கூறுகின்றனர்.

> “உதவிப் பொருள்களுக்காக மணிக் கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளது. காரணம், உயர் சாதியினருக்கு வழங்கப்பட்ட பின்னரே உள் பகுதிகளுக்கு கொண்டுவர அனுமதிக்கப் படுகிறது.

இக்கட்டான சூழலில் சாதிபாகுபாடு தலைவிரித்தாடுவதை வெளிச்சம் போட்டுக் காட்டுவதாக உள்ளது என ஓணான் குப்பம் மக்களின் குமுறல்.

“உதவிப் பொருள்களுக்காக மணிக் கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளது. காரணம், உயர் சாதியினருக்கு வழங்கப்பட்ட பின்னரே உள் பகுதிகளுக்கு கொண்டு வர அனுமதிக்கப்படுகிறது. பல நேரங்களில் தங்களுக்குத் தேவையானவற்றை எல்லாம் எடுத்துக் கொண்டு சொற்ப அளவிலான பொருள்களையே எங்கள் பகுதிக்கு அனுப்பி வைக்கின்றனர்” என்று ஓணான் குப்பம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இராணுவத்தினர் ஏற்பாடு செய்திருந்த மருத்துவ முகாமைக்கூட உயர் சாதியினர் அவர்களது பகுதியிலேயே ஒருங்கிணைத்தனர். இதனால் தலித்துகள் அந்தப் பகுதிக்குச் சென்று மருத்துவ சேவையைப் பெறுவதில் பெருமளவில் தயக்கம் காட்டியுள்ளனர்.

இருப்பினும் நிவாரணப் பொருள்களைக் கொண்டுவரும் வாகனங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்ட பிறகு தங்களுக்கும் உதவிகள் வந்து சேர்வதாகக் கூறுகின்றனர் ஏழை மக்கள்.

கடலூர் வெள்ள நிவாரணப் பணிகளை மேற் பார்வையிட்டு வரும் மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி ககன்தீப்சிங் பேடி கூறும் போது, ஏழை மக்கள் அதிகம் வசிக்கும் குடிசைப் பகுதிகளிலேயே உதவிப் பணிகளை முதலில் மேற்கொள்ள வேண்டும் எனத் தெளிவான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது – என்றார்.

## கந்தகார் விமான நிலையம் மீது தலிபான்கள் அதிரடித் தாக்குதல்

### 37 அப்பாவிப் பொதுமக்கள் பரிதாபச் சாவு

காபுல், டிசெ .11

ஆப்கானிஸ்தானில் கந்தகார் விமான நிலையத்தில் தலிபான்கள் நடத்திய குண்டுத் தாக்குதலில் 37 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இரவு வேளையில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் விமான நிலையத்துக்கு அருகாக இருந்த கடைகள், பாடசாலை என்பன பலத்த சேதத்துக்குள்ளாகின.

தலிபன் ஆயுததாரிகள் மாலை 6:20 மணி அளவில் சரமாரியாகத் தாக்குதல் நடத்தினர். இராணுவத்தினர் பதில் தாக்குதல் நடத்தினர் என ஆப்கானிஸ் தானின் அதிகாரி கள் தகவல் தெரிவித்தனர். இதில் தலிபான்கள் 9 பேர் கொல்லப்பட்டனர் என்றும் ஒருவர் காயத்துக்குள்ளானார் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். பொது மக் களில் 35 பேரும் காயப்பட்டனர் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள் ளது. தாக்குதலுக்கு தலிபான்கள் பொறுப்பேற்றனர்.

வெளிநாட்டுப் படையினரையே தாம் குறிவைத்துள்ளனர் எனத் தாலிபான் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் இடம்பெற்று சில மணிநேரங்களின் பின்பு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கு ஒரு செய்தி என்ற தலைப்பில் இணையத்தில் காணொலி பதிவேற்றப்பட்டுள்ளது. அதில் தாலிபான் தற்கொலைப் படை யினர் ஆப்கானில் உள்ள அமெரிக்க இராணுவத்தினருக்கு எச்சரிக்கை விடுத்தனர். 10 தலிபான் படையினர் வெள்ளை உடை அணிந்து தாலிபான் கொடிக்கு முன்பு அமர்ந்து இந்த எச்சரிக்கையை விடுக்கின்றனர். (உ–ரி4)



## ஒரே நாள் இரவினில் 20 லட்சம் விருப்புகள்

### அள்ளினர் முகப்புத்தக நிறுவுனரும் மகளும்

அண்மையில் பிறந்த தன் பெண் குழந்தையுடன் எடுத்துக் கொண்ட ஒளிப்படத்தை முகப்புத்தக (பேஸ்புக்) நிறுவனர் மார்க் ஜுகர்பெர்க் தன் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். உடனடியாகவே இந்தப் படத்தை 20 லட்சம் பேர் விரும்பியுள்ளனர்.

சமூக ஊடகங்களில் முக்கிய இடத்தை பிடித்துள்ள முகப்புத்தகத்தின் நிறுவுனரான மார்க் ஜுகர் பெர்க்குக்கு கடந்த முதலாம் திகதி பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு மேக்ஸ் என அவர் பெயர் சூட்டியுள்ளார்.

இந்த நிலையில் லிட்டில் மேக்ஸுடன் முழு மகிழ்ச்சி என்ற தலைப்பில் குழந்தையைக் கொஞ்சுவது போன்ற ஒளிப் படத்தை மார்க் தன் முகப் பக்கத்தில் வெளியிட்டார்.

ஒளிப்படக் கவிதை போல இருக்கும் இந்த படத்துக்கு ஒரே நாள் இரவில் 20 லட்சத் துக்கும் மேற்பட்டோர் விருப்பம் தெரிவித்து அசத்தியிருக்கின்றனர். (உ)

## செயற்கை முறையில் நாய்க்கும் கருத்தரிப்பு

### வாடகைத் தாய்க்கு 3 வெவ்வேறு இனக் குட்டிகள்



வொஷிங்டன், டிசெ.11

செயற்கை முறை கருத்தரித்தலின் மூலம் ஒரு பெண் நாய் 7 குட்டிகளை ஈன்றுள்ளது. பல வருட முயற்சிக்கு பிறகு இது சாத்தியமாகி இருக்கிறது என அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்தனர். உலகில் நாய் ஒன்று இவ்வாறு செயற்கை பரிசோதனைக் குழாய் முறையில் கருத்தரிப்பது இதுவே முதல் முறையாகும்.

இந்த வகை கருத்தரித்தல் முறை அதி ஆபத்திலுள்ள நாயினங்களை பாதுகாக்க உதவும் எனவும் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் இடையில் நிலவும் நோய்களுக்கும் இது தீர்வாக அமையும் எனவும் கோர்நெல் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

ஒரே ஈற்றில் பெறப்பட்ட குட்டிகள் ஏழும் வெவ்வேறான மூன்று சோடிப் பெற்றோரிடம் இருந்து எடுக்கப்பட்ட விந்து மற்றும் முட்டைகளில் இருந்து கருவூட்டப்பட்டவை.

மனிதர்களைச் செயற்கை முறையில் கருவூட்டப் பயன்படுத்தப்படும் நுட்பங்களே இந்த நாய்க் குட்டிகளுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. வாடகைத் தாயாக குறித்த பெண் நாய் பங்குவகித்துள்ளது.



இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட இதுபோன்ற முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. ஆண் நாய்களின் விந்தை உறைநிலைக்குக் கொண்டு செல்வதில் பிரச்சினைகள் இருந்தன. ஆனால் அந்த நுட்பத்திலும் ஏனைய நுட்பங்களிலும் தாங்கள் கச்சிதமாகச் செயற்பட்டிருப்பதாக இந்த ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

“1970ஆம் ஆண்டுகளிலிருந்து பலர் இந்த முயற்சியில் ஈடுபட்டனர். ஆனாலும் வெற்றியளிக்கவில்லை. தொழில்நுட்பத்தின் உதவியுடன் இது சாத்தியமானது. ஆரோக்கியமான 7 குட்டிகளைப் பெற்றுள்ளோம்”– என்றார். இந்த ஆய்வுக்கு தலைமை வகித்த அலெக்ஸ் ரிறாவிஸ்.

ஆபத்திலுள்ள இனமான ஆபிரிக்க காட்டு நாய்களை மீளப் பெறுவதில் இந்த வகை பெரிதும் உதவும் என ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர். நாய்களின் மரபுரிமை நோய்களுக்கு இந்தத் தொழில் நுட்பம் தீர்வாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. நய்களினூடாக மனிதர்களுக்குப் பரவும் நோய்களுக்கும் இந்தக் கண்டு பிடிப்பு கால்நடை மருத்துவத்தில் சிறந்தது என 'பிளஸ் வன்' சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாய்க் குட்டிகள் ஜூன் மாதம் பிறந்தபோதும், இந்த வாரம்தான் இந்தக் கண்டுபிடிப்புத் தொடர்பான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. (உ–ரி4)

## இனச்சுத்திகரிப்புக்கு ரஷ்யா சிரியாவில் முயற்சிக்கின்றது

### இப்படிக் குற்றஞ்சாட்டுகிறார் துருக்கிப் பிரதமர்

இஸ்தான்புல், டிசெ. 11

சிரியாவின் வடபகுதியில் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையில் ஈடுபட ரஷ்யா முயற்சித்து வருகிறது என்று துருக்கிய பிரதமர் அஹமத் டவுடோகுலு குற்றஞ்சாட்டியுள்ளார்.

இஸ்தான்புல்லில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், வட சிரியாவில் இடம்பெறும் வான் தாக்குதலை அவர் இவ் வாறு விமர்சித்துள்ளார். ஐ.எஸ். அமைப்பினரை வலுப்படுத்தும் வகையிலான தாக்குதலிலேயே ரஷ்யா ஈடுபட்டு வருகிறது எனவும் அவர் தெரிவித்தார். இந்தக் கூற்றுக்கு வலுச்சேர்த்தது போல், சிரிய ஜனாதிபதியை எதிர்க்கும் குழுக்கள் மீது ரஷ்யா அதிக தாக் குதலை நிகழ்த்துகிறது எனச் சிரிய தாக்குதலை அவதானிக்கும் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் ரஷ்ய போர் வானூர்திகள் சுட்டு வீழ்த்தப்பட்டதிலிருந்து, துருக்கி – ரஷ்ய உறவு பாதிக்கப்பட்டுள்ளது. "சிரியாவின் வடபகுதியான லடாக்கியாவில் வாழும் குர்திஷ்கள் மற்றும் சுனி முஸ்லிகளை அங்கிருந்து வெளியேற்றி இனச் சுத்திகரிப்பில் ஈடுபடும் நோக்கத்துடன் ரஷ்யா செயற் படுகிறது. லடாக்கியில் இருப்பவர்கள் சிரியாவின் ஆளும் அசாத் அரசுக்கு ஆதரவானவர்கள் அல்லர்"

இப்படிக் குற்றஞ்சாட்டியிருக்கிறார் துருக்கியப் பிரதமர்.

சிரியாவில் தான் இஸ்லாமிய அரசின் படையினர் மீதும் ஏனைய ஜிகாதிக் குழுவினர் மீதுமே தாக்குதல் நடத்தி வருவதாக ரஷ்யா கூறி வருகின்றது. ஆனால் ரஷ்யாவின் வான் தாக்குதல்களில் அனேகமானவை சிரியாவின் அசாத் அரசுக்கு எதிராகப் போராடுபவர்களை இலக்கு வைத்தே நடத் தப்படுகின்றன என மேற்குலக ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

ரஷ்ய தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த ரஷ்ய ஜனாதிபதி புடின், ரஷ்ய போர் வானூர்தி சரியான பாதையில் சென்றது என்றதற்கான ஆதாரம் வெளிப்படுத்தப்படும் – என்றார்.

"துருக்கி எமக்குத் துரோகம் செய்துவிட்டது. துருக்கி மீது எமக்கு சிறந்த நட்புறவு இருந்தது. தீவிரவாதத்துக்கு எதிரான போரில் கூட நாம் அவர்களுடன் இணைந்து தாக்குதல் நடத்தினோம். நாம் யாருமே இவ்வாறான ஒரு துரோகத்தை எதிர் பார்க்கவில்லை" –என்றார். (உ–ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1717 FOLLOW US
www.mobitel.lk

# எமது யாழ்ப்பாண மொபிடெல் கிளை

## தனது முதலாவது ஆண்டு நிறைவை கொண்டாடுகின்றது.

தமது பெறுமதிமிகு வாடிக்கையாளர்களுக்கு மொபிடெலானது பல சலுகைகளுடன் பரிசுகளை அள்ளி வழங்கக் காத்திருக்கின்றது. இன்ரநெற், அழைப்பு வசதிகள் மற்றும் பெறுமதிமிக்க சாதனங்களை விசேட தள்ளுபடி விலைக்கழிவில் பெற்றுக் கொள்ள மொபிடெல் உங்களை அன்புடன் வருக வருக என வரவேற்கின்றது.



விசேட சலுகைகளுடன்

பிற்கொடுப்பனவு | முற்கொடுப்பனவு | புரோட்பேண்ட் | சாதனங்கள்

Sri Lanka Telecom
Mobitel
உங்களுடனே. என்றும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தீவுப் பகுதியில் காடுகளாக மாறி வரும் மக்களின் குடிநிலங்களும் வீதிகளும்

வந்தியத்தேவர்



போரினால் பாதிக்கப்பட்ட தீவகத்தில் உள்ள கிராமங்கள் அனைத்தும் பெரும்பாலும் காடுகளாக மாறியுள்ளன. மீள்குடியமர்வின் பின்னர் ஆங்காங்கே ஒருசில வீடுகள் புனரமைக்கப்பட்டும் உடைந்த நிலையிலும் உள்ளன. சில வீடுகள் தறப்பாள், உரப்பைகளால் கூரைகள் மூடப்பட்டும் மக்கள் குடியிருக்கும் இடங்களாக மாற்றப் பட்டுள்ளன. கிராமங்களின் முக்கிய வீதி மட்டும் சற்று விசாலமானதாக இருக்க-உட்புறங்களில் உள்ள வீதிகள் மிகவும் ஒடுக்கமாகவும் அதை அண்டிய காணிகள் முட்செடிகள் பற்றைகள் வளர்ந்து காடுகளாகவும் உருவாகியுள்ளன. மக்கள் தாம் குடியிருக்கும் வளவுகளைத் தவிர, அதன் சுற்றுப்புறங்களைத் துப்புரவு செய்வது கிடையாது. அவர்கள் வனாந் தரங்களுக்கிடையில் வாழ்பவர்களாகவே தம்மைப் பழக்கிக் கொண்டுள்ளனர். முழுமையான குடியமர்வு தீவுப்பகுதியின் எந்த ஒரு கிராமத்திலும் இன்னமும் இடம்பெறவில்லை. எதிர்காலத்திலும் அது சாத்தியப்படுமா என்பது நிச்சயமில்லை. வீதியோரங்களில் வளர்ந்து காணப்படும் மரங்கள், பற்றைகள் அந்தவழியால் செல்பவர்களுக்கு ஒருகாட்டுப்பாதையூடாகச் செல்கின்றோம் என்ற எண்ணத்தையே உருவாக்கும் வகையில் உள்ளது.

**சனநடமாட்டம் இல்லாத வீதிகள்**

தீவுப் பகுதியில் ஏற்படும் ஒவ்வொரு துன்பகரமான நிகழ்வுகளுக்கும் காரணம் மக்கள் குடியிருப்புக்களற்ற சனநடமாட்டம் எதுவுமே இல்லாத வீதிகளும் அதனைச் சூழ்ந்து வளர்ந்துள்ள காடுகளுமே ஆகும். புங்குடுதீவு மாணவி வித்தியாவின் வன்புணர்வுக் கொலைக்கு அவர் தினமும் பாடசாலைக்குச் செல்லும் காடுகளாகக் காணப்படும். சனநடமாட்டமற்ற வீதியே காரணமாக அமைந்துள்ளது. தனது பிள்ளையையே துஷ்பிரயோகத்துக்குட்படுத்தி, பொலிஸாரால் தேடப்படும் தந்தையொருவர் தண்டனைக்குப் பயந்து தற்கொலை செய்வதற்கும் இந்தக் காடுகளே உதவியாக இருந்துள்ளன.

சில தினங்களுக்கு முன்னர் நாரந்தனையில் இருந்து தனது கல்விக்காக சைக்கிளில் பாடசாலைக்கு வந்து கொண்டிருந்த மாணவி உ.உதயந்தினி கடற்படை ரக வாகனத்தில் மோதுண்டு உயிரிழந்தார். அவர் சென்று கொண்டிருந்த வீதி சரவணை புளியங்கூடல் சந்திக்கானது. இதுவும் ஓர் ஒடுக்கமான வீதி. இந்த வீதியில் வாகனங்கள் விலத்திச் செல்வது மிகவும் கடினம். வீதியின் இரு புறமும் வீதியை மிக நெருக்கமாக அண்மித்து மரங்கள் பற்றைகள் வளர்ந்து காடு போன்றே காணப்படுகின்றது. விபத்துக்கு இதுவும் ஒரு காரணம் என்கிறார்கள். இத்தகைய அவலச் சம்பவங்கள்

> **தீவுப் பகுதியைப் பொறுத்தவரை போருக்கு முன்னர் இதுபோன்று காடுகளைக் காண்பது மிகவும் அரிது. காணிகள் தோறும் வசதியான குடியிருப்புக்கள் காணப்பட்டன. அவற்றைச் சூழவுள்ள பகுதிகள் வயல்களாகவும் தோட்டங்களாகவும் வருமானத்தை வழங்கிக் கொண்டிருந்தன.**

இடம்பெற்ற பின்னரும் இந்தப் பகுதி மக்கள் காடுகளையும், பற்றைகளையும் அழிப்பதில் அக்கறை காட்டாமல் இருப்பது வேதனை தருகின்றது. அவர்கள் பொறுப்புணர்வுடன் நடந்து கொண்டிருந்தால் நடந்து முடிந்த அவல நிகழ்வுகளைத் தவிர்த்திருக்க முடியுமல்லவா!

மேலும் இங்கு வாழுகின்ற மிகச் சிறிய தொகையினராகிய மக்கள் தமது பாதுகாப்பைத் தாமே தேடிக்கொள்ள வேண்டும். அவர்கள் அக்கறையின்றி இருக்கும் ஒவ்வொரு கணமும் ஆபத்து நிறைந்ததாகவே அமையப் போகின்றது.

தீவுப் பகுதியைப் பொறுத்தவரை போருக்கு முன்னர் இதுபோன்று காடுகளைக் காண்பது மிகவும் அரிது. காணிகள் தோறும் வசதியான குடியிருப்புக்கள் காணப் பட்டன. அவற்றைச் சூழவுள்ள பகுதிகள் வயல்களாகவும் தோட்டங்களாகவும் வருமானத்தை வழங்கிக் கொண்டிருந்தன. எல்லாப் பகுதிகளிலுமே உழைக்கும் மக்கள் வலம் வந்து கொண்டிருந்தனர். தரிசு நிலங்களைக் காண்பதே அபூர்வம். மக்களைத் துரத்தி விட்டு இவற்றுக்கெல்லாம் விடுதலை அளித்த போர், இந்தப் பகுதியையே சின்னா பின்னப்படுத்தி விட்டது. கொலை கொள்ளை, பாதுகாப்பின்மை, துஷ்பிரயோகங்கள் என்ற ஒவ்வாத விடயங்களை அரங்கேற்றும் பகுதிகளாக ஒவ்வொரு கிராமத்தையும் உருவாக்கி விட்டது. தீவுப்பகுதியின் தொண் ணூற்று ஒன்பது வீதமான பகுதிகளும் இன்று காடுகளாகவே தோற்றம் பெற்றுள்ளன. அனேகமானவர்கள் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்துள்ளமையே இந்தக் காடுகள் உருவாக வாய்ப்பானது. குடியிருப்பு இல்லாத இவர்களது காணிகளும் அதற்குள் சேதமுற்றுக் காணப்படும் கட்டடங்களும் துன்பியல் நாடகங்களை அரங்கேற்றும் மேடைகளாகி விட்டன. மக்கள் நடமாட்டமற்ற இந்தப் பகுதிகளால்செல்ல வேண்டியவர்கள் பீதியுடனே அந்தப் பகுதியைக் கடந்து செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர். எந்த நேரத்தில் எது வேண்டுமானாலும் நடக்க வாய்ப்பு வழங்கும் சூழல் அது.

**காடுகளை அழிக்க வேண்டும்**

தமது குடியிருப்புக் காணிகளை காடுகள் என்ற நிலைக்குள்ளாகாதவாறு கண்காணித்துக் கொள்ள வேண்டியது அந்தக் காணிகளின் சொந்தக்காரர்களே. அந்தப் பிரதேச ஒன்றியம் இந்தப் பகுதிக்கான ஒன்றியம் என்று அமைப்புக்களை உருவாக்கி ஒன்றுகூடல் என்ற பெயரில் கூடிப்பொழுதைக் களித்துச் சந்தோசமாக கொண்டாட்டங்களில் திளைப்பவர்கள். தாங்கள் குடியிருந்த நிலம் வீடுகள் காடுகளாகவும் கயவர்களின் கூடாரங்களாகவும் மாறிக்கிடப்பதையும் இவற்றால் கஷ்டப்பட்டு முன்னேற விரும்பும் குடும்பங்கள் எவ்வளவுக்குப் பாதிப்புக்களை எதிர் கொள்கிறார்கள் என்ற உண்மையையும் உணரவேண்டும். இங்குள்ள மக்களுக்குப் பிரச்சினைகளை உண்டுபண்ணாத வகையில் பற்றைகளையும் பாழடைந்து கிடக்கும் கட்டடங்களையும் அழித்து இங்குள்ள மக்களுக்கு ஆறுதலையும் நிம்மதியையும் வழங்க வேண்டும்.

உதயநந்தினி விபத்துக்குள்ளான பகுதியைப் பார்வையிட்ட ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், மிகவும் ஒடுக்கமான ஒரு வாகனமே முறையாகப் பயணிக்க முடியாத கிராமங்களில் காணப்படும் வீதிகளைப் படையினர் பயன்படுத்த வேண்டாம் எனவும், விபத்துக்களைத் தடுக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளார். சிரமதானத்தின் மூலம் இந்த ஒடுக்கமான வீதிகளைத் துப்புரவு செய்ய அந்தப் பகுதியில் உள்ள மக்கள் முன்வர வேண்டும் எனவும், மழை காரணமாக வளர்ந்திருந்த வீதியோரக் காடுகளை வெட்டித்துப்புரவு செய்யும் பணியை தொடர்ந்தும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமனவும் வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் அறிவுறுத்தியுள்ளார்.

கிராமப்புறங்களில் காணப்படும் ஒடுக்கமான வீதிகள் பல்வேறு தேவைகளுக்காகச் செல்லும் மக்களுக்கு முக்கியமானவை. இந்த வீதிகளில் காணப்படும் இடையூறுகளைக் களைவதில் பிரதேச சபைகள் எதிர்காலத்திலாவது அக்கறை காண்பிக்க வேண்டும். புலம்பெயர்ந்த மக்கள் ஆலயத் திருப்பணிகளுக்கு அள்ளி வழங்குவது சிறப்புத்தான். அத்துடன் உள்ளூரில் தம்மால் கைவிடப்பட்டு பல்வேறு சீரழிவுகளுக்கும் உறுதுணையாகக் கிடக்கும் தமதுசொத்துக்களை உரிய முறையில் பாதுகாப்பதுடன் டெங்கு போன்ற கொடிய நோய்த் தாக்கத்தில் இருந்தும் மக்களை மீட்டெடுப்பின் அது மேலும் சிறப்பல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகை வைத்து உணர்த்திட சுவை பெற்று உணர்வு தரும் சுருட்டு

**செ.உமாசுதன்**

வட மாகாணத்தின் பொருளாதார அபிவிருத்தியிலும் உணவுத் தன்னிறைவிலும் பெரும் பங்காற்றிய, பங்காற்றுகின்ற துறைகளிலே விவசாயம் மிகப் பிரதானமானது.வருடத்தின் எல்லா நாள்களிலும் செம்மண்ணோடு உறவாட, மண்ணை உழுது பண்படுத்திட, நீரை ஆகாரமாய் பாய்ச்சிட பயிர்கள் வளர்ந்து நல்ல விளைவைத் தருகின்றன. இயற்கை அன்னையோடு ஒன்றித்து கதையாடி பலர் நாவில் உணவாய் சுவையூட்டும் சிறப்பு வேறு எந்தத் தொழில்களிலும் கிடைப்பதில்லை. அதிகாலையிலே உழவனாய் உழைத்துப் பாடுபடும்.மண் மீது பண்பாடிடும் வாய்ப்பு எல்லோருக்கும் வாய்திருப்பதில்லை.

**ஆத்ம திருப்தியும் மன நிறைவும்**

ஏனைய தொழில் துறைகளிலே பெற்றிட முடியாத ஆத்ம திருப்தியும் மன நிறைவும் இயற்கை அன்னையுடன் உறவாடக் கிடைக்கிறது. நிலக்கிளார் என்ற நாமம் மண்ணின் வருடலால் விவசாயிகளுக்கு சூட்டப்படுகிறது.இத்தகைய பணி செய்யும் மனிதர்கள் உண்மையிலே மண்ணின் குழந்தைகள் தான். மண்ணோடு உறவாடி பயிர்பல செய்து உணவை எமக்கு உவந்தளிக்கும் உத்தமர்கள் தான்.தினம் உடல் உழைப்பால் உயர்ந்திடும் மண்ணின் மைந்தர்கள்.

வருடத்தின் முழு நாள்களும் மண்ணோடு உறவாடும் இவர்கள் பெரும் போகம், சிறு போகம் என தங்களின் பயிரிடலை மேற்கொள்கின்றனர். கார்த்திகை மாதம் தொடக்கம் பங்குனி மாதம் வரையான ஐந்துமாத காலப்பகுதியிலே பெரும்போகப் பயிரிடல் மேற்கொள்ளப்படுகின்றது. ஏனைய மாதங்களிலே சிறுபோகப் பயிரிடல் சிறப்புறுகின்றது.பெரும் போகத்தின் போது குறிப்பாக கந்தரோடை, சங்குவேலி போன்ற பகுதிகளில் நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.இவை தவிர புகையிலை மற்றும் பீற்றூட்,கரட் என பல மரக்கறிப் பயிர்களும் பயிரிடப்படுகின்றன. சிறுபோகத்தின்போது வெங்காயம் அதிகளவிலே அறுவடை செய்யப்படுகின்றது. ஆனாலும் பல இடங்களிலே பணப் பயிரான புகையிலை பெரும்போகப் பயிராக முக்கியத்துவம் பெறுகின்றது.

மண்ணை உழுது பண்படுத்தும் இவர்கள் இயற்கையான மாட்டு எருவை உரமாக வேறு பகுதிகளில் இருந்து தருவிக்கின்றனர். இவ்வாறு ஒரு லொறி மாட்டு எருவை 40 ஆயிரம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்து அதனை மண்ணோடு இரண்டறக் கலந்துவிடுகின்றனர். கடகங்களிலே எருவைச் சுமந்து மண்ணோடு கலந்திட சில சமயம் அயல் விவசாய நண்பர்கள் உதவுகின்றனர். பல சமயம் கூலிகள் ஊதியம் வேண்டிப் பணி செய்கின்றனர்.

இதன் அடுத்த படிநிலையிலே புகையிலை நாற்றை அரை அடி அளவான சீரான இடைவெளிகளில் நட்டுக் கொள்கின்றனர். நான்கு மாதங்களில் விளைச்சலை தருகின்ற புகையிலை நாற்று ஒன்றரை அடி உயரம் வளர்ந்ததும் இயற்கை உரத்துக்கு மேலதிகமாக யூரியாவைச் செயற்கை உரமாகவும் பயன்படுத்துகின்றனர்.நான்கு நாள்களுக்கு ஒருமுறை நீரை ஆகாரமாக ஊட்டுகின்றனர்.ஆகக் கூடுதலாக மூன்று அடி உயரம் வளரும் வரை அதனோடு ஊடாடுகின்றனர்.அதற்கு மேலே வளர இவர்கள்மனம் இடம்தந்தாலும் உழைப்பை எண்ணி இவர்கள் அதற்கு இடம்தருவதில்லை. ஏனெனில் அதற்கு மேலே வளர்ந்தால் இலை நீண்டு வராது.ஆகக் கூடுதலாக பன்னிரண்டு இலைகளை வளர அனுமதித்து அழகு பார்க்கின்றனர். தேயிலைக் கொழுந்து பறிப்பது போல ஏனைய இலைகளைத் தலையடிக்கின்றனர். எங்கள் மொழியில் தட்டிவிடுகின்றனர்.

> தோட்டத்திலிருந்து ஊர்வலமாய் கொண்டுவரப்பட்ட புகையிலைகள் நில மட்டத்தில் இருந்து ஆறு அடி ஆழமான கிடங்கிலே வாழை மடல்கள்,தென்னோலைகள் அலங்கரிக்க அதன் மேல் விருந்தாளியாய் அமிழ்த்தப்பட்டு ஏழு நாள்களுக்கு அவிய விடப்படுகின்றது.இதில் புழுங்கி வெந்து மெலிந்து போகிறது புகையிலையின் ஆன்மா.

**ஆயுளை முடிக்கும் பச்சைய அழகு**

நான்கு மாதங்களின் நிறைவில் இவற்றின் பச்சைய அழகு ஆயுளை முடிக்கிறது. ஊர்வலமாய் சென்று குடில் என்ற சுடலையில் புகை வைக்க தன் ஆன்மா துறந்து புகையிலையாக மறு பிறப்பெடுக்கின்றது. இந்தப் பிறப்புக்குப் பெரும் துன்பங்களை சுமக்கிறது.

தோட்டத்திலிருந்து ஊர்வலமாய் கொண்டுவரப்பட்டபுகையிலைகள் நில மட்டத்தில் இருந்து ஆறு அடி ஆழமான கிடங்கிலே வாழை மடல்கள்,தென்னோலைகள் அலங்கரிக்க அதன் மேல் விருந்தாளியாய் அமிழ்த்தப்பட்டு ஏழு நாள்களுக்கு அவிய விடப்படுகின்றது.இதில் புழுங்கி வெந்து மெலிந்து போகிறது புகையிலையின் ஆன்மா. மொத்தமாக ஏழு நாள்கள் கொண்ட இந்த வரவேற்பில் இந்த மூன்ற நாள்களுக்கு இலைச்சாறு கழண்று போதல் என்ற பெயரில் இடம்பெறுகிறது.அதனைத் தொடர்ந்து ஏனைய நான்கு நாள்களுக்கு வெளியே வந்து உலர்ந்து உடல் வாகு இழந்து போகிறது.

எழு நாள்களின் பிற்பாடு புகை வைத்தல் நிகழ்வுக்கு விருந்தாளியாய் அழைக்கப்படுகிறது புகையிலை.ஏழு அடிச்சுற்றிலே மண்ணால் அமைக்கப்பட்ட போறணை. அதன் உள்ளே நில மட்டத்திலிருந்து ஒரு அடிஆழத்துக்குக்கிடங்குவெட்டப்பட்டிருக்கும். போறணையின் மேற்பரப்பு திறந்திருக்கும். இதனை பரண் என்று சொல்லுகிறார்கள்.அதன் குறுக்காக நான்கு இஞ்சி இடைவெளிக்கு ஒன்று என மெல்லிய கமுகம் சிலாகைகள் வைக்கப்பட்டிருக்கும். பச்சைப் பனங் குருத்தோலையை வெட்டி தும்பாகக் கீறுகின்றனர். ஒவ்வொரு தும்பிலும் ஐந்து வரையான உடல் வாகு இழந்த புகையிலைகளைக் கட்டுகின்றனர்.எழுஅடிச்சுற்றிலேநிலைகொண்டுள்ள கமுகம் சிலாகை ஒவ்வொன்றிலும் நூறு வரையான புகையிலைகள் தலைகீழாக கட்டித் தொங்கவிடப்படுகின்றன.ஒரு தடவையிலே ஐந்தாயிரம் வரையான இலைகள் கட்டப்படுகின்றன.



புகை வைப்பதற்காக மூன்று அல்லது நான்கு ரூபா கொடுத்து தென்னங் கோம்பைகளும் ஒரு சாக்கு ஊமலுக்கு 200 ரூபா வீதம் கொடுத்து ஊமல்களும் வரவழைக்கப்படுகின்றன. ஒரு தடவை இடம்பெறும் புகை வைத்தலுக்கு 200 தென்னங்கோம்பைகளும் ஒரு சாக்கு ஊமலும் பயன்படுத்தப்படுகின்றன.இருந்தும் ஊமல் எவ்வளவு போடுகின்றோம் என்பதற்கு வரையறையில்லை.

மாலை ஏழு மணியளவிலே மூட்டப்படும் தீ அடுத்த நாள் காலை ஏழு மணிக்கு தணிந்து போகிறது.போடப்பட்ட தென்னங் கோம்பைகளும் ஊமல்களும் தீயில் மூண்டு புகைய புகையிலைகள் புகையிலே துவண்டு பொசுங்கி ஆன்ம ஈடேற்றம் கண்டு புகையிலையாக பிறப்பெடுக்கின்றது.

புகையிலே அவிந்து புதுப் பிறப்பெடுத்த புகையிலையை அன்பாய் அரவணைத்து எடுத்து ஐந்து நாள்களுக்குக் காற்றுப் பிடிக்க வைத்து சுவாத்தியம் கொடுக்கின்றனர். பின்னர் உயிர்பெற்ற புகை யிலையை பாடமாய்வீட்டினுள்ளே அடுக்கி ஊஞ்சலாட்டி சந்தர்ப்பங்கள் வரும்போது விற்று வாழ்வில் வளம் பெறுகின்றனர்.

**பெரியளவு முதல்**

ஒரு ஏக்கர் புகையிலைப் பயிரிடலுக்கு முதலாக மூன்று லட்சங்கள் வரை தேவைப்படுகின்றது.வியாபாரிகள் (போட்டி போட்டு எடுத்தால்) வந்த எடுத்தால் இந்த முதலீட்டுக்கு நான்கு லட்சங்கள் வரை இலாபம் கிடைக்கின்றது. அறு வடையின் போது மழை வந்துவிடக்கூடாது என வர்ண பகவானிடம் வேண்டி ஒவ்வோர் தடவையும் இவர்களின் பயணம் தொடர்கிறது.

இருந்தும்ஏனையபயிரிடலில்அவர்களின் உழைப்புக்கான அறுவடைகள் உள்ளூர் சந்தைகளிலே கிடைக்கிறதா என்றால் இல்லை. ஏனெனில் சந்தைகளிலே ராஜாக்களாக இருப்பவர்கள் வியாபாரிகள்தான். உழைப்பாளிகளான விவசாயிகள் அல்லர். அங்கே வியாபாரிகள் சொல்லுவதுதான் விலையாக நிர்ணயிக்கப்படுகின்றது.

அவர்கள் நல்ல வருமானத்தை மக்களிடம் விற்பதனால் ஈட்டிவிடுகின்றனர். மண்ணோடு உறவாடி தினம் உழைத்தவர்கள் ஊசலாடுகின்றனர்.

இருந்தும் விவசாயிகள் மண்ணோடு தினம் உறவாடுகின்றனர். கால ஓட்டத்தில் எமக்கு உணவுப் பயிர் அறுவடைகளை நலமாகத் தந்து எம்மோடு பயணிக்கின்றனர் இன்னமும் துடிப்போடு. நிலக்கிழாராய் வாழ்வில் சிறக்கின்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்றில் இன்றைய தினம்

1907 - நியூசிலாந்து நாடாளுமன்றம் தீயில் எரிந்து நாசம்
1917 - உலக மகா யுத்தம்I பிரித்தானிய ஜெனரல் எட்மன் அலன்பி ஜெரூசலத்தினுள் நுழைந்து மார்ஷல் சட்டம் நடைமுறை.
1941 - உலக மகா யுத்தம் 2 ஜேர்மனியும், இத்தாலியும் ஐக்கிய அமெரிக்கா மீது போர்ப் பிரகடனம்.
1946 - சர்வதேச நிறுவர் அவசர நிதியம் 'யுனிசெப்' ஐ.நா.வால் தொடங்கப்பட்டது.
1972 - அப்பலோ 17 சந்திரனில் தரையிறங்கியது.
1993 - கைலான்ட் ரவர் எனும் தொடர்மாடிக் கட்டம் மலேசியாவில் இடிந்து வீழ்ந்ததில் 48 பேர் பலி.
2001 - சீனக் குடியரசு உலக வர்த்தக நிறுவனத்தில் WTOஇணைவு
2005- அனுசரணைப் பணியாற்றுவது தொடர்பில் நோர்வே புலிகளுக்கும் அரசுக்கும் நிபந்தனை விதிப்பு.
- அண்மைய யாழ். நிலைமை பற்றி ஆராய இரண்டு பேர் கொண்ட குழுவை ஜனாதிபதி நியமித்தார்.
- அருட்கவி வினாசித்தம்பி காலமானார்.
2008 - பிரணாப் முகர்ஜி வந்தாலும் போர் நிறுத்தப்பட மாட் பாது என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு.
- கடும் சமரின் பின் திருமுறிகண்டிப் பகுதியைக் கைப்பற்றியதாக இலங்கை இராணுவம் அறிவிப்பு.
- இலங்கைத் தமிழர் மீதான கவனம் ஐ.நா. மற்றும் அமெரிக்காவிடம் இருந்து விலகுகின்றது என இன்னர் சிற்றி தெரிவிப்பு.
2009 - பிள்ளையார் கலியாணம் போல அதிகாரப் பகிர்வு பற்றிய அறிவிப்பு என உதயன் ஆசிரிய தலையங்கம் தெரிவிப்பு
- சரத் பொன்சேகா தேர்தலில் வென்றால் குடா நாட்டு இராணுவ முகாம்கள் அகற்றப்படும் என ஐ.தே.க.எம்பி டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா அறிவிப்பு.
2010 - வடமாகாண சபையின் ஏழு அலுவலங்கள் யாழில் பால் காய்ச்சி ஆரம்பம். ஜனவரியில் முழுஅளவில் இயங்கும் என அறிவிப்பு

## பழமொழிகள்

- அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
- அகல இருந்தால் பகையும் உறவாம்.
- அகல உழுகிறதை விட ஆழ உழு.
- அகல் வட்டம் பகல் மழை.
- அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை.
- அக்காடு வெட்டிப் பருத்தி விதைக்கிறேன் என்றால், அப்பா எனக்கொரு துப்பட்டி என்கிறான் பையன்.
- அகவிலை அறியாதவன் துக்கம் அறியான்.
- அசைந்து தின்கிறது மாடு, அசையாமல் தின்கிறது வீடு.
- அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான்.
- அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது
- அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா?
- அடக்கமே பெண்ணுக்கு அழகு.
- அடக்கம் உடையார் அறிஞர், அடங்காதவர் கல்லார்.
- அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
- அடாது செய்தவன் படாது படுவான்.
- அடி செய்வது அண்ணன் தம்பி செய்யார்
- அடி நாக்கிலே நஞ்சும் நுனி நாக்கில் அமுதமும்.
- அடியாத மாடு படியாது.
- அடி மேல் அடி வைத்தால் அம்மியும் நகரும்.
- அடுத்த வீட்டுக்காரனுக்கு அதிகாரம் வந்தால் அண்டை வீட்டுக்காரனுக்கு இரைச்சல் இலாபம்.
- அணில் கொப்பிலும், ஆமை கிணற்றிலும்.
- அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வாராது.
- அண்டை வீட்டு நெய்யே என் பெண்டாட்டி கையே.
- அதிகாரி வீட்டுக் கோழி முட்டை குடியானவன் வீட்டு அம்மியை உடைத்ததாம்.
- அத்திப் பழத்தைப் பிட்டுப்பார்த்தால் அத்தனையும் புழு.
- அந்தி மழை அழுதாலும் விடாது.
- அப்பன் அருமை மாண்டால் தெரியும்.




## நல்லவை

நல்ல நாள் இன்றேயாம்!
நல்லாசிரியன் அனுபவமாம்!
நல்ல பாடம் பொறுமைதான்!
நல்ல புத்தகம் வாழ்க்கையே!
நல்லதோர் நகை புன்னகையே!
நல்ல பேச்சு உண்மையாகும்!
நன் மருந்து நகைச்சுவையே!
நல்ல பழக்கம் உடலுழைப்பு!
நல்ல உறவு நட்பேயாம்!
நல்ல ஆயுதம் அஹிம்சையே!
நல்ல மதம் மனிதநேயம்!


எஸ்.நிலானி
ஏழாலை சைவ சன்மார்க்க வித்தி.



## வர்ணம் தீட்டலாம் வாங்க



## கறி மணம் நுகர்ந்ததற்குக் கட்டணம்



பரமார்த்த குருவும், அவருடைய சீடர்களும் அயலூரில் நடைபெற்ற ஓர் ஆல யத் திருவிழாவில் கலந்து கொள்வதற்காகப் புறப்பட்டனர். நல்ல வெய்யில் நேரத்தில் வழியில் ஒரு சத் திரத்தை அடைந்தனர். அந்தச் சந்திரத்தில் வெய்யில் பொழுதைக் கழித்து விட்டு வெய் யில் தாழ்ந் ததும் புறப்படலாம் என பரமார்த்த குரு தீர்மானித்தார். சீடர்களும் சம்மதித்தனர்.

அந்த சத்திரத்தில் பயணிகள் தங்கு வதற்கு இலவசமாக அனுமதியளித் தனர். ஆனால் உணவு தேவைப்படுபவர்கள் அதற்கு ஒரு குறிப் பிட்ட அளவு கட்டணம் கொடுக்க வேண்டும்.

பரமார்த்த குரு சத்திரக்காரனை அணுகி, "நாங்கள் பகல் பொழுது மட்டுமே தங்கி இளைப் பாறிச் செல்லத் தீர்மானித்திருக்கிறோம்" என்றார்.

"நீங்கள் அனைவரும் இலவசமாகத் தங்கலாம் உணவு தேவையானால் அதற்கு மட்டும் கட் டணம் உண்டு. உங்களுக்கு உணவு தேவைப் படுமா? என்று சத்திரக்காரன் கேட்டான்.

"நாங்கள் கட்டுச் சோறு கொண்டு வந்திருக் கிறோம். அதைச் சாப்பிட்டு பசியாறி விடுகிறோம்!" என்றார் பரமார்த்த குரு. சத்திரக்காரன் அவர்கள் தங்குவதற்கு இடமளித்தான். சற்று நேரத்துக் கெல்லாம் ஒரு செல்வந்தரின் குடும் பம் சத்திரத் துக்கு வந்தது. சத்திரக்காரன் அவர் களை மிக வும் பரிவோடு வரவேற்று உபசாரம் செய்தான்.

"எங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் நல்ல ருசிகரமான சாப்பாடு தயார் செய். எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருகிறோம்" என்று கூறிய செல்வந்தர் ஒரு பெருந்தொகையைச் சத்திரக் காரனிடம் அளித்தார். மிகவும் மகிழ்சியடைந்த சத்திரக்காரன் ஆடு ஒன்றை விலைக்கு வாங்கி அடித்து அதன் இறைச்சியைக்கொண்டு குழம்பு, வறுவல், பொரியல் எல்லாம் தயார் செய்து, செல் வர் குடும் பத்தினருக்குச் சாப்பாடு போட்டான்.

ஆட்டு இறைச்சியின் அருமையான மணம் பர மார்த்த குரு, சீடர்களின் மூக்கைத் துளைத்தது.

"சீடர்களே இது நல்ல நேரம். ஆட்டு இறைச்சியின் மணம் அற்புதமாக இருக்கிறது. கட்டுச்சோறு மூட் டையை அவிழ்த்துக்கொள்ளுங்கள். ஆட்டு இறைச் சிச் சமையலின் மணத்தை நுகர்ந்து கொண்டே சாப்பிட்டு விடலாம்" என்றார் பரமார்த்த குரு.

"நல்லயோசனை" என்று கூறியவாறே சீடர்கள் கட்டுச் சோற்று மூட்டையை அவிழ்த்தார்கள். அவர் கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில் சத்திரக் காரன் அந்தப் பக்கமாக வந்தான். பரமார்த்த குரு அவனை நோக்கி, சத்திரக் காரரே உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். தாங் கள் சமைத்திருக்கும் ஆட் டிறைச்சியின் மணத்தை நுகர்ந்துக் கொண்டே மிகவும் திருப்தியாகச் சாப்பிடுகிறோம்" என்றார்.

அவர்கள் சாப்பிட்டு முடிந்ததும் சத்திரக்காரன் பரமார்த்த குருவைப் பிடித்துக்கொண்டான்.

"நான் சமைத்த இறைச்சி மணத்தை நுகர்ந் தவாறே நீங்களெல்லாம் சாப்பிட்டதால் அதற்கு நீங்கள் கட்டணம் கொடுத்தாக வேண்டும்" என்றான்.

"இது என்ன நியாயம்? நாங்கள் நீர் சமைத்த இறைச்சியையா சாப்பிட்டோம்? அந்த மணத்தை மட்டும் தானே நுகர்ந்தோம். அதற்குக் கட்டணம் கேட்கிறீரே. இது கடவுளுக்கே அடுக்காதே" என்று பரமார்த்த குரு பிரலாபித்தார்.

"என் இறைச்சி சமையலின் மணத்தை நுகர்ந் ததனால்தான் திருப்தியாகச் சாப்பிட முடிந்தது என்று நீர் கூறினீர் அல்லவா? நீர் திருப்தியாகச் சாப்பிட என் இறைச்சிச் சமையல் துணை செய்த தால்.அதை நீங்களெல்லாம் சாப்பிட்டதாகவே ஆகி விட்டது. கட்டணம் கொடுத்தாக வேண்டும்" என்று சத்திரக்காரன் வற்புறுத்தத் தொடங்கினான்.

"கட்டணம் தரமாட்டேன் " என்று பரமார்த்த குரு திட்டவட்டமாகக் கூறினார்.

அவர்கள் சச்சரவு வலுத்தது. பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாமல் போகவே, சத்திரக்காரனும், பரமார்த்த குருவின் குழுவினரும் அந்த ஊர் நீதிபதியிடம் சென்று வழக்குரைத்தனர்.

நீதிபதி அவர்கள் இருவருடைய வாக்கு மூலத் தையும் கேட்டறிந்தார். பிறகு "ஐயா, சத்திரக்காரரே உம்முடைய வழக்கில் பசை இருக்கிறது. உம்மு டைய சமையல் மணத்தை நுகர்ந்தவாறு இந்தச் சாமியாரும்சீடர்களும்சாப்பிட்டதால்இவர்கள்உமக்குக் கட்டணம் செலுத்தித்தான் ஆக வேண்டும்" என்று நீதிபதி தமது தீர்ப்பைக் கூறத் தொடங்கினார்.

சத்திரக்காரன் மகிழ்ச்சியால் துள்ளினான். பரமார்த்த குருவுக்கும் அவர் சீடர்களுக்கும் இடி விழுந்தது போலாயிற்று. அவர்கள் அடைந்த மனவேத னைக்கு அளவேயில்லை. நீதிபதி தமது தீர்ப்பை மேலும் தொடர்ந்து கூறத் தொடங்கினார்.

"சாமியாரும் அவர் சீடர்களும் உமக்குக் கட்ட ணம் செலுத்தத்தான் வேண்டும் என்றாலும் அதை அவர்கள் பணமாகக் கொடுக்கத் தேவையில்லை. பணத்தை ஒரு வெண்கலக் குவளையில் போட் டுக் கலகலவென ஆட்டி அதன் ஓசையை மட்டும் சத்திரக்காரர் கேட்குமாறு செய்தால் போதும். ஏனென்றால் சந்திரக்காரனின் சாப்பாட்டை சாமி யாரும் சீடர்களும் சாப்பிடவில்லை. சாப் பாட் டின் மணத்தைத்தான் நுகர்ந்ததற்குக் கட்ட ணமாகப் பணத்தின் ஓசையை நீர் காதாரக் கேட்டு விடு வது தான் முறையாக இருக்கும். இதுதான் என் தீர்ப்பு" எனக் கூறி நீதிபதி முடித்தார்.பரமார்த்த குரு அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை.

"பரமபக்தனாகிய எனைக்கடவுள் எப்போதுமே கைவிட மாட்டார் என்பது நிரூபணமாகி விட்டதல் லாவா!" என்றுதமது சீடர்களைநோக்கிபெருமை யுடன் கூறிய பரமார்த்த குரு நீதிபதியின் பக்கம் திரும்பி அவரை வணங்கி அவருடைய தீர்ப்புக்காக நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவிக்கு ஒரு மடல்

அன்புசால் மாணவி தமிழரசிக்கு,
இங்கு நான் நலம். உன் நலமறிய ஆவல். பாடசாலை வேலைப்பளு காரணமாக உனது மடலுக்குப் பதில் எழுதத் தாமதமானதற்கு வருந்துகிறேன்.

2016 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையை எழுதவிருந்த உனது நண்பியின் தங்கை சில நாள்களே வீதியில் கண்டு பரிச்சயமான இளைஞனுடன் சென்றுவிட்டதாகவும், பெற்றோரும், சகோதரர்களும் பெரும் சோகத்தில் ஆழ்ந்திருப்பதாகவும் எழுதியிருந்தாய். அந்த இளைஞன் பற்றிய விடயங்கள் பெற்றோருக்கோ, ஏனையோருக்கோ முழுமையாகத் தெரியாத விடயம் என்றும் கூறியிருந்தாய்.

இன்று, இவ்வாறான திருமணங்கள் எமது பிரதேசங்களில் மலிந்துபோய் விட்டன. இளவயதுத் திருமணங்களால் பல குடும்பங்கள் சின்னாபின்னப்பட்டுப் போயுள்ளன.

கல்வி கற்க வேண்டிய காலத்தை மிகவும் பயனுள்ள வகையில் கழிக்க வேண்டும். இன்று சாதாரண உத்தியோகத்துக்குக் கூட ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் சித்தியடைந்திருத்தல் அவசியமாகவுள்ளது. உயர்தரம் கற்பதற்கான வாய்ப்பு எல்லா மாணவர்களுக்கும் கிடைப்பதில்லை. கிடைத்தவர்கள் அந்த வாய்ப்பை நழுவவிடுவது வேதனைக்குரியது.

> இவர்களால் மகிழ்ச்சியான வாழ்க்கையை அனுபவிக்க முடியுமா? துள்ளித் திரியும் பள்ளிப் பருவத்தில் திருமண பந்தம் என்ற சுமையைத் தலை மேல் தாங்கிக் கொண்டு தனிக்கட்டைகளாகித் தவிக்க வேண்டுமா?

உணர்வுகளின் கொந்தளிப்பால் கல்வியை விடகாதலே மேல்என்று செல்கின்ற மாணவிகள் மிகக் குறுகிய காலத்துக்குள்வேதனையும், சோதனையுமாகக் கண்ணீர் வடிக்கின்ற நிலையை நாம் கண் கூடாகக் காண்கின்றோ மல்லவா?

இருமனங்கள் இணைவதுதான் திருமணமாகும். அதுவும் அவர்கள் வாழும் காலம் வரை ஒருவருக்கொருவர் கொழு கொம்பாய் வாழ வேண்டும். ஒருவரை ஒருவர் மதிக்க வேண்டும். அத்துடன் இவர்கள் தங்கிவாழ்பவர்களாக இருக்கக் கூடாது. தமது தேவைகளைத் தாமே நிறைவேற்றக் கூடிய நிதிவளத்தைக் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும். ஒருவனுக்கு ஒருத்தி என்ற தமிழ்ப் பண்பாட்டின் கண்களாக வாழ வேண்டும்.

இரு வீட்டார் ஆதரவும் இவர்களுக்கு இல்லை என்பது சிந்திக்க வேண்டிய விடயம். இவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? இவர்களால் மகிழ்ச்சியான வாழ்க்கையை அனுபவிக்க முடியுமா? துள்ளித் திரியும் பள்ளிப் பருவத்தில் திருமண பந்தம் என்ற சுமையைத் தலைமேல் தாங்கிக் கொண்டு தனிக்கட்டைகளாகித் தவிக்க வேண்டுமா?

நாளைய உலகின் சிருஷ்டி கர்த்தாக்களின் வாழ்வு இவ்வாறு சீரழிகின்றதே என்ற ஆதங்கத்தில்தான் இதனை உனக்கு எழுதுகின்றேன்.

இளவயதுத் திருமணங்கள் விரைவிலேயே நீதிமன்றப் படிகளை மிதிப்பதில் முடிவடைவதை இன்று நாம் காண்கின்றோம். மிகச் சிறிய வயதில் ஒரு குழந்தையையும் பெற்றுவிட்டு அதனைத் தோள்மீது தாங்கிய வண்ணம் நீதிமன்றத்தில் நிற்கின்ற இளவயதுப் பெண்களைப் பார்க்கும் போது மனம் வேதனையில் துடிக்கின்றது.

பாசத்துடன் பழகிய உறவுகளை ஒரு கணத்தில் பிரிந்துவிட்டு எவனோ முன்பின் தெரியாத ஒருவனுடன்எந்தநம்பிக்கையில் இந்தப் பெண்கள் செல்கிறார்கள் என்பது புரியவில்லை. சுயநலமும், இச்சையும்கொண்ட ஆண்கள் தமது தேவை முடிந்த பின்னர் தம்மை நம்பிவந்த பெண்களைக் கைவிடுவதுதான் வழக்கமாகி விட்டது. ஆகவே பெண்கள் தான் இதில் கவனமாக இருத்தல் வேண்டும்.

என் பிரியத்துக்குரிய மாணவியே! உன் நண்பியின் நிலை கண்டு கலங்காதேயம்மா.

இன்று பல மாணவிகள் இவ்வாறான நிலையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். பெற்றோரின் விருப்பமின்றி இளவயதுத்திருமணங்கள் பல மணமுறிவு கேட்டு நீதி மன்றம் வரை சென்று கொண்டிருக்கின்றன.

நீ உனது நண்பிகள், ஏனைய மாணவிகளிடத்திலே இளவயதுத் திருமணத்தின் பாதிப்புப் பற்றிக் கூறுவாயாக. எம் வாழ்வில் ஒளியேற்றுவது கல்வி மட்டுமே என்பதை எடுத்துக் கூறுவாயாக.

உன் பெற்றோரையும், சகோதரர்களையும் வாஞ்சையுடன் விசாரித்ததாகக் கூறிவிடு. உனக்கும், உனது நண்பிகளுக்கும் இனிய ஆசீர்வாதங்கள். மீண்டும் மறுமடலில் சந்திப்போம்.

பிரியமுடன், ஆசிரியை.

# உரிமைகளுக்கு மதிப்பளியுங்கள்

ஒவ்வொரு மனிதனும் தான் வாழ்வதுடன், பிறரையும் வாழவிட வேண்டும் என்பதை வலியுறுத்தும் விதமாக டிசெம்பர் 10ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது. மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை அனைத்துத் தரப்பினருக்கும் வலியுறுத் துவதே சர்வதேச மனித உரிமைகள் தினத்தின் நோக்கமாகும்.

1948 டிசெம்பர் 10ஆம் திகதி ஐ.நா. பொதுச் சபையால் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதனைக் கௌரவிக்கும் விதத்தில் 1950ஆம் ஆண்டுமுதல் இத்தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

உலகில் வாழும் அனைத்து மனிதர்களும் சமமானவர்களே! ஒருவரிடமிருந்து நாம் எவ்விதமான உரிமைகளை எதிர்பார்க்கிறோமோ அதே உரிமைகளை மற்றவர்களுக்கும் வழங்கவேண்டும். எவரும் எவரையும் அடிமைப் படுத்தக் கூடாது என்பதையே ஐ.நா. மனித உரிமைகள் சாசனம் வலியுறுத்துகிறது.

ஒருவர் பிறக்கும் போதே அவருக்கு மனித உரிமைகள் வந்துவிடுகின்றன. உயிர் வாழ்வதற்கான உரிமைகள், கருத்துச் சுதந்திரம் இவற்றில் முக்கியமானவை. மனிதன் சுதந்திரமாக வாழ்வதற்கான கல்வி, மருத்துவம், சுகாதாரம், குடி தண்ணீர் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் மற்றும் மனிதனாக வாழ்வதற்கு அவசியமான உரிமைகள் அனைத்தையும் மனித உரிமைகள் எனலாம். இவை அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றவை.




சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று, மனித உரிமைகள் குறித்துக்கரிசனை கொள்ளப்படும் நாடுகளில் இலங்கையும் ஒன்று என்பதை நாம் மறந்துவிட முடியாது. இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற உலகின் முக்கிய மனித உரிமைகள் அமைப்புகளும் அமெரிக்க வெளிவிவகார அமைச்சும், ஐரோப்பிய ஒன்றியம் போன்ற பன்னாட்டு நிறுவனங்களும் கடந்த காலங்களில் கவலை வெளியிட்டு வந்தன. ஜனவரி 8 ஆட்சிமாற்றத்தின் பின்னர் மனித உரிமைகள் தொடர்பாக குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எனினும், இலங்கையில் மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கும் போரின் இறுதிப்பகுதியில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பானவர்களைப் பொறுப்புக்கூற வைப்பதற்கும் மைத்திரி-ரணில் ஆட்சி துணிச்சலான சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் மனித உரிமைகளை மீறியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த போராளிகள் கொல்லப்பட்டமை, பொது மக்கள் கொலைகள், அரசியல் கொலைகள், சிறுவர் ஆள்சேர்ப்பு, ஆட்கடத்தல், வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பெண்களுக்கு எதிரான வன்முறைகள், பொலிஸாரின் பொறுப்பிலிருந்த கைதிகள் தாக்கப்பட்டமை, இப்படி இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை அடுக்கிக்கொண்டு போகலாம்.

மனித உரிமைகளை மதிப்பதாகத் தொடர்ச்சியாகக் கூறிவரும் நல்லாட்சி அரசு, கடந்த 30 ஆண்டு காலமாகத் தொடர்ந்து வரும் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் மெத்தனப் போக்குடன் இருந்து வருகின்றது. அது மட்டுமல்ல கடந்த கால ஆட்சியில் இருந்த அரசுகள் தமிழர் தீர்வு விடயத்தில் அக்கறையற்றுத் தம்பாட்டிலேயே நடந்து கொண்டன. தமிழர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள், சலுகைகள் என்பவற்றை வழங்காது தீர்வை இவ்வாறு இழுத்தடித்து வருவதும் ஒரு மிகப் பெரும் மனித உரிமை மீறலே ஆகும்.

இதனை ஆட்சியில் இருக்கும் அரசு இனியாவது புரிந்து கொண்டு பொறுப்புடன் செயலாற்ற வேண்டிய கட்டாயமும் அவசியமும் ஏற்பட்டிருக்கிறது.

சர்வதேச நாடுகளிடம் மனித உரிமைகளைப் பாதுகாப்பதாக அடிக்கடி உறுதியளித்து வரும் மைத்திரிபால சிறிசேன, தனது ஆட்சிக் காலத்தில் தமிழர்களுக்கான ஒரு நிரந்தரத் தீர்வை வழங்குவதற்கு முன்வருவாரானால், அதுவே இலங்கையின் மனித உரிமை மதிப்பளிப்பு விடயத்துக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும் என்பது ஐயமில்லை.

மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும். இவையே இன்றைய தினத்தின் இலங்கை வாழ் தமிழ் மக்களின் ஆதங்கங்களாகும்.

# துணிந்து நில் பெண்ணே!




பெண்ணே உன்னைப் பாட
பாரதியோ கம்பனோ இன்றில்லை
காலம் உன்னை மாற்றிய போதும்
கயவர்கள் கங்கணம் கட்டுவதை
கடைசி வரை நிறுத்தவில்லை
கண்ணே மணியே என்று நட்புடன்
அழைத்த போதும் வார்த்தையில்
மயங்கிடாதே பெண்ணே!
காலம் கெட்டுக் கிடக்குது
உறவுகள் உன்னுடன் உருக்கமாக
பேசினாலும் நீயே உனக்கு காவல்
உன்னைப் படைத்த பிரம்மன் உன்னுடன்
துணிவையும் கூட படைத்திருக்கலாம்
ஆனாலும் துயரம் கொள்ளாதே
துணிந்து நில் உன்னை
துஸ்டன் கூட நெருங்கான்
நெஞ்சமதில் துணிவுடனே
நித்தம் நித்தம் வாழ்ந்திடவே
நிதமும் நினைத்திடு
சுய புத்தியுடன் வாழ
இயல்பாக கற்றுக்கொள்
உலகத்தை புரிந்து
நியதியில் வாழ்ந்திடு
நிம்மதி கிடைக்கும்
வாழ்க்கை எனும் பாடத்தில்
வரன்முறை உள்ளதென்று
வாழ்வதே உன் இலக்கு
பொறுமையுடன் என்றும் நீ
வாழ்வதே உனக்கு சிறப்பு

எஸ்.நிலா, ஏழாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** திட்டமிட்ட செயல் சிறப்பாக நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியில், வருமானம் அதிகரிக்கும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். பெண்களுக்கு தாய்வீட்டாரின் உதவி கிடைக்கும்.

**இடபம்:** எதிரி, இடம் மாறிப் போகும் சூழ்நிலை உருவாகும். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் அதிகரிக்கும். பெண்கள், பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு மகிழ்வர். மாணவர்கள், போட்டியில் பங்கேற்று வெல்வர்.

**மிதுனம்:** நண்பரின் ஆலோசனையை ஏற்று பின்பற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். சுப விடயம் குறித்த பேச்சில் முன்னேற்றம் ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்த்த பதவி கிடைக்கும்.

**கடகம்:** மனதில் குழப்பம் உண்டாகி மறையும். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள், தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர். மாணவர்கள், ஆர்வத்துடன் படிப்பது நல்லது.

**சிங்கம்:** நண்பருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில், முயற்சிக்கேற்ப இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். வாக்குவாதம் செய்வதைப் பெண்கள் தவிர்க்கவும்.

**கன்னி:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் அதிகரிக்கும். வழக்கு விவகாரத்தில், சாதகமான தீர்வு கிடைக்கும். ஆரோக்கிய விடயத்தில் அக்கறை கொள்வீர்கள்.

**துலாம்:** எதிலும் முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். உடல் நலத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படும். வாகனப் பயணத்தில், மித வேகம் பின்பற்றவும்.

**விருச்சிகம்:** திட்டமிட்டபடி பணிகளை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், இலாபம் அதிகரிக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் அக்கறையுடன் ஈடுபடுவர்.

**தனுசு:** பேச்சில் நிதானத்தைப் பின்பற்றுவது நன்மையளிக்கும். தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். வெளியூர் பயணம்பயன்அறிந்துமேற்கொள்வதுநல்லது. மாணவர்கள் படிக்கும் நேரத்தை அதிகப்படுத்துவர்.

**மகரம்:** தர்ம சிந்தனையுடன் பிறருக்கு உதவுவீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் உயரும். ஆரோக்கியமான விடயத்தில் அக்கறை கொள்வீர்கள்.

**கும்பம்:** எதிரி கூட அன்பு பாராட்டி நெருங்குவர். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த வருமானம் வரும். காணாமற் தேடிய பொருள் கைக்கு வந்து சேரும். அரசியல்வாதிகள் தலைமையின் ஆதரவைப் பெறுவர்.

**மீனம்:** மனதில் இனம் புரியாத குழப்பம் ஏற்படலாம். தொழிலில், உழைப்புக்கேற்ப வருமானம் கிடைக்கும். பெண்களுக்கு தாய் வீட்டாரின் உதவி கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.

# அனைத்து அம்மாக்களுக்குமான அர்ப்பணிப்பு

கடவுள் எல்லோருடைய வீட்டிலும் இருக்க முடியாது. எனவே தான் 'அம்மா' என்னும் உறவை வரமாகத் தந்தான்.

காலையில் நீங்கள் சாப்பிடும்போது 'அம்மா எனக்கு இரண்டு தோசைகள் போதும் என்று சொன்னால்'. அம்மா உங்களுக்காக நான்கு தோசைகளை எடுத்து வருவாள்..

நீங்கள் வீட்டை விட்டு வெளியே சென்றால், அம்மா தொடர்ச்சியாக ஒரு மணிநேரத்துக்கு ஒரு முறை உங்களை அழைத்து நலம் விசாரிப்பாள்.

வீட்டில் 3 அப்பிள்களும் உங்கள் குடும்பத்தில் 4 உறுப்பினர்களும் இருக்கும் போது, அம்மா 'எனக்கு அப்பிள் பிடிக்காது' என்று கூறுவாள்.

இரவு நீங்கள் போர்வைக்குள் தூங்கச் செல்லும் வரையில் அம்மா உங்களுக்காகவே இன்னோர் இதயமாக துடித்துக் கொண்டிருப்பாள். நீங்கள் வீட்டை விட்டு மற்றொரு நகரம் அல்லது நாட்டுக்குச் செல்லும்போது அம்மா சிறப்பாகச் செய்த தின் பண்டங்களில் ஒரு தொகையை எடுத்து வைப்பதுடன். 'உனது நண்பர்களுக்கு அனைத்து தின்பண்டங்களும் கொடுக்க வேண்டாம். அவற்றை நீயே சாப்பிடு. என்றும் கூறுவாள்.

நீண்ட நாள் கழித்து அல்லது நீண்ட நேரப் பயணத்தின் பின்னர் வீட்டுக்கு திரும்பி வரும்போது அம்மா சொல்லும் முதல் வார்த்தை 'களைத்திருப்பாய் முதலில் சாப்பிட வா' என்பது தான்.

பரீட்சைக்காக நீங்கள் நள்ளிரவில் படிக்கும் போது தூக்கத்தைப் போக்க நீங்கள் குடிக்க, சாப்பிட தேநீர் அல்லது சிற்றுண்டியும் செய்து தருவாள். ஆனால், அவள் அந்தப் பொழுதுகளில் இழந்தவை தொடர்பாக வருந்தமாட்டாள்.

**முடிவு**: சில சமயங்களில், உங்களுக்கு அம்மாவைப்பிடிக்காமல்போகலாம், சண்டை போடலாம், அம்மாவைக் கை விட்டு விடலாம். ஆனால் ஒரு அம்மா எப்போதும்ஒருஅம்மாவாகவே இருப்பாள்.

WhatsApp படித்ததில் பிடித்தது

நீங்கள் எப்போதும் அவருடைய குழந்தைதான். தாய் உங்களைக் நேசிப்பதை ஒருபோதும் நிறுத்த முடியாது ..

எனவேதான் இந்த உலகில் எவராலும் இலகுவாக. ஒரு அம்மாவாக நடந்து கொள்ள முடியாது.

றோட்டில ஓட வேண்டிய லொறிகள் ஆற்றில் ஓடியதால்...










வீட்டுக்குள்ள குளத்தை கட்டுறவன் வெளிநாட்டுக்காரன்.



குளத்துக்குள்ள வீட்டை கட்டுறவன் தமிழ்நாட்டுக்காரன்.



பேஸ் புக்கில் பிடித்தவை...

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | 6 | 3 |
| 8 | | | 5 | | | 1 | | 9 |
| | 9 | | 6 | | 4 | 7 | | |
| 9 | | | | | 6 | | 4 | |
| | | 7 | 4 | | 2 | 9 | | |
| | 2 | | 1 | | | | | 6 |
| | | 9 | 3 | | 5 | | 7 | |
| 1 | | 4 | | | 8 | | | 2 |
| 7 | 3 | | | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 7 | 4 | 1 | 3 | 6 | 8 | 2 | 5 |
| 1 | 3 | 2 | 7 | 5 | 8 | 4 | 9 | 6 |
| 8 | 5 | 6 | 2 | 4 | 9 | 1 | 3 | 7 |
| 4 | 9 | 5 | 8 | 2 | 1 | 7 | 6 | 3 |
| 6 | 2 | 3 | 5 | 7 | 4 | 9 | 1 | 8 |
| 7 | 1 | 8 | 6 | 9 | 3 | 5 | 4 | 2 |
| 3 | 8 | 1 | 9 | 6 | 7 | 2 | 5 | 4 |
| 2 | 4 | 9 | 3 | 8 | 5 | 6 | 7 | 1 |
| 5 | 6 | 7 | 4 | 1 | 2 | 3 | 8 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டும். சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

வெளிச்சம்™ @prakashalto · Nov 30
ஐந்தறிவுள்ள விலங்குகளும் பறவைகளும் கூட இயற்கை இடரை முன் கூட்டியே கணித்து இடம்மாறி சென்று விடுகின்றன ஆறறிவென பெருமை கொள்ளும் நாம் தான்....


விக்டர் Talks @KaanVictor · Nov 30
வேறொருவரைத் திருமணம் செய்திருக்கலாம் என்ற எண்ணம் ஒரு முறை கூட வராத திருமண வாழ்க்கை தான் காதல் நிறைந்த வாழ்க்கை

Hashini @hashini1005 · Oct 28
இருக்க வேண்டியது மூன்று - #தூய்மை, நீதி, நேர்மை
அடக்க வேண்டிய மூன்று - #நாக்கு, நடத்தை, கோபம்
பெற வேண்டிய மூன்று - #தைரியம், அன்பு, மென்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இது புதுசு





### நாகரிக ஆபரணங்கள்

பகட்டற்ற நாகரிக ஆபரணங்கள் தற்போது புதுவரவாகியுள்ளன. கற்கள் பதித்த ஆபரணங்களில் வரவுக்குப் பின்பு , உலோக வேலைப்பாடுகளுடன், கனதியான ஆபரணங்களாக வட இந்தியப் பாணியில் வடிவமைக்கப்பட்டுள்ளன. காலசார ஆடைகளுக்கும், நாகரிக ஆடைகளுக்கும் பொருந்தும் இந்த வகை அணிகலன்கள், வெளிநாட்ட வரை அதிகம் ஈர்க்கும் ஒன்றாகும். தற்போது இந்த வகை நெக்லஸ்கள் கடைகளில் 1,000 - 2,200 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றன. அத்துடன் பலவர்ணங்களில் கண்ணாடி வளையல்களும் கிடைக்கின்றன. கண்ணாடி வளையல் ஒன்றின் விலை ரூபா 80 - 100 ஆகும். ஒரு வளையல் அணிந் தாலே மிகவும் அழகாகவும் ஆடம்பரமாகவும் தெரியும்.


## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 140 | 80 | 100 | 120 | 100 | 140 | 100 |
| கத்தரி | 120 | 120 | 130 | 160 | 140 | 200 | 70 |
| கரட் | 160 | 160 | 180–280 | 180 | 280–300 | 400 | 300 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 50 | 40 | 30 |
| பயிற்றை | 250 | 180 | 180–200 | 120 | 220 | 280 | 250 |
| பாகல் | 300 | 280 | 250 | 300 | 240 | – | 350 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 80 | 80 | 80 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 100 | 100 | 90 | 80 | 120 | 80 |
| சி.வெங்காயம் | 100 | 140 | 70–120 | 120 | 120 | 200 | 100 |
| பூசணி | 40 | 50 | 60 | 40 | 40 | 80 | 40 |
| தக்காளி | 200 | 200 | 160 | 200 | 220 | 240 | 160 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 40 | 50 | 80 | 40 |
| கீரை | 50 | – | 50 | 20 | 50 | 40 | 50 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 30 | 40 | 30 | 50 | 15 |
| பச்சை மிளகாய் | 1000 | 650 | 800–1000 | 700 | 700 | 1000 | 800 |
| புடோல் | 120 | 120 | 120 | 120 | 100 | 180 | 120 |
| கோவா | 120 | 180 | 120–150 | 160 | 140 | 200 | 180 |
| வெண்டி | 140 | 120 | 150 | 120 | 100 | 160 | 100 |
| போஞ்சி | 300 | 280 | 300 | 240 | 240 | 240 | 220 |
| லீக்ஸ் | 200 | 160 | 200 | 160 | 180 | 240 | 160 |
| தேங்காய் | 50 | 45 | 50 | 50–60 | 40 | 55–60 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 60 | 70 | 70 | 60–70 | 80 | 120 |
| தேசிக்காய் | 250 | 200 | 150 | 150 | 220 | 200 | 70 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 20 | 20 | 30 | 15 |
| கறிமிளகாய் | 300 | – | 600 | 340 | 400 | 400 | 300 |
| இராசவள்ளி | 300 | 160 | 250 | – | 220 | – | 200 |

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 700 | 700 | 600 | 600 |
| நண்டு | 300 | 400 | 300 | 400 | 200 | - |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 700 | - |
| பாரை | 450 | 450 | - | 500 | 600 | 400 |
| சுறா | 400 | 500 | - | 600 | - | - |
| சீலா | 300 | 450 | 400 | 450 | 350 | 350 |
| விளை | 650 | 400 | 400 | 600 | 400 | 400 |
| முரல் | 300 | 450 | 300 | 500 | 200 | - |
| கும்பிளா | 350 | 350 | 300 | 480 | 200 | 300 |
| கிழாக்கன் | 400 | 800 | 300 | 500 | - | - |
| ஒரா | 350 | 400 | 300 | 500 | - | 300 |
| திரளி | 200 | 250 | 100 | 350 | 200 | - |
| நகரை | 150 | 250 | 100 | 500 | 200 | 300 |
| சூடை | 150 | 150 | 100 | 200 | 200 | - |
| ஒட்டி | 200 | 150 | 200 | 300 | 300 | - |
| திருக்கை | 150 | 300 | - | 300 | 200 | - |
| பாலை | 400 | 250 | - | 500 | 300 | - |
| வாளை | 100 | 150 | 200 | 300 | 100 | 250 |
| கொய் | 50 | 150 | 80 | 150 | 50 | - |
| மதனம் | 300 | 200 | 300 | 200 | 300 | 300 |

## சமைப்போம் வாங்க



### புடோலங்காய் பொரித்த குழம்பு

**தேவையான பொருள்கள்:**

புடோலங்காய் - 200 கிராம்
துவரம் பருப்பு அரைக்கப்
மஞ்சள் தூள் - அரைக்கரண்டி
மிளகுத் தூள் - 1 கரண்டி
உப்பு - தேவைக்கு.

வறுத்து அரைக்க...
எண்ணெய் - 2 கரண்டி
உளுத்தம் பருப்பு - 1 கரண்டி
காய்ந்த மிளகாய் - 3
துருவிய தேங்காய் - 3 கரண்டி
மிளகு, சீரகம் - 1 கரண்டி
அரிசி - 1 கரண்டி
கடுகு - அரைக்கரண்டி
பெருங்காயத் தூள் - அரைக்கரண்டி
கறிவேப்பிலை - சிறிது

**செய்முறை:**

துவரம் பருப்பில் மஞ்சள் தூள் சேர்த்து, சமையல் ஏரிவாயுவில் வேக வைத்து மசித்து வைக்கவும். தாச்சியில் எண்ணெய் விட்டு உளுத்தம் பருப்பு, காய்ந்த மிளகாய், துருவிய தேங்காய், அரிசியுடன் மிளகு, சீரகம் சேர்த்து வறுக்கவும்.

வறுத்ததை தண்ணீர் சேர்த்து நைசாக அரைக்கவும். இன்னொரு பாத்திரத்தில் புடோலங்காய், உப்பு, மிளகுத் தூள் சேர்த்து வேக வைத்து எடுக்கவும். தாச்சியில் வேக வைத்த பருப்பு, காய் கலவை, அரைத்த கலவை சேர்த்துக் கொதிக்க விடவும்.

கொதித்ததும் கடுகு, உ.பருப்பு, பெருங்காயத் தூள், கறிவேப்பிலை தாளித்து குழம்புடன் சேர்க்கவும்.

### நாளை

கார்த்திகை -26
சனிக்கிழமை 12.12.2015
திதி: பிரதமை பி.ப. 04.53
நட்சத்திரம்: மூலம் பி.இ.03.00
ராகுகாலம்: 09.20-10.50 வரை
சுபநேரம்: 03.20- 04.50 வரை



### மரக்கறி வாங்கும் போது....

**வெள்ளரி:** மேல் நகத்தால் குத்திப் பார்த்தால் நகம் உள்ளே இறங்கினால், நல்ல காய். விதைகள் குறைவாக இருக்கும்.

**பச்சை மிளகாய்** : நீளமானது சற்றுக் காரம் குறைவாக இருக்கும். சற்றே குண்டானது தான் காரம் தூக்கலாக வாசனையும் மிக்கதாக இருக்கும்.

**வாழைத் தண்டு**: மேல் பகுதி நார் அதிகம் இல்லாமலும் உள்ளிருக்கும் தண்டுப் பகுதி சிறுத்தும் இருப்பதாகப் பார்த்து வாங்க வேண்டும்.

**வெள்ளை வெங்காயம்**: நசுக்கினாலே சாறு வரும்படி இருக்க வேண்டும்.

**முருங்கைக் காய்:** கட்டை மற்றும் ஆட்காட்டி விரல்களைப் பயன்படுத்தி சிறிது முறுக்கினால், எளிதாக வளைந்தால் அது நல்ல முருங்கைக்காய்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயந்திர

செய்தல், மேலே குறிப்பிட்ட நிய மங்களை மீறி இழுவை நடவடிக்கைகளில் ஈடு படுவோருக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளை தெளிவாகக் குறிப்பிடு தல் என்பன மேற்படி சட்டத் திருத்தத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டு மீனவர்கள் எமது கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுவதால், எமது மீனவர் கள் குறிப்பாக வடபகுதி மீனவர்கள் பெரிய நெருக்கடிக்களை எதிர்நோக்கியுள்ளனர். இதைத் தடுப்பதற்கு நாம் பல்வேறு நடவ டிக்கைகளை எடுத்துள்ளோம். அதன் ஒரு நடவடிக்கையாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்திருந்தோம். அதன டிப்படையிலேயே இந்தச் சட்டவரைவை சமர்ப்பித்துள்ளோம்.

இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படு கின்ற சந்தர்ப்பத்தில், ஆழ்கடல் இழுவை யானது தடை செய்யப்படுவதுடன் அது ஒரு குற்றமாக கொள்ளப்படும். குற்றவாளி யாகக் காணப்படுகின்றவர் இரண்டு வருடச் சிறைத் தண்டனையை எதிர்கொள் வதோடு 50 ஆயிரம் ரூபாவைத் தண்டமா கச் செலுத்த வேண்டிய நிலையும் ஏற்படும் – என்றார். (த-5)

## போர்க்குற்றங்கள்

கரை நியமித்துள்ளமையானது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது எனப் பொது எதிரணி எனத் தம்மை அடையா ளப்படுத்திக்கொள்ளும் மகிந்த ஆதரவு அணி முன்வைத்துள்ள கருத்தையும் அரசு நேற்று நிராகரித்தது.

இராணுவத்தை தரமுயர்த்துவதற்கு பிரிட்ட னிடமிருந்து உதவி பெறுவது நாட் டின் இறைமைக்கு அச்சுறுத்தலான விடயமல்ல என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரி வித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் அரச நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் நடைபெற்றது.

கேள்வி நேரத்தின்போது இலங்கை இராணுவத்துக்கு உதவி வழங்குவதற்குப் பிரிட்டன் முன்வந்துள்ளமை தொடர்பில் மகிந்த ஆதரவு அணி வெளியிட்டுள்ள கருத்தை மையமாகக்கொண்டு ஊடகவி யலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை இராணுவத்தின் பயிற்சி உட்பட ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைக்காக வெளிநாட்டிடம் நிதியுதவி பெறும் நடவ டிக்கை முன்பிலிருந்தே இடம்பெற்று வரு கின்றது. எனினும், முன்னாள் அரசின் செயற்பாடுகளால் அவ்வாறான உதவிகள் தற்போது மீளக் கிடைக்கின்றன.

போர்க்காலத்தில் புலிகளின் கப்பல் தொடர்பில் அமெரிக்காவிடம் தகவல் பெறப்பட்டது. அப்போது நாட்டின் இறை யாண்மை பற்றி எவரும் பேசவில்லை. தகவல் பெற்றதில் தவறும் கிடையாது. இது போன்றுதான் பிரிட்டனிடம் உதவிபெறு வதும் தவறில்லை.

அதேவேளை, பலவந்தமாகக் காணாமற் போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பான ஐ.நா. செயற்குழுவினரை திருமலை கடற் படை முகாமுக்குள் அனுமதித்த விடயத்தில் தவறு ஒன்றும் இல்லை. அவர்களை அனுமதித்திருக்காவிட்டால், அங்கு சித்திரவதை முகாம் இருக்கின்றது என அவர்கள் உலகுக்குத் தகவல் வழங்கியிருப் பார்கள். இலங்கை ஐ.நா. அமைப்பில் அங்கம் வகிக்கின்றது. ஐ.நா. அமைப்பு என்பது நாம்தான். ஆகவே, இதில் தவறு எதுவும் கிடையாது. அமெரிக்கக் குழுவை இந்த முகாமுக்குள் அனுமதித்திருந்தால் அதைத் தவறு என்று குறிப்பிடலாம் என் றார்.

அத்துடன், கொழும்பில் பெரிய தாக்குதல் களுடன் தொடர்புடைய புலிச் சந்தேக நபர்கள் விடுதலை செய்யப்படுகின்றனர் என்று கோத்தபாய ராஜபக்ச முன்வைத் துள்ள குற்றச்சாட்டு தொடர்பில் ஊடகவி யலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் ராஜித,

புலிகள் அமைப்பின் புலனாய்வுத்துறைத் தலைவராக இருந்த நகுலேஸ்வரனை முன்னாள் அரசு விடுதலை செய்தது. புலிகள் அமைப்பின் மகளிர் பிரிவுத் தலை வியாக இருந்த தமிழினி விடுவிக்கப்பட்டார். புலிகள் அமைப்புக்கு முழு ஆயுதங்க ளையும் வழங்கிய கே.பியை விடுத்து அவருக்கு மகிந்த தரப்பினர் விருந்தளித் தனர்.

பிரபாகரனைவிட கே.பிதான் தண்டிக்கப் படவேண்டியவர். இவர்களை விடுவித்தவர் கள் தான் இன்று இப்படிப் பேசுகின்றனர். அதுபற்றி அலட்டிக்கொள்ளவேண்டிய தில்லை.

அதேவேளை, பிரபல ரக்பி விளையாட்டு வீரர் தாஜுதீன் கொலை தொடர்பான சாட் சியங்கள் இருக் கும் சி.ரி.ரி.வி. கமராவில் காட்சிகள் அழிக் கப்பட்டிருந்தாலும் அவற்றை மீளப்பெற்றுக்கொள்ளமுடியும். இந்த விடயத்தை மூடிமறைக்கவேண்டிய தேவை முன் பிருந்தவர்களுக்கு இருக் கின்றது.

அத்துடன், இலங்கையில் இனப்படு கொலை இடம்பெறவில்லை. எனினும், போர்க்குற்றச்சாட்டுகள் உரிய வகையில் நிரூபிக்கப்பட்டால் நிச்சயம் தண்டனைக் கான நடவடிக்கை எடுக்கப்படும்.

நல்லிணக்க ஆணைக்குழு, பரணகம ஆணைக்குழு ஆகியவற்றை மை யப்படுத்தியே உள்ளக விசாரணை இடம் பெறும்– என்றார். (த-சி)

## பேச்சுக்கு

இவ்வாறானதொரு நிலையிலேயே, நேற்றைய தினம் குறித்த பிரேரணை மீள எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், தமிழர்களின் விவகாரம் 65 ஆண்டுகள் கடந்தும் இன்னமும் தீர்க்கப்படாமல் உள்ளதையும், போர் முடிவடைந்து 6 ஆண்டுகள் கடந்த போதிலும் தீர்க்கப் படாமல் உள்ளதையும், போருக்கான மூல காரணம் கண்டறியப்படாமையை கவனத் தில் கொண்டும், அத்துடன் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 2014 ஆம் ஆண்டு தீர்மானத்தை கவனத்தில் கொண்டும், இலங்கையில் புதிய ஆட்சி அமைந்தி ருப்பதைக் கருத்தில் எடுத்தும்,

சர்வதேச மத்தியஸ்தம் இல்லாமல் இனப் பிரச்சினையில் நிரந்தரமானதும் – சம த்துவமானதும் தீர்வு ஒன்றைக் காண முடியாது என்று இந்தச் சபை உறுதியாக நம்புகின்றது.

இலங்கையில் உள்ள தமிழ் – சிங்கள இனப் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றை காண்பதை நோக்கியதாக இலங்கை அரசுக்கும் – தமிழ்த் தலைவர் களுக்கும் இடையில் மத்தியஸ்தம் வகிக்க முன்வருமாறு ஐ.நா. சபைக்கு இந்தச் சபை அழைப்பு விடுக்கின்றது என்ற பிரேரணையை முன்மொழிந்தார்.

இதன்போது எதிர்க்கட்சியினர், ஐ.நா. தீர் மானத்துக்கு அமைய நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகின்றது. அவர்களுக்கு கால அவகாசம் வழங்கவேண்டும் என்று தெரி வித்தனர். அத்துடன், உங்கள் கட்சித் தலைவர் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) 2016 ஆம் ஆண்டு இறுதிக்குள் தீர்வு எட்டப்படும் என்கிறார். அப்படியிருக்கை யில் பேச்சுக்கான களம் எதுவும் ஏற்படாத நிலையில் இந்தத் தீர்மானம் ஏன் இப் போது கொண்டு வரப்படுகின்றது என்று கேள்வி எழுப்பினர்.

இருப்பினும் ஆளும் கட்சியில் பெரும்பா லான உறுப்பினர்கள், தீர்மானம் கொண்டு வரப்படுவதற்கு இதுவே சரியான தருணம் என்று தெரிவித்தனர். இதன் பின்னர் சபையின் ஒருமித்த ஆதரவுடன் தீர்மா னம் நிறைவேற்றப்பட்டது. (த-5-ரி5)

## வடக்கு மக்களின்

மாவட்ட ஆளுங்கட்சி உறுப்பினர் எம்.பி. நடராஜாவினால் பிரேரணை முன்வைக் கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தின் பல இடங்களில் இருந்து நாட்டின் போர் மற்றும் அச்சம் காரணமாக, இந்தியா மற்றும் ஏனைய நாடுகளுக்கும் புலம்பெயர்ந்த மக்களின் காணிகளையும் வேறுபல பொதுத் தேவைகளுக்காக ஒதுக்கப்பட்ட பொதுக் காணிகளையும், அண்மைக்காலமாக வனப்பரிபாலனத் திணைக்களம் தனது எல்லைக்குட்படுத்தி வருகின்றது. இதனால் தமக்குச் சொந்தமான நிலங்களை இழப் பதற்கான நிலைமைகள் ஏற்பட்டுள்ளது. இவர்கள் மீண்டும் இந்த நாட்டுக்கு வரும்போது [illegible] ஆகிவிடுவார்கள். [illegible] காணிகளை பொதுத் தேவைக்கு உற் படுத்த முடியாத நிலையும் ஏற்படலாம். எனவே வனப்பரிபாலன சபையின் இத் தகைய செயற்பாடுகள் தடுக்கப்படுதல் வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இந்தப் பிரேரணையை வழிமொழிந்த வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்க நாதன், வனஜீவராசிகள் திணைக்களம், வவுனியா வடக்கில் யானைகளைக் கொண்டு வந்து இறக்கி விட்டுள்ளனர். இந்த யானைகள் குடியிருப்பு பகுதி களுக்கு வருவதால் பொதுமக்கள் சொத்தி ழப்புக்கும் – அச்சத்துக்கும் முகம் கொடுத் துள்ளனர் என்று குறிப்பிட்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த மன்னார் மாவட்ட உறுப்பினர் பிறிமூஸ் சிராய்வா, மன்னார் மாவட்டத்தில் காற்றாலை மின் உற்பத்திக்கு என்று 6 ஆயிரம் ஏக்கரும், வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு என்று 4 ஆயிரம் ஏக்கரும் சுவீகரிக்கப்பட் டுள்ளது. மேலும், வனபரிபாலனத் திணைக் களத்தினர் தன்னிச்சையாக, இந்தக் காணிகள் தமக்குச் சொந்தமானது என்று கல்லை நட்டு விட்டு அதற்குள் விறகு பொறுக்கச் செல்லும் மக்களை நீதிமன் றத்தில் முற்படுத்துகின்றனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

விவசாய மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கருத்து தெரிவிக்கை யில், மக்கள் வசித்து வந்த பிரதேசங்கள் அவர்கள் போர் காரணமாக வெளியேறிச் சென்றமையினால் காடாகியுள்ளன. அவ்வாறான இடங்களில் மக்கள் மீளக் குடியமரவிடாமல் வனபரிபாலனத் திணைக் களத்தினரால் தடுக்கப்படுகின்றனர். மீள்குடியேற்றத்தைத் தடுக்கும் நடவடிக் கைகள் வேறு வடிவத்தில் இங்கு முன் னெடுக்கப்படுகின்றன.

சூழலியல் பாதுகாக்கப்படவேண்டும். ஆனால் அதற்காக, மக்களின் காணி களை இவ்வாறு தன்னிச்சையாகப் பிடிக் கும் நடவடிக்கைகளை வனபரிபாலனத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் தி ணைக் களம் மேற்கொள்வது ஏற்றுக் கொள்ள முடியாதது – என்றார். இந்த விட யத்தில் தான் கவனம் எடுத்திருப் பதாக முத லமைச்சர் குறிப்பிட்டார். (த-5-ரி5)

## ஜனவரி

இலங்கை –நோர்வே நாடு களுக்கு இடை யிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள் வது மற்றும் நோர்வே முதலீட்டுத் திட்டங் கள் குறித்து உயர்மட்டப் பேச்சுக்களில் ஈடுபடுவோர் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

ஜனவரி மாத முதல் வாரத்தில் இலங்கை வரும் நோர்வே வெளிவிவகார அமைச் சர், இரு நாடுகளுக்கும் இடையிலான உற வுகளை வலுப்படுத்திக் கொள்வது குறித்தே கூடுதல் கவனம் செலுத்துவார்.

இலங்கை வர்த்தக சம்மேளனத்துக்கும் நோர்வே தூதரகத்துக்கும் இடையில் எதிர் வரும் ஜனவரி மாதம் 7ஆம் திகதி சந்திப்பு ஒன்று இடம்பெறவுள்ளது. இந்த விசேட சந்திப்பிலும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் பங்கேற்கவுள்ளார்.

இலங்கையில் நோர்வே முதலீட்டாளர்கள் முதலீடு செய்ய ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டில் இலங்கைக்கும் நோர்வேக்கும் இடையில் 30 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (த-வ)

## இந்திய

நேற்று அதிகாலை பருத்தித்துறைக் கடற் பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்டனர் எனக் கூறப்பட்டது. அத்துடன் அவர்கள் பயணித்த படகும் கடற்படையின் பொறுப் பில் வைக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களைக் கடற் படையினர் காங்கேசன்துறையிலுள்ள கடற்படை முகாமில் பதிவுகளை மேற் கொண்ட பின்னர் யாழ்ப்பாணம் கடற்றொ ழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தி னரிடம் ஒப்படைந்திருந்தனர்.

திணைக்கள அதிகாரிகள் அவர்களை மருத் துவப் பரிசோதனைக்கு உட்படுத்தினர்.

மருத்துவப் பரிசோதனைக்கு உட்டுபடுத் தப்பட்ட பின்னர் அவர்கள் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இதன் போது அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். அத்துடன் கைப்பற்றப்பட்ட மீன்களை அழிக்குமாறும் உத்தரவிடப்பட்டது. (த-ஜ-4-101-106)

## மனித உரிமையை

உரையை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஐ.நா. சபை இந்த ஆண்டு முற்பகுதியில் டிசெம்பர் 9 ஆம் திகதியை இனப்படு கொலையில் பலியானோரை நினைவுறுத் தும் நாளாகப் பிரகடனப்படுத்தியிருந்தது. அன்றைய தினத்திலேயே இந்த உரையை எழுதினேன். அதனால் இனப்படுகொலை யில் பலியானோரையும் நினைவில் இருத்தி இந்த உரையைத் தயார்படுத்தியுள்ளேன்.

ஐ.நா. ஆவணங்களில் அறிவிக்கப்பட்டி ருக்கும் கோட்பாடுகள் இலங்கையைப் பொறுத்தவரையில் மிக முக்கியமானவை. அதுவுந் தமிழ் மக்கள் இன்றுவரை அனு பவித்து வரும் அல்லல் அவலங்க ளுடன் மிகநெருங்கிய தொடர்புகள் கொண் டவை மேற்படி ஆவணங்கள். தொடர்ந்து வந்த இலங்கை அரசுகளினால் தமிழ் மக்களின் உரித்துக்கள் தனி மனித ரீதியிலும் நிர்ணயிக் கப்பட்ட மக்கட் கூட்டம் என்ற ரீதியிலும் காலாதிகாலமாக மீறப்பட்டு வந்துள்ளன.

குடியியல் மற்றும் அரசியல் உரித்துக்கள் சம்பந்தமான ஐ.நா சமவாய ஆவணத்தில் நிர்ணயிக்கப்பட்ட மக்கட் கூட்டங்கள் யாவற் றிற்கும் சுயநிர்ணய உரிமையானது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த சுயநிர் ணய உரிமைதான் தமிழ்ப் பேசும் மக்க ளுக்கு மறுக்கப்பட்டுள்ளது. அத்துடன்மிக முக்கிய மனித உரிமையான சமத்துவத்திற் கான உரித்து இலங்கை இயங்கத் தொடங்கிய காலம் முதல் தமிழ் மக்களுக்கு மறுக்கப்பட்டுவருகின்றது.

தனிப்பட்ட தமிழ் மக்களுக்கான உயிருக் கான உரித்துக் கூட அரசாலும் அதன் முகாமைகளாலும் நீதிக்குப் புறம்பான படு கொலைகளால் வழிநடத்தப்பட்டுள்ளன. நடந்த மனிதப் படுகொலைகளுக்கு இதுவரை பதிலளிக்கப்படவில்லை.

குடியியல் அரசியல் உரிமைகளுக்கான சமவாயத்தில் கூறப்பட்டிருக்கும் மாற்ற முடியாத உரித்துக்களாகிய சுதந்திரத்திற் கான உரித்து நூற்றுக்கணக்கிலான தமிழ் இளைஞர் யுவதிகளுக்கு இன்றும் மறுக் கப்பட்டு, அவர்கள் விளக்கமற்ற விளக்க மறியல்களிலும், விளப்பமற்ற விளக்கங் களிலும் சிறைப்படுத்தப்பட்டுள்ளார்கள். தொடர்ந்து அவர்களைச் சிறைப்படுத்தி வைத் தல் இலங்கை அரசு சுதந்திரத்துக்கான மனித உரிமையை மீறும் செயலாகும்.

ஆகவே தாமதமின்றி தமிழ் அரசியல் கைதிகளை உடனே விடுவிப்பது அரசின் தலையாய கடனாகும். அவ்வாறு விடுவித் தால்தான் எமது நாட்டில் எமது ஆட்சி யாளர்களிடையே மனித உரிமையைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கம் உண் டென்று உணரக் கூடியதாக இருக்கும். ஜனாதிபதி நாட்டின் நற்பெயர் கருதி நமது இளைஞர் யுவதிகளைப் பொது மன் னிப்பில் விரைவில் விடுவிப்பார் என்று எதிர் பார்க்கின்றேன்.

வடமாகாண சபையின் கடந்த பெப்ரவரி மாதத் தீர்மானமானது தொடர்ந்து நடை பெற்றுவரும் தமிழ் மக்களின் படுகொலை கள் இனப்படுகொலையே என்று அடை யாளம் காட்டியது. அந்த இனப்படுகொலை களின் சூத்திரதாரிகளை அடையாளம் கண்டு அவர்கள் மீது விளக்கம் நடாத்துவது இலங்கை அரசின் கடப்பாடு. ஆனால் அரச தலைவர்களின் அண்மையகால அறிக்கைகள் முரண்பட்ட விதத்தில் அரங் கேறி வருகின்றன. இலங்கைபற்றிய ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையின் அடிப்படையை அடியோடு மறுப்பனவாகவே அவை அமைந்துள்ளன. தொடர்ந்து வந்த இலங்கை அரசுகள் மனித உரிமைகளைப் பேணாது தொடர்கதை யாக மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வந்துள்ளன. ஜனவரி 8 ஆம் திகதிக்குப் பின்னர் கூட வெள்ளைவான் கடத்தல்கள் நடைபெற்றுள்ளன.

மனித உரிமைகளைப் பேணுபவர்கள் நாம் என்று இலங்கை அரச தரப்பினர் மார் தட்டிக் கூறுவதாகவிருந்தால் தமிழ் மக் களின் அவலங்களை நீக்கும் விதத்தில் அவர்களின் சுயநிர்ணய உரிமையை மதித்து அவ்வுரித்தின் அடிப்படையில் ஒரு நிரந் தரமான தீர்வைப் பெற்றுக் கொடுக்க முன் வரவேண்டும். அப்பொழுதுதான் சர்வதேச மனித உரிமைகள் தினம் இலங்கைக்குப் பொருந்தும் ஒருதினமாக ஏற்றுக்கொள் ளப்படலாம் – என்றார். (த-5-ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாண

முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், எதிர்க் கட்சித் தலைவர் சி.தவ ராசா முன்வைத்த விடயத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே முதலமைச் சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். எதிர்க்கட்சித் தலைவர் தவராசா குறிப்பிடுகையில், யாழ்.மாவட்டச் செயலகத்தின் 5 ஆண்டு அபிவிருத்தி தொடர்பில் திட்டம் தயாரிக்கப்பட்டது. இதன்போது மாகாண சபையினரோ, மக்கள் பிரதிநிதிகளோ எவரும் அழைக்கப்படவில்லை. இது தொடர்பில், மக்கள் பிரதிநிதிகளை அழைக்கவேண்டும் என்று வடக்கு மாகாண சபையில் பிரேரணை நிறைவேற்றினோம். ஆனால் அதன் பின்னரும் எம்மை அழைக்காமல் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

50 மில்லியன் டொலர் செலவில் யாழ். நகரை அழகுபடுத்தும் திட்டம், சிறுகைத் தொழிலாளர்களுக்கு உலக வங்கியினூடாக உதவிவழங்கல்என்பவற்றுடன், யாழ்.மாவட்டத்துக்கு ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் என்று ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒருங்கிணைப்பு என்பது, மத்திய அரசும் - மாகாண அரசும் இணைந்தது. ஆனால் இங்கு மாகாண அரசைப் புறக்கணித்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது. இது தொடர்பில் முதலமைச்சர்நடவடிக்கைஎடுக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்.

இதன் பின்னர் பதிலளித்து உரையாற்றிய வடக்கு முதலமைச்சர், மோசமான ஆட்சி நிறைவுக்கு வந்ததாகவும், நல்லாட்சி மற்றும் ஜனநாயக ஆட்சி மலர்ந்ததாக கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்தவர்கள் ஆட்சிப் பொறுப்பை எடுத்துக் கொண்டதன் பின்னரான சில நாள்களிலேயே இவ்வாறான நிலை உருவாகிவிட்டது. எங்களை புறக்கணித்து நிதியைத் தாங்களே பெற்றுக்கொண்டு தான்தோன்றித் தனமாக நடந்து கொண்டிருக்கின்றார்கள்.

குறிப்பாக இப்போது ஜெய்க்கா நிறுவனம் குளங்களை ஒன்றிணைப்பது தொடர்பான செயற்றிட்டம் தொடர்பாக எங்களோடுபேசியிருந்தது. இதன் போது நாங்கள் கேட்ட முக்கியமான விடயம் குளங்களை இணைப்பது சரி ஆனால் அந்த நீரை முகாமை செய்யும் பொறுப்பு யாருடையது என்பதே?

மகாவலி கங்கையை வடக்குக் குக்கொண்டுவரும் திட்டத்தின் ஊடாக மகாவலி நீர் வடக்குக்கு ஒரு துளியும் வரவில்லை. ஆனால்அந்தத்திட்டத்தின் ஊடாகக் குடியேற்றங்கள் தாரளமாக வந்து விட்டன.மேலும்முன்னய அரசின் காலத்தில்மத்திய அமைச்சர் ஒருவரும், நாமும் இணைத் தலைவர்களாக இருந்தோம்.

அவரும் நாமும் தரத்தின்படி ஒரே தரத்தை உடையவர்கள். ஆனால் இப்போது அவ்வாறில்லை. இராஜாங்க அமைச்சர் என்பதுதரம்வேறானது. எனவே இது பிழையான நியமனம். நாங்கள் எல்லாவற்றையும் கெஞ்சிப் பெற வேண்டும் என்ற நிலைப்பாடே தொடர்ந்து கொண்டிருக்கின்றது என்றார்.

(த-5-ரி5)

## மரண அறிவித்தல்கள்

### இராஜேந்திரா இராஜநாதன்

கச்சேரி, நல்லூர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேந்திரா இராஜநாதன் நேற்று (10.12.2015) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சரோஜினியின் அன்புக் கணவரும், இராஜசுரேஸ் (பிரான்ஸ்), இராஜபாலன் (பிரான்ஸ்), இராஜசேகர் (சுவிஸ்), இராஜலக்ஷமன் (Macson Mesh Industries (pvt)Ltd), நிரோஷானந் (சமுர்த்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கோமதி (பிரான்ஸ்), பிரியதர்சினி (பிரான்ஸ்), தர்மினி (சுவிஸ்), வதனவாணி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆர்த்திகா, அக்ஷயா, அஸ்விதா, ரஜித், ரொஷான், ரித்திக், அஸ்வின், திலக்ஷி, அப்சரா,அபிலாஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இல.36, கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(66902)
(11,15,18)

தகவல்:
மகன்மார்.

### திருமதி சரஸ்வதி கதிரமலை



தோற்றம்:- 15.10.1935
மறைவு:- 09.12.2015

377/30, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி கதிரமலை 09.12.2015 புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13.12.2015 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வில்லூண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


377/30, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(66988)(11,15,18)

தகவல்: கதிரமலை
(கணவர்)

## மரண அறிவித்தல்

பிறப்பு
20 . 05 . 1927



இறப்பு
08 . 12 . 2015

### திருமதி மகேஸ்வரி கனகசபாபதி

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி கனகசபாபதி 08.12.2015 செவ்வாய்க்கிழமை தமது 88 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சீவரத்தினம் கனகசபாபதியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து- செல்லம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அரியரத்தினம், நாகரத்தினம் (மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், லலிதா, ரவிகுமார்(கனடா),வசந்தா, விஜயகுமார்(லண்டன், முன்னாள் H.N.B),ஜெயகுமார் (சுவிற்சர்லாந்து) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாக்கியராஜா,பூபாலசிங்கம், யசோதராதேவி,சசிகலா, ஜெயரூபி ஆகியோரின் அன்பு மாமியாரும், உதயபாலன், சர்மிலா (ஆஸ்திரேலியா), பிரார்த்தனா (கனடா), தேன்மொழி (அமெரிக்கா), அகிலன் (கனடா), பவித்திரா, தர்ஷனா, ஆரத்யா (லண்டன்), யதாணா,யதீன் (சுவிற்சர்லாந்து) ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் (Mahinda மலர்ச்சாலை கல்கிசையில் நாளை (12.12.2015) சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 6 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 13.12.2015 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணிவரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.18, றோகினி வீதி,
கொழும்பு 6

258 3296,
077 981 0977

(F/20224)
(11,15,18)

தகவல்:
திரு. பாக்கியராஜா

## மரண அறிவித்தல்கள்

### சிவக்கொழுந்து அற்புதராஜா

(Ret. Asbestes cement industries Ltd
(mascons Work's manager)



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு மற்றும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து அற்புதராஜா நேற்று (10.12.2015) வியாழக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து -செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சிவநாயகியின் அன்புக் கணவரும் சுதர்சன் மற்றும் காலஞ்சென்ற சுபோதினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதர்சினியின் மாமனும் ஹர்ணியின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2015) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு உரும்பிராய் கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருகன் வீதி,
உரும்பிராய் கிழக்கு.
075 284 7722

(67000)(12.15.18)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி தங்கம்மா அப்பாத்துரை



பிறப்பு:- 12.02.1936
இறப்பு:- 10.12.2015

மயிலணி வடக்கு சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா அப்பாத்துரை (பசுபதி) நேற்று (10.12.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாத்துரையின் (சிறைச்சாலை உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னர் - லட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான முருகர்- ஐயாள் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான குட்டிப்பிள்ளை, அப்புத்துரையின் அன்புச் சகோதரியும், சந்திரகுமார் (யாழ்/போதனா வைத்தியசாலை ஊழியர்) அவர்களின் அன்புத் தாயாரும், அகிலேஸ்வரியின் அன்பு மாமியாரும், சந்திரிகா - திவாகரன், சந்திரேகா - ஜெயரூபன், திலீபன், கஜீபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆர்வலன், ஆதனன், மேகா, ஆதனா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.12.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மயிலணி வடக்கு,
சுன்னாகம்.

(66998)(11,15,18)

தகவல்: சந்திரகுமார்
(மகன்)

பிறப்பு
25 . 01 . 1940



இறப்பு
09 . 12 . 2015

### செ. செல்வராஜா

(ஓய்வு பெற்ற படவரைஞர், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை)

யாழ்ப்பாணம் தாவடியை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை செல்வராஜா 09.12.2015 கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை பொன்னம்மா தம்பதியினரின் புதல்வரும் காலஞ்சென்ற சிவஞானம் தையல்முத்து தம்பதியரின் மருகனும் வத்சலா அவர்களின் அன்புக் கணவரும் ரமணன் (வீதி அபிவிருத்தித்திணைக்களம் - வட மாகாணம்) அவர்களின் அன்புத்தந்தையும் துயிலினி (ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி) அவர்களின் மாமனாரும் கஜவர்ணியின் பேத்தி ராஜதுரை, ராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் பாலகிருஷ்ணன், சந்திரா, சிவபாலன், ஆகியோரின் மைத்துனரும் பத்மினி, பாலசுப்பிரமணியம், புஷ்பா ஆகியோரின் சகலனுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று (11.12.2015) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணி முதல் 12.00 மணிவரை கல்கிசை மகிந்த மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நண்பகல் 12.00 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்.
21- 5/1, Fredrica Road, Colombo - 06. Tel: 0112599267

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலிவு மலிவு மலிவு

## ஏசியன் தளபாடத்தின் மெகா சேல்

| | | |
|---|---|---|
| சோபா செற் இலவசம் Glass Teapo & Rice Cooker | | |
| 6x4 அலுமாரி | 10950/= | இலவசம் Kettle |
| 6x3 அலுமாரி | 8950/= | இலவசம் Shoe Rack |
| Hisense 32"TV | 26900/= | (37900/=) |
| Hisense 24"TV | 19900/= | (26900/=) |
| Panasonic LED 32"TV | 49990/= | இலவசம் DVD Player, Panasonic Phone) |
| Gass Cooker | 3950/= | இலவசம் Kettle |
| Table Mate | 1750/= | (2450/=) |

வீடு மற்றும் அலுவலகத்துக்கு தேவையான அனைத்து பொருள்களையும் மலிவாக பெற்றுக் கொள்ளலாம்.

230, நாவலர் றோட், இலுப்பையடி சந்திக்கும் ஆனைப்பந்தி சந்திக்கும் இடையில்
077 3583879, 077 8314 201


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



நயினாதீவு 02ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த

**திருவாளர்**
**முத்துக்குமாரு புனிதநாதன்**

(சமாதான நீதிவான், தலைவர் சன சமூக நிலையம் மத்தி)

அவர்கள் அரச சேவையில் இருந்து ஓய்வுபெறுவதை இட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மத்தியத்தின் நாயகனே
நித்தியமாய் திகழ்ந்தவரே
அஞ்சல் சேவையை அயராது தொடர்ந்தவரே
அகவை அறுபதில் அற்புதமாய் ஓய்வுபெற்றீர்
வாழ்க பல்லாண்டு வளர்க உங்கள் நாமம் நூறாண்டு
வாழ்க என வாழ்த்தும்

Best Wishes

**நயினாதீவு சனசமூக நிலைய உறுப்பினர்கள்**
**(மத்தி)**

# கண்ணீர் காணிக்கை



நல்லூர் முருகன் சன சமூக நிலையத்தின் முன்னாள் தலைவர்
**எந்திரி சி. உருத்திரலிங்கம்**
(முகாமைத்துவ பணிப்பாளர் ரூலின்ஸ் நிறுவனம், உருத்திரா கட்டடக்கலை நிறுவனம்) அவர்களின் அன்பு மகளும், நல்லூர் தெற்கு, மாதர் அபிவிருத்தி சங்கத்தின் முன்னாள் தலைவி

**திருமதி நவநீதம் ஜெகதீசன் (றோஸ் அன்ரி)** (முன்னாள் தலைவி - யாழ். மாவட்ட சமூக சேவைகள் மன்றம்) அவர்களின் அன்பு மருமகளுமான

திருமதி **அனுத்தமா ஜெய்ராம்**

அவர்கள் 03.12.2015 ஆம் திகதி ஆஸ்திரேலியாவில் காலமான செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்திடைய நல்லூர் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!**
**ஓம் சாந்தி!!!**

**நல்லூர் வாழ் மக்கள் சார்பில்**
**நல்லூர் முருகன் சனசமூக நிலையமும்,**
**நல்லூர் தெற்கு கிராம அபிவிருத்தி சங்கமும்,**
**மூத்த பிரஜைகள் சங்கம் மற்றும் பொது அமைப்புக்கள்.**
**75/2, செட்டித் தெரு, நல்லூர்.**

## திறைசேரியின்

பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மாகாண சபைகள் உள் ளூராட்சி அமைச்சினூடாக நிதி வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கை அதிகாரப் பரவலாக்கத்துக்கு முற்றிலும் எதிரானது என்று குறிப்பிட்டுக் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்டதைப் போன்று, நிதி வழங்கல் இடம்பெற வேண்டும் என்றும் வடக்கு மாகாண சபை நேற்றைய தினம் பிரேரணை நிறைவேற்றியிருந்தது.

இவ்வாறானதொரு நிலையிலேயே நேற்றையதினம் மேற்படி தீர்மானத்தை ஜனாதிபதி மைத்திரிபால, முதலமைச்சர்களுடனான சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார்.

மாகாண சபைகளுக்கு திறைசேரி ஊடாக நேரடியாக நிதி வழங்கப்பட்டு வந்தது. அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் குறித்த நிதி மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினூடாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கு ஒன்பது மாகாணசபைகளின் முதலமைச்சர்களும் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர். இதனையடுத்து இது தொடர்பில் சந்திப்பு நடத்துவதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்திருந்தார்.

அதனடிப்படையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுச் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் வடக்கு மற்றும் ஊவா மாகாண முதலமைச்சர்கள் தவிர்ந்த ஏனைய 7 முதலமைச்சர்களும் பங்குபற்றியிருந்தனர். இதன்போது, ஜனாதிபதி கடந்த காலங்களில் வழங்கப்பட்டதைப் போன்று நேரடியாக நிதி வழங்கப்படும் என்று உறுதியளித்துள்ளார்.

இதேவேளை வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்று இடம்பெற்றபோது, அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தினால் மாகாணசபைகளுக்கு நேரடியாக நிதி வழங்கவேண்டும் என்று கோரும் அவசர பிரேரணை நேற்று அவையில் முன்வைக்கப்பட்டது. இந்த விவாதத்தில் உரையாற்றிய அமைச்சர்கள், உறுப்பினர்கள் எல்லோரும், மாகாணசபைக்கு நேரடியாக நிதி வழங்காமல், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஊடாக நிதி வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கையை விமர்சித்தனர்.

இது மாகாண சபைகளின் அதிகாரங்களைப் பறிக்கும் செயல் எனவும், ஒரு அமைச்சுக்கு கீழே மாகாணசபைகளை திணைக்களமாக்கும் நடவடிக்கை என்றும் சாடினர். அத்துடன் மாகாணத்தின் துரித அபிவிருத்திக்கு இது பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் சுட்டிக்காட்டினர். பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தது. இதற்கிடையிலேயே, ஜனாதிபதி மேற்படி உறுதிமொழியை மாகாண முதலமைச்சர்கள் சந்திப்பில் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (த-5-ரி5)

## விசேட

கொழும்பு விசேட நீதிபதிகள் கொண்ட விசேட நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்தன.

இதன்போது, ஆனந்தவர்ணன், தனயுகன் ஆகியோரின் சட்டத்தரணிகள் நீதிமன்றில் முன்னிலையாகாமையினால் வழக்கு விசாரணை இம்மாதம் 18 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. புஸ்பராஜாவின் குற்றப் பத்திரத்தில் மாற்றம் செய்வதற்காக வழக்கு விசாரணை இம்மாதம் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-4)


# உடனடி வேலைவாய்ப்பு

வடமாகாணத்தின் முன்னணி புத்தக மற்றும் ஸ்ரேசனறி விநியோக நிறுவனத்துக்கு புத்தக மற்றும் ஸ்ரேசனறி வியாபாரத்தில் முன்னனுபவமுள்ள ஆண்/பெண் விற்பனையாளர்கள் தேவை.

* கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்
* அனுபவமுள்ளவர் நேரில் சமுகம் தரவும்

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
இல.212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
acdil@ymail.com
(C/20750) (10.17)



# சர்வதேச தொலைக்காட்சிக் கலைஞர்கள் தேர்வு 2016

சர்வதேசம் எங்கும் ஒளிபரப்பாகும் தமிழ் தொலைக்காட்சி நிலையத்திற்கான மாபெரும் தொலைக்காட்சித் தொடர் நாடகத்திற்குத் தேவையான சகல துறைக்குமான தேர்வுக்கு நீங்களும் விண்ணப்பிக்கலாம்.

"இந்த மூங்கில் காட்டில் எந்த மூங்கில் புல்லாங்குழல்" என யாருக்குத் தெரியும்.

உங்களுக்குள்ளும் ஓர் கலைஞர் ஒளிந்திருக்கலாம் அல்லவா? உங்களுக்குள் ஒளிந்திருக்கும் கலைஞரை உலகளவில் வெளிப்படுத்த ஓர் அரிய சந்தர்ப்பம்.

வித்தியாசமான ஐடியாக்காரர்கள், மாறுபட்ட சிந்தனை உள்ளவர்கள் உங்களை உலகளவில் வெளிப்படுத்த ஓர் அரிய சந்தர்ப்பம். (அரைத்த மாவையே அரைக்க நினைப்பவர்கள் தயவு செய்து விண்ணப்பிக்காதீர்கள்)

நடிகர்கள், நடிகைகள், துணை நடிகர்கள், துணை நடிகைகள், குழந்தை நட்சத்திரங்கள், வயது முதிர்ந்த நடிகர்கள், நடிகைகள், நகைச்சுவையாளர்கள், வசனகர்த்தாக்கள், இசையமைப்பாளர்கள், படப்பிடிப்பாளர்கள், ஒளிப்பதிவாளர்கள், துணை ஒளிப்பதிவாளர்கள், ஒளித்தொகுப்பாளர்கள், முகாமையாளர், தொடர்பாளர், ஒப்பனைக் கலைஞர்கள் (மேக்கப்) குரல் கொடுக்க குரல் நடிப்புடையவர்கள் இன்னும் பிற இத்துறையாளர்கள்.

அனுபவம் உள்ளவர்களும் ஆர்வம் உள்ளவர்களும் உங்கள் புகைப்படங்களுடன் கூடிய சுயவிபரத்தினை

ibceylon@gmail.com

என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 31.12.2015 க்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.
2016ம் ஆண்டு உங்கள் ஆண்டாகட்டும். தகுதிக்கமைய மாத ஊதியம் வழங்கப்படும்.


# யாழ்ப்பாணம் மாநகரசபை
## மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிக்கு தனியார் பாதுகாப்பு சேவைக்கான விண்ணப்பம் கோரல்

மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிக்குள் தனியார் பாதுகாப்பு சேவைக்கு 01.01.2016ஆம் ஆண்டு தொடக்கம் ஒரு வருடகாலத்துக்கு தினமும் 24 மணிநேரம் பாதுகாப்பு சேவை வழங்கக்கூடிய இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தனியார் பாதுகாப்பு சேவை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவத்தினை விண்ணப்பக் கட்டணமாக ரூபா 500/= யும், (வற்வரி நீங்கலாக) மீளளிக்கப்படக்கூடிய பணமாக 1000/= வினையும் செலுத்தி மாநகரசபை அலுவலகத்தில் 18.12.2015 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவம் பெறப்பட்ட பின்னர் விண்ணப்பிக்காவிடின் வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது. அத்துடன் மாநகர சபையினால் வழங்கப்பட்ட விண்ணப்ப படிவத்தில் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்ப கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தனியார் பாதுகாப்பு சேவைக்கான விண்ணப்பம்" என எழுதப்பட்டு 21.12.2015 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் ஆணையாளர் மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்புதல் வேண்டும். கேள்விகள் யாவும் அன்றே பிற்பகல் 2.00 மணிக்கு திறக்கப்படும். கூறுவிலைகள் திறக்கப்படும்போது தங்கள் நிறுவனத்தின் சார்பாக பிரதிநிதிகள் சமுகமளிக்கமுடியம். மேலதிக விவரங்களினை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். (தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள் 0718628580, 021 221 7691)

குறிப்பு: தங்களால் வழங்கப்படுகின்ற கூறுவிலையானது தொழில் திணைக்களத்தினால் நிர்ணயம் செய்யப்பட்ட ஒரு ஊழியருக்கான வேதனத்தின் அளவினைவிட குறைவாக இருத்தலாகாது.

**11.12.2015**

**பொ.வாகீசன் (ஆணையாளர்)**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**
(C/20745) (10.15.17)

# நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.
## 2016ஆம் ஆண்டுக்கு இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலக்கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் இறைச்சிக்கடைகள் 01.01.2016ஆம் திகதி தொடக்கம் 31.12.2016ஆம் திகதி வரை குத்தகைக்கு நடத்துவதற்கு பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளது.

ஏலதாரர் பதிவு செய்யும் இறுதி திகதி : 18.12.2015 வெள்ளிக்கிழமை மு.ப.11.00 மணிவரை
ஏலம் நடைபெறும் திகதி : 18.12.2015 வெள்ளிக்கிழமை பி.ப.2.30 மணி
ஏலம் நடைபெறும் இடம் : தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை

ஏலத்தில் பங்குபற்ற விரும்புவோர் விண்ணப்பத்துடன் அடையாள அட்டையையும் அதன் நிழற்பிரதியையும், தாம் வதியும் இடத்தின் வதிவிடச்சான்றிழும் சமர்ப்பித்தல் வேண்டும்.

1. தவறுனராக கணிக்கப்பட்ட எவரும் ஏலத்தில் பங்குபற்ற முடியாது.
2. ஏலத்தில் பதிவுசெய்யப்பட்ட ஏலதாரர் மட்டுமே பங்குபற்ற முடியும்.
3. சித்திபெறும் ஏலதாரர் ஏலத்தொகையின் 1/3 பகுதியையும் உரிய வற், தே.க.எ.வரி என்பவற்றையும் உடன் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும். மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

### ஏல அட்டவணை

| இல | இறைச்சிக் கடைகள் | மீளளிக்கப்படாத ஏல படிவக் கட்டணம் | மீளளிக்கப் படும் ஏல வைப்புப் பணம் | ஆகக்குறைந்த ஏல தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| | **நல்லூர் உப அலுவலகம்** | | | |
| 1. | திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 223,210.00 |
| 2. | திருநெல்வேலிச்சந்தை கோழி இறைச்சிக் கடை 1 | 500.00 | 5000.00 | 333,972.00 |
| 3. | திருநெல்வேலிச் சந்தை கோழி இறைச்சிக் கடை 2 | 500.00 | 5000.00 | 235,407.00 |
| | **கொக்குவில் உப அலுவல ம்** | | | |
| 1. | கொக்குவில் சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 338,580.00 |
| 2. | கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 304,332.00 |
| 3. | கொக்குவில் உப அலுவலக [illegible] | 500.00 | 5000.00 | 379,760.00 |

செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொபிடெல் யாழ். கிளையின் ஆண்டு நிறைவு விழா இன்று

யாழ்ப்பாணம், டிசெ. 11

மொபிடெல் நிறுவனத்தின் யாழ். கிளையின் ஆண்டு நிறைவுவிழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. இன்று காலை 8.00 மணிக்கு மொபிடெல் நிறு வன யாழ். கிளையில் நடைபெறும் இந்த நிகழ்வில் மத குருமார் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்ள வுள்ளனர்.

இந்த ஆண்டுநிறைவை முன்னிட்டு பல்வேறு சலுகை கள் முன்வைக்கப் பட்டுள்ளன.மொபிடெல் வாடிக் கையாளர் களுக்கான பரிசில்கள், வலையமைப்பின் அனுபவங்கள் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களும் ஏற் படுத்தப்பட்டுள்ளதுடன். இன்ரநெற் அழைப்பு வசதிகள், பெறுமதிமிக்க தொலைபேசிகளை விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் மொபிடெல் நிறுவனத்தின் யாழ்.கிளையினர் தெரிவித்துள்ளனர். (தி)

## பலவந்தமாகக்

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுவதி லிருந்து அனைத்துப் பிரஜைகளையும் பாதுகாக்கும் சர்வதேச சாசனத்தில் இலங்கை கைச்சாத்திடவுள்ளது. நியூ யோர்க்கிலுள்ள ஐ.நாவுக்கான இலங்கை யின் வதிவிடப்பிரதிநிதி சாசனத்தில் நேற்றுக் கையெழுத்திட்டுள்ளார்.

இந்தச் சாசனம் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதலை மனித உரிமை மீறல் என வலியுறுத்துவதுடன் குற்றவியல் குற் றமாகவும் கருதுகின்றது. இதனை உள் ளடக்கிய அடிப்படைக் கொள்கைகளைத் தொகுத்துச் சட்டங்களாக உறுப்பு நாடுகள் வரைகின்றன.

இது வரை 94 நாடுகள் கையொப்பமிட்டுள் ளன. அத்துடன் 51 நாடுகள் ஒப்புதல் வழங்கியுள்ளன.

மேலும், இது தொடர்பான சட்ட வரைவை இயற்றுவது அரசின் கடமை. அத்துடன் இதனைச் செயற்படுத்தல் மற்றும் உத்தர வாதமளிப்பதில் நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கும் கடமையுண்டு. இந்தச் சட்டத்தி னூடாகக் குற்றங்கள் மீண்டும் இந்த நாட் டில் நடப்பதில்லை என்று உறுதி வழங்கப் படவேண்டும்.

எமது நாட்டில் நீண்டகாலமாகக் காணாமற் போதலால் பாதிக்கப்பட்ட மற்றும் அத னால் ஏற்பட்ட வலியினால் துன்பப்படுவோ ரின் நிலைமை உள்ளமையை நாம் அனைவரும் அறிவோம். பல தசாப்தங்க ளாக அனைத்து இனம், மதம், மொழி அல்லது புவியியல் சார்ந்து மோதல் மற் றும் அமைதியின்மை போன்றவற்றில் தொடர்பில்லாத பலர் காணாமற்போனமை யால் பாதிக்கப்பட்டுள் ளனர்.

அத்துடன் பலவந்தம ாகக் காணாமல் ஆக் கப்படுதலை குற்றமாக் குவதால் ஒவ்வொரு பிரஜையினதும் பாது காப்பு உறுதிப்படுத் தப் படுவதுடன் வெள்ளை வான் கலாசாரம் மற் றும் பயங்கரவாத நட வடிக்கைகள் மேலோங் கல் போன்றவை மீண்டும் நம் சமூகத்தில் கோலோச்ச முடியாது. -என்றார்.

இதேவேளை, பலவந் தமாகக் காணாமல் ஆக்கப்படுவதில் இருந்து அனைவரை யும் பாதுகாப்பது தொடர்பிலான சர்வ தேச மாநாட்டில் கையெழுத்திட முந் தைய மகிந்த அரசு மறுப்புத் தெரிவித்தது. குறிப்பாக, காணாமற் போதல் சம்பவங்கள் இடம்பெற்ற காலப்பகுதி யில் இலங்கை அரசு மாநாட்டில் கையொப்ப மிட மறுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-வ)


# ஒளி விழா 2015



நிறைவாழ்வு மையத்தினால் வருடந்தோறும் நிகழ்த்தப்படும் ஒளிவிழா வைபவமானது இம்முறை 12.12.2015 அன்று பி.ப 3 மணிக்கு சுப்பிரமணியம் கனகம் ஞாபகார்த்த மகிழ்ச்சி முதியோர் இல்லம் மக்லியோட் வைத்தியசாலை மற்றும் கிறீன்மெமோரியல் வைத்தியசாலையோடு இணைந்து மக்லியோட் வைத்தியசாலை, இணுவில் வளாகத்திலுள்ள நிறைவாழ்வுமையத்தில் இடம்பெற உள்ளது. ஆர்வலர்கள், நண்பர்கள் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

நிறைவாழ்வு மையம்
மக்லியோட் வைத்தியசாலை, இணுவில்



## கண்ணீர் அஞ்சலி

எமது யாழ். பிரதேச செயலக வாழ்வெழுச்சி உத்தியோகத்தர்
திரு.ரா.நிரோஷானந் அவர்களின் அன்புத் தந்தை

### ராஜேந்திரா ராஜநாதன்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

(66907) (10.17)



## மரண அறிவித்தல்

### கந்தையா இரத்தினேஸ்வரன் (லண்டன்)



சங்குவேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவரும், செல்ல மாக லண்டன் என அழைக்கப்பட்ட வரு மான கந்தையா இரத்தினேஸ்வரன் நேற்று (10.12. 2015) வியாழக்கிழமை கால மானார்.

அன்னார் ராஜேஸ்வரியின் அன்புக் கண வரும், காலஞ்சென்றவர்களான கந்தையா-இராசம்மா தம்பதியரின் புத்திரனும், காலஞ் சென்றவர்களான தம்பிஐயா-பூமணி தம்பதி யரின் மருமகனும், இரத்தினமாலா (லண் டன்), கவிதாசன் (லண்டன்), ராஜி (லண் டன்), மங்களசுதன் (ஆஸ்திரேலியா), உமா சுதன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், புஸ்பகாந்தன் (லண்டன்), ரம்யா (லண்டன்), சிவஅருள் (லண்டன்), கஜேந்தினி (ஆஸ்திரேலியா), பவானி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனும், நிருசன், பதுசா, நிதீஸ், கனுசியா, சுமன், பூஜா, சதுஷன், ஜதீசன், நிசாயினி, நிசான், திகாயனி ஆகியோரின் அன்புப் பேரனும், துரை சிங்கம், சரோஜினிதேவி, செல்வராசா, காலஞ்சென்றவர்களான மாசிலா மணி, தவராசா, தங்கரத்தினம், புஷ்பதேவி, அரியமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.12.2015 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்குவேலி சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்தச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சங்குவேலி வடக்கு
மானிப்பாய்,
021 2242448, 021 300 7522

தகவல்:
குடும்பத்தினர்.
(66915) (10.17)



## மரண அறிவித்தல்

### திருமதி சுசிலாதேவி சிவசுப்பிரமணியம்



மானிப்பாய் மேற்கு, கட்டுடையைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுசிலாதேவி சிவசுப்பிரமணியம் 08.12. 2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவஞானம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சோமெசாந்தன் (கனடா), சகுந்தலாதேவி (கனடா), புனிதவதி (ஜேர்மனி),குகநேசன் (கனடா), குமரேசன் (கனடா), மங்களம் (திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சிவ பாக்கியம் (லண்டன்) மற்றும் ராஜலட்சுமி (கனடா),செல்வலட்சுமி (மானிப் பாய்), காலஞ்சென்ற யோகலட்சுமி (இந்தியா), நமசிவாயம் (கனடா) ஆகியோ ரின் மச்சாளும், நித்தியானந்தம் (ஜேர்மனி), காலஞ்சென்ற விஜயநாதன் (சங்கானை தபால் அதிபர்) மற்றும் குணசிங்கம் (இணுவில்), சாந்தினி (கனடா), கேசரி, லோகன் (இந்தியா) ஆகியோரின் மைத்துனியும், கமலாதேவி (கனடா), உத்தமலிங்கம் (கனடா), கனகரத்தினம் (ஜேர்மனி), இந்திராதேவி (கனடா), ராஜி(கனடா),காலஞ்சென்ற அருணகுமார் (திருகோணமலை) ஆகியோரின் மச்சாளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை அவரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத் துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் மேற்கு,
கட்டுடை.

(66906)
(11,15,17)

தகவல்: கணவர்
வை.சிவசுப்பிரமணியம்



## மரண அறிவித்தல்கள்

### இராஜேந்திரா இராஜநாதன்



கச்சேரி, நல்லூர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட இராஜேந்திரா இராஜநாதன் நேற்று (10.12.2015) வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சரோஜினியின் அன்புக் கணவரும், இராஜ சுரேஸ் (பிரான்ஸ்), இராஜபாலன் (பிரான்ஸ்), இராஜ சேகர் (சுவிஸ்), இராஜ லக்ஷமன் (லக்கி) (Macson Mesh Industries (pvt)Ltd), நிரோஷானந் (சமுர்த்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கோமதி (பிரான்ஸ்), பிரியதர்சினி (பிரான்ஸ்), தர்மினி (சுவிஸ்), வதனவாணி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆர்த்திகா, அக்ஷயா, அஸ் விதா, ரஜித், ரொஷான், ரித்திக், அஸ்வின், திலக்ஷி, அப்சரா,அபிலாஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இல.36, கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(66902) (11,15,18)

தகவல்: மகன்மார்.



### இளையதம்பி இராசையா (ராசா)



அளவெட்டி, அணிஞ்சிலடிப் பிள்ளை யார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வடலி யடைப்பை வசிப்பிடமாகவும் தற்போது அமெரிக் காவில் வசித்து வந்தவருமான இளைய தம்பி இராசையா ( ராசா) 08.12.2015 காலமானார்.

அன்னார் புவனராணியின் அன்புக் கண வரும், வாசுகி (அமெரிக்கா), உமையாள் (இந்தியா), நிறஞ்சன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பார்த்தீபன், வேணுகோபால், குமுதா ஆகியோரின் அன்பு மாமனும், வைஸ்ணவி, ஞானவி, கிரிசாந், கிரிசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.12.2015 ஞாயிற்றுக்கிழமை அமெரிக்காவில் நடைபெறும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சகோதரி
பவளம்மா அளவெட்டி.
0771594427

(66918) (10.17)



### திருமதி
### வேதநாயகியம்மா இராசநாயகம்



கொல்லங்கலட்டி பெரியா விடையைப் பிறப்பிடமாகவும், பன் னாலை தெல்லிப்பழையை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி வேத நாயகியம்மா இராசநாயகம் நேற்று (10.12.2015) வியாழக்கிழமை சிவ பதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான சீனிவாசகம்- அன்னப் பிள்ளை தம்பதியரின் சிரேஸ்ர மக ளும், சீனித்தம்பி-தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற இராசநாயகத்தின் மனைவியும், மனோன்மணி, மகேஸ் வரி, காலஞ்சென்றவர்களான சிவனேஸ்வரலிங்கம், தணிகாசலம் ஆகி யோரின் சகோதரியும், சிவகணேசலிங்கம், சுசீலாதேவி ஆகியோரின் அன்புத் தாயும், புஸ்பகலா, வெற்றிவேல், மயூரன் ஆகியோரின் மாமியும், பிரபாகரன், பிரபா ஆகியோரின் பெரிய தாயும் பிரம்மினி, லக்ஷ்மினி, வைஷ்ணவி, தர்ஷா, நிரோஜா, அபிஷாகினி, அக்ஷாயினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2015) வெள்ளிக் கிழமை 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக் கொள்ளவும்.

பன்னாலை,
தெல்லிப்பழை.

(66919) (10.17)

தகவல்: குடும்பத்தினர்.
021 205 9712



### இளையதம்பி இராசையா



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வடலியடைப்பை வதிவிடமாகவும் தற் போது ஐக்கிய அமெரிக்காவை வசிப்பிட மாகவும் கொண்ட இளையதம்பி இராசையா 08.12.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத் துரை ஞானம்மா தம்பதியரின் பாசமிகு மரு மகனும், புவனராணியின் அன்புக் கண வரும், வாசுகி (USA), உமையாள் (இலங்கை), நிரஞ்சன் (கனடா) ஆகி யோரின் பாசமிகு தந்தையும், பார்த்தீபன்,வேணுகோபால், குமுதா ஆகியோரின் அன்பு மாமனும், வைஷ்ணவி, ஜானவி, கிர்சாந், கீதன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற இராசம்மா, காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் பவளம்மா, காலஞ்சென்ற தருமரத்தினம் மற் றும் நாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற மகேந்தி ரன் மற்றும் தெய்வேந்திரன், புவனேந்திரன், விமலேந்திரன், புஸ்பராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (12.12.2015) சனிக்கிழமை மாலை Frederick Funeral Home, New York, USA இல் பார்வைக்கு வைக்கப்பட்டு, 13.12.2015 ஞாயிற்றுக்கிழமை காலை St. Michael's Cemetery, New York, USA இல் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு:
வாசுகி (மகள்) 001 718 347 0928
உமையாள் (மகள்) 077 921 3854
நிரஞ்சன் (மகன்) 001 416 917 0487

தகவல்:
குடும்பத்தினர்.
(66902) (10.17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேரத்தின் சுழல் எடுபடவில்லை முதல் நாளில் நியூசி. ஆதிக்கம்



நியூசிலாந்து - இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் நேற்று ஆரம்பமானது. முதலில் துடுப்பெடுத்தாடிவரும் நியூசிலாந்து நாள் முடிவில் 409-8 என்று வலுவான நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மத்தியூஸ் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தார். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் ஓர் அரைச் சதத்தையேனும் பதிவு செய்யாத குப்தில் தொடர்ந்தும் அணியில் நீடித்தார். குப்தில் அணியில் தொடர்வதா இல்லையா என்பதற்கான இறுதி வாய்ப்பு இலங்கைக்கு எதிரான தொடர் என்ற காரணத்தினால் ஆரம்பம்முதல் தனது இருப்பை உறுதி செய்ய முனைப்புக்காட்டினார். மத்தியூசின் வியூகத்தில் பெரிதளவு தாக்கம் இல்லை. கிட்டத்தட்ட ஒருநாள் ஆட்டங்களின் பாணியிலேயே களத்தடுப்பை அமைத்திருந்தார். 56 ஓட்டங்களில் முதல் இலக்காக ஆட்டமிழந்தார் லாதம். வில்லியம்சனும் குப்திலும் இணைய வேடிக்கை பார்ப்பதைத் தவிர வேறொன்றும் செய்ய இயலாமல் இருந்தது இலங்கை. இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கடக்க அணி 150 ஓட்டங்களை எட்டியது. சதத்தை பதிவுசெய்தார் குப்தில். 12 ஓட்டங்களால் சதத்தை தவறவிட்டார் வில்லியம்சன்.

ஆஸியை ஆட்டிப்படைத்த றெய்லர் இலங்கைக்கு எதிராக முழுமையாக பத்து ஓட்டங்களையேனும் பெறவில்லை. வழக்கம் போல் டெஸ்ட் என்பதை மறந்து விளாசித்தள்ளினார் மக்கலம். ஒருநாள் பாணியில் ஓட்டங்கள் எகிற ஆரம்பித்தன. அரைச்சதம் கடந்து 57 பந்துகளில் 75 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார் மக்கலம். வற்லிங், சான்னெர் இருவரும் சொல்லிக்கொள்ளும் படியாக இல்லை. 156 ஓட்டங்களுடன் குப்திலை பவிலியனுக்கு அனுப்பினார் மத்தியூஸ். சவுத்தியை வீழ்த்தினார் லக்மல். சவுத்தியுடன் நியூசியின் துடுப்பாட்ட வரிசை முடிவுகண்டது. களத்தில் நிற்கும் பிரேஸ்வெல்லை வீழ்த்திவிட்டால் நியூசிலாந்து ஆட்டத்தை இடை நிறுத்தும் அல்லது ஒருசில பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழக்கும் என்ற நிலைமை. நெருக்கடியில் தடுமாறிக் கொண்டிருந்த பிரேஸ்வெல்லுக்கு ஒரே பந்துப்பரிமாற்றத்தில் தொடர்ந்து மூன்று பந்துகளை முழுமையாக வீசி வாங்கிக்கட்டினார் சமீர. பிரேஸ்வெல்லின் ஆட்டத்தில் பதற்றம் இல்லை. வாக்நெரை ஒருமுனையில் வைத்து சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்தார். 90 பந்துப் பரிமாற்றங்களும் முடிய நியூசிலாந்து 409-8 என்ற நிலையில் உள்ளது. பிரேஸ்வெல் 32 ஓட்டங்களுடனும் வாக்நெர் ஓட்டங்களைப் பெறாமலும் களத்தில் உள்ளனர். பந்துவீச்சில் இலங்கை சார்பாக லக்மல், பிரதீப், சமீர மூவரும் தலா இரு இலக்குகளையும் மத்தியூஸ். சிறிவர்தன இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட கேரத் 19 பந்துப்பரிமாற்றங்கள் வீசி ஓர் இலக்கைத்தானும் கைப்பற்றவில்லை. (ம)

> "மத்தியூசின் வியூகத்தில் பெரிதளவு தாக்கம் இல்லை. கிட்டத்தட்ட ஒருநாள் ஆட்டங்களின் பாணியிலேயே களத்தடுப்பை அமைத்திருந்தார்."



## தலைமையை ஏற்காத கப்டன் கூல்

உள்ளூர் தொடரில் 8 ஆண்டுகளுக்குப் பிறகு முதன்முறையாக பங்கேற்கும் டோனி ஜார்க்கண்ட் அணியின் தலைவர் பொறுப்பை ஏற்க மறுத்துள்ளார்.

விஜய் ஹசாரே கிண்ணத்துக்காக இந்திய மாநிலங்களுக்கு இடையில் நடத்தப்படும் தொடர் நேற்று ஆரம்பமானது.

இதில் ஜார்க்கண்ட் அணிக்காக டோனி விளையாடுகிறார். இந்திய அணியின் தலைவரான டோனியை ஜார்க்கண்ட் அணியின் தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று நிர்வாகம் கேட்டுக்கொண்டது. ஆனால் டொனி அந்தப்பொறுப்பை ஏற்க மறுத்துள்ளார். இதனால் இந்த அணிக்கு வருண் ஆரோன் தலைவராகச் செயற்படுகிறார். (ம)

# திட்டம் இல்லாத தீவுகள் ஆட்டிப்படைக்கும் ஆஸி.

ஆஸ்திரேலியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் நேற்று ஆஸியின் ஓவல் மைதானத்தில் ஆரம்பமானது. நாள் முடிவில் ஆஸ்திரேலியா 438-3 என்று மிகவும் பலமான நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. தீவுகளின் பந்துவீச்சுப் பயிற்சியாளரான அம்புரோஸ் ஆஸியை எச்சரித்தற்கு ஏற்ப தீவுகள் பலமான அணியல்ல.

இன்னும் சொல்லப்போனால் அந்த அணியின் தலைவரான கோல்டரிடம் ஆஸியை விழுத்தக்கூடிய திட்டங்கள் ஏதும் இல்லை. டெஸ்ட்டுக்கு உரிய களத்தடுப்பு வியூகம் அமைக்கப்படாததால் சர்வசாதாரணமாக அடித்தாடினார் வோர்ணர். பேர்ண்ஸின் ஆட்டத்திலும் சீராக சராசரியைப் பேணும் தன்மை எதிரொலித்தது. இலக் [illegible] டியது ஆஸ்திரேலியா. 33 ஓட்டங்களுடன் போல்ட் ஆனார் பேர்ண்ஸ். சிமித் 10 ஓட்டங்களுடன் வரிக்கனின் பந்தில் வீழ்ந்தார். 61 பந்துகளில் அரைச்சதம் கடந்து வோர்ணர் ஆட்டமிழக்க வோக்ஸ் - ஷோன்மார்ஷ் இணை களத்தில் மிரட்டத் தொடங்கியது.

ஒரு பந்துப்பரிமாற்றத்துக்கு 5 ஓட்டங்கள் என்ற சராசரியில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். சிக்சர்கள் இல்லை, ஆனால் பவுண்டரிகள் தாராளமாக இடம் பெற்றிருந்தன. றெய்லரின் பந்துக்கு ஆரம்பத்தில் அதிக ஓட்டங்கள் பெறப்பட்டதால் வோக்ஸ் - ஷோன்மார்ஷ் இணை ஆட்டத்தின்போது அவரைப் பரிசீலித்துப் பார்க்க கோல்டர் முன்வரவில்லை. றோச்சின் நிலைமையும் இதுவேதான். பகுதிநேரப் பந்துவீச்சாளர்களுக்குத் தொடர்ந்து பந்துப்பரிமாற்றங்கள் வழங்கப்பட வாய்ப்பை கச்சிதமாகப் பயன்படுத்தி இருவரும் சதம் கடந்தனர். பவுண்டரியுடன் 150 ஓட்டங்களைக் கடந்தார் வோக்ஸ். இலக்குகள் சரிக்கப்படுவதாக இல்லை. நாள் முடிவில் ஆஸ்திரேலியா 438-3. வோக்ஸ் 174 ஓட்டங்களுடனும் மார்ஸ் 139 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். பந்துவீச்சில் வரிக்கன் 2 இலக்குகளையும் கபிரியேல் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)







# மகேலவுக்கு கௌரவம்

இங்கிலாந்தின் மெரிலெபோன் கழகம் மகேலவுக்கு வாழ்நாள் உறுப்பினர் அந்தஸ்து வழங்கிக் கௌரவித்துள்ளது.

மகேல இங்கிலாந்து அணியின் இடைக்கால துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராகச் செயற்பட்டு வருகிறார். அடுத்த வருடம் இந்தியாவில் ரி-20 உலகக்கிண்ணம் நடைபெறவுள்ளதாலேயே இந்திய ஆடுகளங்களைப் பற்றி நன்கறிந்த மகேலவை பயிற்றுவிப்பாளராக இங்கிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை நியமித்துள்ளதாகக் கருதப்படுகிறது.

இந்த நிலையில் இங்கிலாந்தின் முக்கிய கிரிக்கெட் கழகங்களில் ஒன்றான மெரிலெபோன் மகேலவுக்கு வாழ்நாள் அந்தஸ்து வழங்கிக் கௌரவித்துள்ளது. இதுகுறித்து மெரிலெபோன் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மகேல ஓர் அற்புதமான வீரர். அனைத்து விதமான ஆட்டங்களிலும் சிறப்பாக செயற்படக்கூடியவர். இங்கிலாந்தின் தடுப்பாட்ட பயிற்சியாளராகவும் செயற்பட்டு வருகிறார். இதனாலேயே அவருக்கு இந்தக் கௌரவம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## இந்தியா – பாக். தொடர் இல்லை

இந்திய அணி எங்களுடன் விளையாடாது என்றும் அப்படியே விளையாட ஒப்புக்கொண்டாலும் தொடரை நடத்துவதற்கான கால அவகாசம் இல்லை என்றும் தெரிவித்துள்ளார் பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவரான சகாரியர் கான்.

2007ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தியா – பாகிஸ்தான் தொடர் நடைபெறவில்லை. ஆனால் இந்த மாதத் தொடக்கத்தில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் தொடரை நடத்த உடன்பாடு மேற்கொள்ளப்பட்டது. எல்லையில் பாகிஸ்தான் அத்துமீறியதால் தொடரை நடத்துவதில் இருந்து பின்வாங்கியது இந்தியா. நீண்ட இழுபறிக்குப் பின்னர் தொடரை மூன்றாவது நாட்டில் நடத்த உடன்பட்ட இந்தியா மூன்றாவது நாடாக ஐக்கிய அரபு இராச்சியம் இருக்கக் கூடாது என்றும் வலியுறுத்தியது. இதற்கு பாகிஸ்தான் தொடரை நடத்த முன்வந்தது. இதற்கு பாகிஸ்தான் அரசும் அனுமதி கொடுத்தது. ஆனால் இந்திய மத்திய அரசு அனுமதி கொடுக்காததால் இந்தியா பாகிஸ்தான் தொடர் தொடர்ந்தும் கேள்விக்குறியில் இருந்தது. இந்த நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை, தொடரை நடத்துவதற்கு இந்தியா முன்வந்தாலும் போதிய கால அவகாசம் தங்களிடம் இல்லை என்று தெரிவித்துள்ளது. ஏனெனில் கடைசியாக தொடரை இந்தியா நடத்தியதால் இம்முறை உரிமம் பாகிஸ்தானிடமே உண்டு. (ம)

## ஸ்ராக் சந்தேகம்

அடுத்தவருடம் நடைபெறவுள்ள ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் ஆஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளரான ஸ்ராக் விளையாடுவதில் சந்தேகமாகியுள்ளது.

இந்தியாவில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடருக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் உலகக்கிண்ணத் தொடரின் முதலாவது ஆட்டம் வான்கடே மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. இந்தத் தொடரில் ஸ்ராக் விளையாடுவது சந்தேகம் என்று தெரிவித்துள்ளது ஆஸ்திரேலிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை.

நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ஸ்ராக் கணுக்காலில் காயமடைந்தார். ஆரம்பத்தில் காயம் பெரிதளவில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் தற்பொழுது சத்திரசிகிச்சை செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனாலேயே ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் ஸ்ராக் விளையாடுவது சந்தேகமாகியுள்ளது. (ம)

# கால்பந்து தேசிய அணியில் இடம்பிடித்த யாழ். மாவட்ட வீரர்கள் கௌரவிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், டிசெ. 11

16 வயதுக்கு உட்பட்ட கால்பந்தாட்ட தேசிய அணியில் இடம்பிடித்த யாழ். மாவட்ட வீரர்கள் நேற்றைய தினம் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

16 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடர் அண்மையில் பங்களாதேஷில் நடைபெற்றது. இந்தத் தொடருக்கான இலங்கை தேசிய அணியில் யாழ். மத்திய கல்லூரியின் றே.றேம்சன், சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் கே.சாந்தன் இருவரும் இடம்பிடித்திருந்தனர்.

புனித நீக்கிலார் திருவிழாவை முன்னிட்டு நாவாந்துறை சென். நீக்கிலஸ் சனசமூக நிலையத்தால் இவர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் கௌரவிக்கப்பட்டுள்ளனர். கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்களில் றேம்சன் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்றார். சாந்தன் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்தவர்.

நாவாந்துறை சென்.நீக்கிலஸ் சனசமூக நிலையத்தின் தலைவர் ஆ.தயான் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நாவாந்துறை பங்குதந்தை சோபன் கலந்து கொண்டார். விருந்தினர்களாக யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி மோகனதாஸ், யாழ். கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ்.அன்ரனிப்பிள்ளை, வடமாகாண சபை உறுப்பினரும் விளையாட்டுத்துறை இணைப்பாளருமான இ.ஆனல்ட், ஜெ-84 கிராம சேவகர் சர்வேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம)





# மாகாண மட்ட மேசைப்பந்தாட்டத் தொடர் ஆனைக்கோட்டை றோ.க.த.க. அசத்தல்

கரணவாய், டிசெ. 11

வடமாகாண மேசைப்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்ட தொடரில் வீரவீராங்கனைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் அவர்களுக்கான தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதன் 15வயதுக்கு உட்பட்ட பிரிவில் ஆனைக்கோட்டை றோ.க.த.க. மாணவர்கள் இருபிரிவிலும் முதலிடம் பிடித்துள்ளனர்.

**ஆண்கள் பிரிவு**

ஆண்களில் பிரிவில் ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலையின் மாணவனான எஸ்.ஜெசிகரன் 25 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பிடித்துள்ளார். எஸ்.கேசவன் (ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை) இரண்டாம் இடத்தையும், எஸ். துஸ்யந்தன்; (ஆனைக்கோட்டை றோ.க. த.க. பாடசாலை) மூன்றாம் இடத்தையும், எஸ்.டனுஸ் (கொக்குவில் இந்துக் கல்லூரி) நான்காம் இடத்தையும், எஸ்.தட்சாயினன் (யாழ். மத்திய கல்லூரி) ஐந்தாம் இடத்தையும், எஸ். சாயிராம் (யாழ். மத்திய கல்லூரி) ஆறாம் இடத்தையும், எஸ்.டிலக்சன்; (அராலி சரஸ்வதி வித்தியாலயம்) ஏழாம் இடத்தையும், எஸ்.கவிப்பிரகாஸ் (ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை) எட்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

**பெண்கள் பிரிவு**

பெண்கள் பிரிவில் ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலையைச் சேர்ந்த எஸ்.அனோசிகா 25 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பிடித்துள்ளார்.





எஸ்.நிதுசரி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) இரண்டாம் இடத்தையும், எஸ்.ஜென்சிகா (ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை) மூன்றாம் இடத்தையும், எஸ்.திவ்யா (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை) நான்காம் இடத்தையும், எஸ்.கம்சிகா (ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை) ஐந்தாம் இடத்தையும், எஸ்.நிதுசா (கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆறாம் இடத்தையும், எஸ்.சங்கீதா (அராலி சரஸ்வதி வித்தியாலயம்) ஏழாம் இடத்தையும், எஸ்.சுதர்சனா (அராலி சரஸ்வதி வித்தியாலயம்) எட்டாம் இடத்தையும் பிடித்துள்ளனர். (ம-108)

## வடமாகாண கராத்தேத் தொடரில் வவுனியாவுக்கு தங்கப் பதக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 11

வடமாகாண கராத்தே சம்மேளனத்தால் நடத்தப்பட்ட கராத்தே தொடரில் 7வயது காட்டாப் பிரிவில் வவுனியா மாவட்டத் துக்கு தங்கப்பதக்கம் கிடைத் துள்ளது. யாழ். அடைக்கல அன்னை ஆலய மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இந்தத் தொடரில் வவுனியா மாவட்டத்தினை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.சரன் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார். வெள்ளிப்பதக்கத்தை யாழ். மாவட்டத்தின் சார்பாக களமிறங்கிய பிரிதியனும் வெண்கலப் பதக்கத்தை வவுனியா மாவட்டத்தின் கிசோந்தும் யாழ். மாவட்டத்தின் என்.கவிக்குமாரும் கைப்பற்றினர்.

21வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கான காட்டா தொடரின் பெண்கள் பிரிவில் தங்கம் வென்ற திருமதி மாலதி முரளியின் மகனே 7வயதுப்பிரிவில் வெள்ளி வென்ற பிரிதியன். இவர்கள் இருவரும் பருத்தித்துறை தற்காப்பு கலையகத்தால் நடத்தப்பட்ட கராத்தே தொடரிலும் தங்கப்பதக்கம் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-23)



# இலங்கையைப் புகழும் மக்கலம்



இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் நேற்று ஆரம்பமானது. ஆட்டத்தின் முன்பாக நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து இலங்கை அணியை புகழ்ந்து தள்ளியுள்ளார் நியூசிலாந்தின் தலைவரான மக்கலம்.

மக்கலம் தெரிவிக்கையில் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர்களைக் குறைத்து மதிப்பிடப்படுகிறார்கள். அவர்களுக்கு அனுபவம் குறைவுதான். ஆனால் மிகவும் உயர்தரமான வேகப்பந்து வீச்சாளர்களாக அவர்கள் காணப்படுகிறார்கள். குமார் சங்கக்கார, ஜெயவர்தன ஆகியோரின் ஓய்வின் பின்னர் இலங்கையின் துடுப்பாட்ட வரிசையில் அனுபவமின்மை காணப்படுகின்ற போதிலும், அணியின் சிரேஷ்ட வீரர்களான அஞ்சலோ மத்தியூஸ், சந்திமல் இருவரும் ஆட்டத்தின் போக்கை மாற்றும் வல்லமை படைத்தவர்கள். மொத்தத்தில் இந்த அணியை மிகவும் பலமான அணியென்றே நான் கருதுகிறேன் – என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச ஸ்குவாஷ் தொடர் திடீரென கைவிடப்பட்டுள்ளது

பெண்களுக்கான சர்வதேச ஸ்குவாஷ் தொடர் பாதுகாப்பு காரணங்களுக்காக கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மலேசியாவின் தலைநகர் கோலாலம் பூரில் ஸ்குவாஷ் தொடர் இன்று நடைபெறத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் காரணம் குறிப்பிடப்படாமல் திடீரென கைவிடப்பட்டுள்ளது. பாதுகாப்பு காரணத்தாலேயே தொடர் கைவிடப்பட்டதாக கருதப்படுகிறது. (ம)

# பீற்றர்சனின் விளாசலில் டொல்பின்ஸ் இறுதியில்



தென்னாபிரிக்கா ரி–20 தொடரின் அரையிறுதி ஆட்டமொன்றில் பீற்றர்சனின் அதிரடியில் அவரது அணியான டொல்பின்ஸ் இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளது.

அரையிறுதி ஆட்டத்தில் டொல்பின்ஸ் – கேப் கோப்ராஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டொல்பின்ஸ் முதலில் துடுப்பெடுத்தாடியது. ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய டெல்பேர்ட், வான் வைக் இருவரும் அதிரடியாக விளையாடினார்கள். டெல்போர்ட் 37 பந்தில் 4 பவுண்டரிகள், 4 சிக்சர்களுடன் 55 ஓட்டங்களைக் குவித்தார். வான் வைக் 49 பந்தில் 6 பவுண்டரி, ஒரு சிக்சருடன் 57 ஓட்டங்களைச் சேர்த்தார். அடித்தளம் பலமாக அமைய

அதன்பின் வந்த கெவின் பீற்றர்சன் அதிரடியாக விளையாடி 8 பந்தில்தலா இரண்டுபவுண்டரிகள், இரண்டு சிக்சர்களுடன் 27 ஓட்டங்கள் எடுத்தார். இதனால் டொல்பின்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகள் இழப்புக்கு 178 ஓட்டங்கள் குவித்தது.

179 ஓட்டங்கள் குவித்தால் வெற்றி என்ற இலக்குடன் கேப் கோப்ராஸ் களமிறங்கியது. இறுதிவரை போராடியபோதிலும் டொல்பின்ஸிடம் இருந்து வெற்றியைப் பறித்துவிட முடியவில்லை. முடிவில் டொல்பின்ஸ் 10 ஓட்டங்களின் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. பீற்றர்சன் களத்தடுப்பிலும், பந்துவீச்சிலும் சிறப்பாகச் செயற்பட்டதால் ஆட்டநாயகனானார். (ம)

## அறிவிக்கப்பட்டது தென்னாபிரிக்க அணி இங்கிலாந்துக்கு எதிரான தொடருக்காக

இங்கிலாந்து – தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் இரண்டு ஆட்டங்களுக்குமான தென்னாபிரிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகிறது.



ஹொக், விலாஸ் இருவரும் நீக்கப்பட்டமையால் முதலிரு டெஸ்டிலும் வில்லியர்ஸ் இலக்குக் காப்பாளராக செயற்படுவார். வேகப்பந்து வீச்சாளர்களாக டேல் ஸ்ரெயின், மோர்கல், கைல் அபோட், ரபடா ஆகியோர் இடம்பெற்றுள்ளதோடு சுழற்பந்து வீச்சாளர்களாக டேன் பீடிட் மட்டுமே இடம்பெற்றுள்ளார். தாகிர் நீக்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்க அணியின் விவரம் – அம்லா (தலைவர்), வில்லியர்ஸ் (இலக்குக் காப்பாளர்), அபோட், பவுமா, டுமினி, பிளா சிஸ், எல்கர், மோர் கல், பீடிட், ரபடா, ரொஸோ, ஸ்ரெயின், ஸ்ரியான் (ம)

## மரண அறிவித்தல்கள்

### கதிரவேலு-பாலசுப்பிரமணியம்

(ஓய்வுநிலை எழுதுவினைஞர்)



கல்வயலைப் பிறப்பிடமாகவும் மீசாலை கல்வயலை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு பாலசுப்பிரமணியம் நேற்று (10.12.2015) வியாழக்கிழமை மாலை 7.00 மணியளவில் இறைவன் திருவடி நிலை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு-நல்லம்மா தம்பதியரின் அன்புமகனும், சிதம்பரப்பிள்ளை-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், பா.கமலாதேவியின் (சங்கீதரத்தினம்) அன்புக் கணவரும், க.முருகையாவின் (ஆங்கில ஆசிரியர்) அன்புச் சகோதரனும், வி. பொன்னம்பலம், வே. முருகதாஸன் (பொறியியலாளர்) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும், க.கனகசபை (நில அளவையாளர்), க. இரத்தினேஸ்வரன் (களஞ்சிய பொறுப்பாளர்) ஆகியோரின் சகலனும், மு. இராசாதேவி, பொ.சொர்ணாம்பாள், க.விமலா தேவி, இ. சிவயோகராணி (விஞ்ஞான ஆசிரியை) மு. இந்திராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பொ. அம்பிகைபாலன், முருகவேல் (பொறியியலாளர்) சிறிஸ்கந்தவேள் (பொறியியலாளர்) இளங்கோவேள் (மருத்துவர் யாழ். வைத்தியசாலை), எழில்வேள் (பொறியியலாளர்) நீலாம்பரி (ஜேர்மனி) நீலாட்சணி, நீலாங்கனி, நீலாம்பரன், நீலாஜி, சிவேஸ்வரன் கிருஷ்ணாகினி ஆகியோரின் அன்பு பெரிய தந்தையும், ஹரிப்பிரசாத், பைரவி, குந்தகி, பார்கவி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2015) வெள்ளிக்கிழமை அவரின் கல்வயல் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2.00 மணிக்கு தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


நுணாவில்-கல்வயல் வீதி,
கல்வயல், சாவகச்சேரி
077 3141 099, 0770162137

தகவல்:
க.முருகையா (சகோதரன்)
(ஆ.ஆசிரியர்)

(C/20753) (10.17)

### செல்லர் பரமனாதன் ஜீவானந்தம்

(ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்
சென்.ஜோன்ஸ் கல்லூரி,
யாழ்ப்பாணம்.)



அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் பரமனாதன் ஜீவானந்தம் (ஜீவானந்தம் மாஸ்டர்) நேற்று (10.12.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி செல்லர்-எஸ்தர் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பீற்றர் ஆறுமுகம்- சீதேவி தம்பதியரின் மன்பு மருமகனும், சிவாம்பிகையின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், Dr. பீற்றர் ஜெபநேசன் (வைத்தியர், அரசினர் வைத்தியசாலை-வவுனியா), ஜேம்ஸ் அருள்நேசன் (முன்னாள் உத்தியோகத்தர் Hatton National Bank T.P:0019292315276 - USA), ஜோன் ஜீவநேசன் (ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர்), அன்று திவ்வியநேசன் (வீதி அபிவிருத்தி திணைக்களம்-கிளிநொச்சி), மேரி ஜெபரூபி (ஆசிரியை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), எலிசபெத் இந்திரரூபி (ஆசிரியை- சென்.ஜோன்ஸ் கல்லூரி-யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுமதி கிறேஸ் ஜெபநேசன், காலஞ்சென்ற மஞ்சுளா அருள்நேசன் மற்றும் ஷிராணி ஜீவநேசன், சலோதிஸ்கா திவ்வியநேசன், ஜெயரூபன் (தொழில்நுட்பவியலாளர்) அருட்பணி தேவமித்திரன் (உப அதிபர் யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான ஜோசப் ஜெபக்குமார், போல் அருட்குமார் மற்றும் டெபோறா ஜெபசுகிர்தா (இரம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்-வவுனியா) ஜோசுவா ஜெபப்பிரகாசன் (வவுனியா மத்திய மகா வித்தியாலயம்), எஸ்தர் ஜெபசுதந்திரனி, (இரம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), ஜோன் ஜெபவியூகன் (வவுனியா மத்திய மகா வித்தியாலயம்), சாம் தேவக்குமார் (கொழும்பு), சொலமன் பிறேமக்குமார் (மருத்துவபீடம், கொழும்பு பல்கலைக்கழகம்) ஜஸ்டின் ஜெபகிருஷாந்த் (பழைய மாணவர் சென். ஜோன்ஸ் கல்லூரி), வோல்ட்டா ஜெபபிரசாந் (மாணவர் சென். ஜோன்ஸ் கல்லூரி), ஜீவித்தன் ஜீவானந்தம் (பழைய மாணவர் சென். தோமஸ் கல்லூரி-கொழும்பு), சலோனிக்கா ஜீவானந்தம் (பிஷப்ஸ் கல்லூரி-கொழும்பு) ஆகியோரின் அன்பு பேரனும், காலஞ்சென்ற பரிமளசிங்கம் (கட்டடக் கலைஞர்) காலஞ்சென்ற ரெபேக்கா தர்மலிங்கம் (தலைமை ஆசிரியை) துரைசிங்கம் (ஓய்வுபெற்ற நிர்வாக அதிகாரி) காலஞ்சென்ற இரத்தினசிங்கம் (நில அளவைத் திணைக்களம்) சகோ.சாம் தேவபாலசிங்கம் (இயக்குநர் இலங்கை இல்லந்தோறும் நற்செய்தி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை எதிர்வரும் 13.12.2015 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பரி. யாக்கோபு ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

37, கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(f/20752) (10.17)

விசேட கருத்தரங்குகள்
சகல பரீட்சைகளுக்கும் உரிய எதிர்பார்க்கை வழிகாட்டல்
வடமாகாண விளையாட்டு உத்தியோகத்தர்
சனி, ஞாயிறு, பூரன் காலை 9.00 முதல் 4.00 மணிவரை
திறந்த பல்கலைக்கழக சட்டமாணி
பிரதி சனி பி.ப. 1.00 முதல் 5.00 மணிவரை
வடமாகாண ஆசிரியர்
சனி, ஞாயிறு காலை 10.00 மணிவரை
வடமாகாண அலுவலர்
பிரதி ஞாயிறு ஒரு மணி வரை
T.P: 0766 883394

ஈஸ்வா டிஜிற்றல்பிறஸ்
பணிநிலை வேண்டுகை
தட்டெழுத்தாளர், போட்டோக் கொப்பி இயக்குநர் ஆகிய வெற்றிடங்களுக்கு பணியாளர்கள் தேவை.
தொடர்பு:
174, இராமநாதன் வீதி, திருநெல்வேலி.
(யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்துக்கு முன்பாக
T.P: 077 691 4060, 077 774 7926

விசேட இறுதிக் கருத்தரங்கு
Dec-19இல் நடைபெறவுள்ள
நாவலர்
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்.நகர்.
T.P: 0774696695

யாழ். புத்தகசாலையின்
2016 ஆம் புதிய கல்வி ஆண்டுக்கான மாபெரும் மலிவு விற்பனை
அனைத்து புத்தகங்களுக்கும்
10% முதல் 20% வரை விசேட விலைக்கழிவும்
இச்சலுகை 11.12.2015 முதல் 15.01.2016 வரை மட்டுமே
காகிதாதிகள், எழுது கருவிகள், அப்பியாசக் கொப்பிகளுக்கு
10% முதல் 40% வரை விசேட விலைக்கழிவு.
வாரத்தில் அனைத்து நாள்களும்
காலை 8.00 - இரவு 8.00 மணிவரை திறந்திருக்கும்
யாழ். புத்தகசாலை
கனகபுரம் விளையாட்டுகழக சந்தி, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
(நண்பர்கள் விடுதிக்கு முன்னால்)
T.P: 021 221 7874, 077 834 9507.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
(வெளிவாரி)
புதிய பாடத்திட்டத்திற்கமைவாக வெளிவாரி பட்டப்படிப்பிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
A/Lஇல் கலை, வர்த்தகம், கணிதம், உயிரியல் பிரிவுகளில் 3 பாடங்களிலும் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்.
BA 1st Year, BA 2nd Year, BA Final என்றவாறு கற்கை நெறி 3 ஆண்டுகள் அமையும்.
யாழ்நகரின் முன்னணி விரிவுரையாளர்களினால் விரிவுரைகள் நடத்தப்படும்.
புதிய பாடத்திட்டத்திற்கான விரிவுரைகள் 12.12.2015 சனி காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.
விவரங்களுக்கு: நாவலர் பட்டப்படிப்புக் கல்லூரி
ஆனைப்பந்தி, யாழ் நகர். T.P - 0774696695

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
புதிய கல்வியாண்டு - 2016
O/L EVENING CLASS
தரம் 10, 9, 8, 7, 6
ஆரம்பம் 12.12.2015 (09 மணி - சனி)

| | | | |
|---|---|---|---|
| Math | விக்கி, சுதாகரன் | Sci | தேவா, நிரோஜன், ஜெயவதனன் |
| Eng | விஸ்வநாதன், செல்வரட்ணம் | Tam | சபேஷன், சசிரூபன் |
| His | பார்தீபன், கமல் | Reli | N.T.தரன், சசிரூபன் |
| Civs/Geo | கமல் | Com | சுரேந்திரன் |

42 ஆவது வருட சேவையில் பல மேதைகளை உருவாக்கிய நிறுவனம்
கற்பித்தல்கற்றல் நிறைந்த அனுபவங்களை கொண்ட ஆசிரியர் குழாம்
வாரத்தில் 6 நாள்களும் கணித, விஞ்ஞான வகுப்புக்கள் நடைபெறும்
அனுமதிகள் இன்று முதல்
(c/20586)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.